padippakam

# மக்கள் களம்

# 6

நான் காணும் முகங்களில்
மானுடம் இல்லை

என் காதலிலும் புன்னகையிலும்
உண்மை இல்லை

எனது வாழ்க்கை
களவாடப் பட்டது

எனது புன்னகை
கைது செய்யப்பட்டது

என்னில் பிறரையும்
பிறரில் என்னையும்

காணும் வாழ்க்கையைக்
கைவசப் படுத்தவே

போராட வேண்டும் என
நான் புரிந்து கொள்கிறேன்

- இன்குலாப்

(கிழக்கும் பின் தொடரும்)

லை • இலக்கியம் -
அரசியல்

படிப்பகம்

padippakam

"நூறு பூக்கள் மலரட்டும் நூறு கருத்துககள் முட்டி மோதட்டும்"

மக்கள்
தளம்
6
செப் - அக்டோபர் 1995
இரு மாத இதழ்
ஆசிரியர் குழு:
உமா சந்திரன்
பாண்டியன்
மதன்
நாகரத்தினம்
ஆண்டுச் சந்தா ரூ 50-00
தனி இதழ் ரூ 10-00
வெளியிடுபவர்:
எஸ். எமாசந்திரன்
B 24 முருகேச நாயக்கர் மேன்சன்,
279, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை
சென்னை - 600 005.
அச்சாக்கம்:
அலைகள் அச்சகம்,
36, தெற்குசிவன் கோவில் தெரு
கோடம்பாக்கம், சென்னை - 24.
படைப்புகள்/சந்தா அனுப்பிட
மக்கள் தளம்
C/o சரவண பாலு பதிப்பகம்
4/117-அ, இந்திரா நகர்,
கீழ்பெரும்பாக்கம்
விழுப்புரம் - 602 605.

உள்ளே!

❑ சிறுகதை:
கெக்கலி

❑ விடுதலைப் பேராளிகள் தொடர்
சென்ற இதழ் தொடர்ச்சி

❑ கட்டுரை

1. அம்பேத்கரிசம்: ஆளும் வர்க்கத்தின் சித்தாந்தமா?
2. வன்முறை அரசியலும், புரட்சிகர சனநாயக இயக்கத்தின் தேவையும்
3. திரைப்படங்களும் மக்களின் சமூக உளவியலும்
4. தாழ்த்தப்பட்டோர் அமைப்புகள் பலவாய் பிரிந்து நிற்பதற்கான காரணங்கள்.
5. ஏர்னஸ்டோ செ குவேரா

❑ கவிதை

1. ஜப்பானில் மழை பெய்தால்
2. உண்மையே வெளியேறு!
3. விளைவு
4. மகளுக்கு
5. பிரகடனம்
6. அவனுடைய இரண்டாவது வாழ்க்கை

## அன்பார்ந்த வாசகர்களே

மக்கள தளத்திற்க்கு நீங்கள் தொடர்ந்து தரும் ஆதரவிற்க்கு நன்றி. தொடர்ச்ச்சியாக நாங்கள் வெளியிடும் கட்டுரைகள் மீது விமர்சன கட்டுரைகளும் கடிதங்களும் எழுதி இந்த பத்திரிகையை ஒரு விவாத தளமாக மாற்ற முன்வரும்படி உங்களை அழைக்கிறோம்

***

பிரதமர் ரஜினியுடன் தொலைபேசியில் பேசினார். குமரி அனந்தன் ரஜினியுடன் தனியாக ஒரு மணி நேரம் பேசினார். ஊழல் ஆட்சியை ஒழிக்க

படிப்பகம்

padippakam

# அம்பேத்கரிசம் : ஆளும் வர்க்கத்தின் சித்தாந்தமா?

—கோ. கேசவன்

அம்பேத்கர் நூற்றாண்டு தொடங்கி அம்பேத்கர் குறித்த ஆய்வுகளும் அக்கறைகளும் அரசியல் அரங்கில் பெருத்தன. மண்டல் பரிந்துரைகள் வெளியிடல் (1990), அம்பேத்கர் நூற்றாண்டு (1991), பாபர் மசூதியை இந்து மதவாத சக்திகள் இடித்து நொறுக்குதல் (டிசம்பர் 6-1992), முலாயம்சிங்—கன்சிராம் ஆகியோரின் கூட்டணிக்கு உத்தரபிரதேச மாநில சட்ட சபையில் கிடைத்த பெரும்பான்மை (நவம்பர் 1993) ஆகியனவற்றைத் தொடர்ந்து தாழ்த்தப்பட்டோர்—பிற்படுத்தப் பட்டோர்—சிறுபான்மையோர் இணைந்த கூட்டணி வடிவங் களைப் பற்றிய விவாதங்களும் அரசியல் அரங்கில் பெருத் துள்ளன.

இவை தேர்தல் முறையை ஒப்புக்கொண்ட அரசியல் கட்சிகளில் மட்டுமின்றி தேர்தல் முறையைப் புறக்கணித்து சமூகப் புரட்சியை முன்வைக்கும் அரசியல் குழுக்கள் மத்தியிலும் பலத்த விவாதங்களைக் கிளப்பி உள்ளன. இந்தியாவில் இதுவரை கொண்டாடப்பட்ட எவரொருவரின் நூற்றாண்டை ஒட்டி நடத்தப்பட்ட விவாதங்களைவிட அம்பேத்கரின் நூற்றாண்டை ஒட்டி ஏற்பட்ட விவாதங்கள் அளவில் அதிகம் என்பது மட்டுமல்ல, தன்மையிலும் வேறுபட்டவையாகவும் விளங்கின.

தேர்தல் முறையை ஒப்புக்கொண்டவர்களும் அதை ஒப்புக் கொள்ளாதவர்களும் இத்தகைய பண்பு ரீதியில் வேறுபட்ட தளங்களிலான விவாதங்களில் ஈடுபடவேண்டிய தேவை இருக் கிறது. தேர்தல் முறை அரசியல்வாதிகளுக்கு மக்களின் சாதிய

படிப்பகம்

padippakam



உணர்வுகளைத் தேர்தல் காலங்களில் பயன்படுத்தி வாக்கு வேட்டையாட வேண்டிய தேவையுள்ளது. ஆயுதப் புரட்சியாளர்களுக்கோ அல்லது அதை இப்போது இரண்டாம் நிலைக்குத் தள்ளிவிட்டு மக்கள் அணிதிரட்டுதலை முன்வைக்கும் அரசியல் வாதிகளுக்கோ சாதியம் தீர்க்கப்பட வேண்டிய ஒரு சிக்கலாக உள்ளது. இன்னொரு காரணமும் உண்டு. அம்பேத்கரின் செயல் பாட்டுத் தளம் தாழ்த்தப்பட்ட சமூகமாக இருந்தது. 18 வயது அடைந்தவர்க்கு வாக்காளர் தகுதி கொடுக்கப்பெற்ற 1984க்குப் பின் தாழ்த்தப்பட்டோர் வாக்குகளைப் பெறுவதில் தன்னலஞ் சார்ந்த அக்கறை தேர்தல்முறை அரசியல்வாதிகட்கு கூடிற்று. தேர்தல் முறை தவிர்த்த அரசியல்வாதிகளுக்கு, தாழ்த்தப் பட்டோரே ஒடுக்கப்பட்ட சக்திகளுள் ஆகப் பெரும்பான்மை யினராக இருப்பதால், அவர்களை அணிதிரட்ட வேண்டிய அரசியல் அவசியம் உள்ளது.

தாழ்த்தப்பட்டோர் மீதான கவனக்குவிப்பு, சாதியத்தின் மீதான வன்மையான குறுக்கீடு என இரண்டும் இதில் உள்ளன. இவை இரண்டிலும் அழுத்தமான பார்வைகளை முன்வைத்தவர் அம்பேத்கர் என்ற விதத்தில் அவரது நூற்றாண்டு அனைவரையும் ஈர்த்ததில் வியப்பில்லை.

அம்பேத்கரியம் குறித்த ஆய்வுகள் பெருகிக்கொண்டிருக்கும் சூழலில் இந்தியப் பொதுவுடமைக் கட்சி மார்க்சிய லெனினியம் —செங்கொடி அமைப்பின் (CPI-ML- Red Flag) சார்பில் வெளி வரும் **ரெட் ஸ்டார்** இதழில் **தோழர் கே. என். இராமச்சந்திரன்** அவர்கள் அம்பேத்கரியம் குறித்து ஒரு கட்டுரை எழுதியுள்ளார். (Ambedkarism: Ideology for a New Ruling Class Alternative, June and July 1994). இது **நீண்ட பயணம்** தமிழ் இதழில் (மார்ச்— ஏப்ரல் 1995) வந்துள்ளது அம்பேத்கரியம் குறித்த கே. என். ஆரின் நிலைபாடுகளை விவாதத்துக்கு எடுத்துக்கொள் தலே இக்கட்டுரையின் மைய நோக்கம்.

## 1. கே. என். ஆர் கருத்துகள்

தோழர் கே.என்.ஆர். தம் கட்டுரையை இரண்டு பகுதி களாகப் பிரித்துள்ளார். முதல் பகுதி, டாக்டர் அம்பேத்கரைப் பற்றிய மதிப்பீடு. இரண்டாம் பகுதி, வெவ்வேறு 'பிராண்டு களில்' இருக்கும் அம்பேத்கரியத்தைக் குறித்த மதிப்பீடு.

படிப்பகம்

padippakam



அம்பேத்கர் மீதான புறநிலை மதிப்பீடு தேவை எனக் குறிப்பிட்டு, அவரின் பங்களிப்புகளில் ஏற்கத்தக்கனவும் (Positive) மறுக்கத்தக்கனவும் (Negative) உண்டு என முதலில் கே.என்.ஆர் கூறுகிறார். அவை கீழ்வருவன:

## ஏற்கத்தக்கன

அ) சாதிய அமைப்பின் அடிப்படையில் தாழ்த்தப்பட்ட மக்கள் மீதான சமூக ஒடுக்கு முறையை அம்பேத்கர் மைய விசயமாகக் கொண்டு வந்தார்.

ஆ) மிகவும் வெறுக்கத்தக்க சாதிய அமைப்பின் மூலமாக பரந்துபட்ட மக்கள் மீது மிக மோசமானதும் காட்டுமிராண்டித்தனமானதுமான சமூக ஒடுக்குதலை இந்த அடிப்படைவாத சனாதனக் கட்டமைப்பான்து கையாண்டு கொண்டு இருந்தது. அக்காலத்தில் தாழ்த்தப்பட்ட சமூகத்தின் சமூக மேம்பாட்டுக்காகவும் சுயமரியாதை மேம்பாட்டுக்காகவும் தேவைப்படுகிற சீர்திருத்தங்களுக்காகப் அம்பேத்கர் போராடினார். இதில் மேற்கு உலகத் தாராளவாத முதலாளியச் சிந்தனை அவரிடத்தில் செல்வாக்கு செலுத்திக் கொண்டிருந்தது.

இ) நிலத்தைத் தேசியமயமாக்கல், எல்லோரும் பொதுவாக சாகுபடி செய்தலுக்கு உகந்தவிதத்தில் விவசாயிகளுக்கு அதை வினியோகித்தல், மக்கள் நல்வாழ்வு, அரசாங்கத்தால் முக்கியத் தொழில்கள் தேசியமயமாக்கல் ஆகிய திட்டங்களை அம்பேத்கர் முன்வைத்தார்.

ஈ) சாதி ஒழிப்பு, மக்கள் நல்வாழ்வுக்குரிய திட்டங்கள் ஆகியவற்றை சட்டபூர்வமான வழிகளிலேயே அடைய இயலும் என அம்பேத்கர் குறிப்பிட்டார்.

இவை எல்லாம் அம்பேத்கரியத்தின் சாதகமான அம்சங்கள் எனக் கே.என்.ஆர்., கணித்து இவை காந்தியின் அணுகுமுறைகளுக்கு புரட்சிகரமான மாற்றாக அமையவில்லை என்கிறார்.

## மறுக்கத்தக்க பாதக அம்சங்கள்

### அ) ஏகாதிபத்தியம் மீதான அணுகுமுறை

இந்தியாவில் நிலவுடைமையையும் சாதிய அமைப்பையும் பாதுகாத்த பிரிட்டன் ஏகாதிபத்தியத்தை அம்பேத்கர்

படிப்பகம்

padippakam



எதிர்க்கவில்லை. சாதிய ஆதிக்க சிக்கலுக்குத் தீர்வு ஏற்படும்வரை பிரிட்டிஷ் ஆட்சி இருந்தாக வேண்டும் எனவும் அவர் விரும்பினார். ஏகாதிபத்தியம், தரகு அதிகார வர்க்க முதலாளியம், நிலப் பிரபுத்துவம் ஆகியன வற்றுக்கு சேவை செய்யும் இந்திய அரசைத் தூக்கி எறிவதன் வாயிலாகவும் புதிய சனநாயகப் புரட்சியின் வாயிலாகவும் மட்டுமே சாதிய அமைப்பு ஒழிக்கப்படும் என்பதை அவர் எப்போதும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை.

### ஆ) அரசியல் சட்ட ரீதியான அணுகுமுறை

அரசுக் கூட்டமைப்புக்கு உட்பட்ட அரசியல் சாசன வடிவிலான சீர்திருத்தங்கள் வாயிலாக ஒடுக்கப்பட்ட மக்களின் சிக்கல்கள் தீரும் என்பதில் எப்பொழுதும் அம்பேத்கர் உறுதியாக இருந்தார். அரசியல் சாசனத்துக்கு அப்பாற்பட்ட சமூக மாற்றத்துக்கான இயக்கங்களை அவர் புறக்கணித்தார். இது ஒடுக்கப்பட்ட மக்களிடையே ஒருவித மாயையை உருவாக்கப் பயன்பட்டது.

### இ) விவசாயப் புரட்சியின் மீதான அணுகுமுறை

தாழ்த்தப்பட்டவர்கள் விவசாயக் கூலிகளாகவும் வறிய விவசாயிகளாகவும் வர்க்க அளவில் இருப்பதால் அவர்களின் சமூக பொருளாதார பின்னடைவிற்கான அடிப்படைத் தீர்வு விவசாயப் புரட்சியில் உள்ளது. தாழ்த்தப்பட்டவர்கள் வர்க்க அமைப்புகளில் அணிதிரண்டு சாதியத் தடைகளை உடைத்தெறிந்து நிலச் சிக்கலைத் தீர்க்க முடியும். இதை அம்பேத்கர் ஒப்புக்கொள்ளவில்லை.

அம்பேத்கர் நிலங்களைத் தேசியமயமாக்குதலைக் குறிப்பிட்டார். ஆனால் காங்கிரசு, பெயரளவிலான நிலச்சீர்திருத்தத்துக்குக்கூட தயாராக இல்லை. ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம் ஆகியவற்றின் வாழ்க்கை பரஸ்பரம் பின்னிப் பிணைந்திருக்கின்றன. இந்த யதார்த்தத்தை அம்பேத்கர் ஏற்கவில்லை. ஆகவே அரசியல் சட்ட வடிவிலான சீர்திருத்த மாயைகளை தாழ்த்தப்பட்டோர் மத்தியில் உருவாக்கவே அவரால் முடிந்தது.

### ஈ) மதங்களின் மீதான அணுகுமுறை

இந்து சமயத்தின் மீதான அம்பேத்கரின் விமரிசனம் அதன் இயல்பான முடிவிற்குக் கொண்டு செல்லப்படவில்லை.

படிப்பகம்

padippakam



இரண்டாம் உலகப் போருக்குப்பின் மக்களை சனநாயகப் புரட்சியிலிருந்தும் சோசலிசப் புரட்சியிலிருந்தும் திசை திருப்புவதற்கு புதியகாலனிய ஆதிக்கக் கருவியாக மதங்கள் பயன்படுத்தப்பட்டன; மக்களை பிரித்தாளும் சூழ்ச்சி கையாளப்பட்டது. அம்பேத்கர் இத்தகைய யதார்த் தங்களை ஏற்றுக்கொள்ள மறுத்தார். இது புத்த சமயத் திற்கு அவரை மாறச் செய்துவிட்டது. அரசியலிலிருந்து சமயத்தைப் பிரித்துப் பார்க்க அவர் தயாராக இல்லை. இது அவரது தாராளவாத சன்நாயக நிலைபாட்டையும் பலவீனப்படுத்தியது.

**உ) சீர்திருத்தவாதமா? புரட்சியா?**

காலனிய நீக்கம் (Decolonisation), சட்டரீதியான மாற்றங்கள், நல்வாழ்வு அரசு குறித்த கருத்தாக்கம் ஆகிய சீர்திருத்தவாத மாயைகளை ஏகாதிபத்தியம் உருவாக்க முயற்சி செய்யும் காலத்தில் அம்பேத்கருக்கு முன் சீர்திருத்த வாதம், புரட்சி என்ற இரண்டு நிலைபாடுகள் இருந்தன. அம்பேத்கர் சீர்திருத்த வாதத்தைத் தேர்ந்தெடுத்தார்.

அம்பேத்கர் மீதான இத்தகைய மதிப்பீடுகளைத் தொடர்ந்து சமகால அம்பேத்கரியப் போக்குகளை—குறிப்பாக பகுஜன். சமாஜக் கட்சியின்— கன்சிராம் போக்குகளை கே.என்.ஆர் மதிப்பிடுகின்றார்.

இவற்றைக் காணும்முன், அம்பேத்கர் மீதான கே.என்.ஆர். மதிப்பீடு குறித்துக் காண்போம்.

# 2. சாதிச் சிக்கல் குறித்து

மதிப்பீடு குறித்து சில அணுகுமுறைகளை கே.என் ஆர். தன் கட்டுரையில் குறிப்பிடுகிறார். **புற நிலையான மதிப்பீடு** என்றும் **வரலாற்றுப் பூர்வமான மதிப்பீடு** என்றும் அவர் குறிப்பிடும் அணுகுமுறைகள் பொருத்தமானவையே. இந்த விதத்தில் அம்பேத்கரை மதிப்பிடுவதோடு மட்டுமின்றி அம்பேத் கரையும், அம்பேத்கரியத்தையும் **வர்க்கக் கண்ணோட்டத்திலும்** (Class out look) காண வேண்டியுள்ளது. பொதுவாகவே ஒரு கருத்துருவத்தை (Ideology) அதன் தோற்றகாலத்தன்மையோடும் சமகாலத்தில் அதன் பயன்பாட்டோடும் இணைத்துக் காண வேண்டியுள்ளது.

படிப்பகம்

padippakam



கே. என். ஆரின் மதிப்பீடு குறித்துக் காண்பதற்கு முன் சாதியம் குறித்தும் தாழ்த்தப்பட்டோர் இயக்கம் குறித்தும் ரெட் ஸ்டார் இதழின் கருத்துக்களைக் காண்போம்.

சாதிச் சிக்கலின் தீர்வு குறித்து (On the Resolution of Caste-Question-May 1992) தோழர் எம். எம். சோமசேகரனின் கட்டுரை ரெட் ஸ்டார் இதழில் வந்துள்ளது. இந்தியப் பொதுவுடைமைக் கட்சி அறிமுகமாகி ஏறத்தாழ 70 ஆண்டு காலத்துக்குப் பிந்தைய கருத்து என்பதால் இக்கட்டுரையின் முக்கியத்வம் அதிகரித்துள்ளது. அதைக் காண்போம் :

1. சமூகத்தின் உற்பத்தி—விநியோக அமைப்பைக் கட்டுப் படுத்தும், சமூக வாழ்க்கையை ஒழுங்குபடுத்தும் அமைப்பின் ஒரு பகுதியாக சாதியம் உள்ளது. சாதிய அமைப்பு நீடித்தலுக் கான அடிப்படை இன்று நிலவும் உற்பத்தி முறையில் உள்ளது. இன்னொரு விதத்தில் சொன்னால் மேற்கு நாடுகளில் எத்தகைய நிகழ்வுப் போக்குகளின் ஊடாக வர்க்கங்கள் தம் இருப்பை வெளிப்படுத்திக் கொள்கின்றனவோ அத்தகைய நிகழ்வுப்போக்கு களின் மிகவும் சிக்கலான பன்முக வெளிப்பாட்டு வடிவமாக சாதி உள்ளது. சாதிய அமைப்பின் பொதுவான அடிப்படை ஒருங் கிணைக்கப்பட்ட வர்க்கக் கட்டுப்பாடாகவும் துல்லியமான தொழிற் பிரிவினையாகவும் உள்ளது.

2. சாதிய அடிப்படையிலான பொருளாதார உறவுகளுக் கும் இந்தியாவில் நிலவிய சமயத்துக்கும் இடையிலான சிறப்பு உறவுகள்; பொருளாதார மற்றும் தொழில் அடிப்படையிலான இந்தப் பிரிவினை சமயச் சடங்குகளுடன் கொண்டுள்ள நெருக்க மான இணைப்பு; இனக்குழு சமூக மரபுகளை சமூகத்தின் பொது வான போக்குகள் உட்செரித்தல்; சாதிகளுக்குள் இரத்த உறவு அமைப்பைத் தொடர்ந்து பேணிக் கொண்டிருத்தல் என்பன போன்ற பல அம்சங்களைக் கணக்கிலெடுக்கும் பொழுதே சாதிய அமைப்பு குறித்து இன்னமும் ஆழமான புரிதல் உருவாகும்.

3. ஏகாதிபத்தியம் சாதி- வர்க்க சமூக அமைப்பில் (Caste-class social system) பல முக்கிய மாற்றங்களை ஏற்படுத்தியது. ஆனால் ஏகாதிபத்திய ஆதிக்கத்தின் கீழ் இயங்கிய இந்திய முதலாளியம், பழைய சமூக அமைப்பை நொறுக்குவதில் கணிச மான வரம்புகளைக் கொண்டிருந்தது.

4. சாதிய அமைப்பின் சமூக அடித்தளமான இன்றைய விவசாய உறவுகளை நொறுக்கி விவசாயப் புரட்சியை முற்றுப்

படிப்பகம்

padippakam



பெற வைத்தலே சாதிய சிக்கலுக்கான அடிப்படையான தீர்வு ஆகும். இவையே சோமசேகரனின் கருத்துக்கள் ஆகும்......

சாதி ஒழிப்புக்கான பாதை தவிர ஏனைய அம்சங்களில் தொடக்ககாலப் பொதுவுடைமை இயக்கக் கருத்துக்களிலிருந்து சோமசேகரனின் கருத்துகள் மிகவும் விலகி முன்னேறியுள்ளது. சாதியை வெறும் மேற்கட்டுமானமாக மட்டுமே பார்த்தல் இதில் இல்லை. ஐரோப்பிய வர்க்கத்திணைக்கு இணையாக சாதித் திணையைப் பார்த்தல் இதில் உள்ளது. **குறிப்பிடத்தக்க அம்சம் என்னவெனில் சாதிய அமைப்பு குறித்து துல்லியமான வரையறைக்கு இது வந்தடைந்துவிடவில்லை** என்பதாகும். **சாதி வர்க்க சமூக அமைப்பு** என்ற தொடரைப் பயன்படுத்தும் அளவுக்கு பாரம்பரிய விளக்கங்களிடமிருந்து மாறி முன்னேறி வந்துள்ளது. அம்பேத்கரின் பணி சாதிய ஒழிப்பு என்பதால் நாம் இங்கு இதைக் காண வேண்டியுள்ளது இன்றைக்கு 75 ஆண்டுகள் முன்னால் தொடங்கி நாற்பது ஆண்டுகள் முன்னால் வரையில் (1920-1956) பணியாற்றிய அம்பேத்கரின் நடவடிக்கையை அவரது **வரலாற்றுச் சூழலோடு** பொருத்திப் பார்க்க வேண்டியது அவசியம்.

ஆந்திர மாநிலம் சுண்டூரில் தாழ்த்தப்பட்டோர் மீதான உயர் சாதியினர் தாக்குதலில் (6-8-1991) 15 தாழ்த்தப்பட்ட சாதி மக்களை படுகொலை செய்ததைக் கண்டித்து ரெட் ஸ்டாரில் ஒரு கட்டுரை வந்துள்ளது (Sundur and after the Caste factor Bhaskar, Sep-October 1991). அதன் தொடக்க வரிகள் முக்கியமானவை:

> அண்மையில் பீகார், உத்திரப்பிரதேசம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் தாழ்த்தப்பட்டோர் மீது பெருமளவில் தாக்குதல்கள் தொடுக்கப்பட்டு, பலர் கொல்லப்பட்டுள்ளனர். மிகவும் மோசமான அளவில் அகலப் பட்டுக் கொண்டு வரும் ஒரு சமூகப் பிரிவினையை (Social-Divide) இது வெளிக்காட்டுகிறது. இந்திய சமூகத்தில் கடுமையான சாதி/வர்க்க மோதல்களைப் பிரதிபலிக்கும் இந்த சமூகப் பிரிவினை புதிய நிகழ்வு அல்ல.

சாதி மோதல்களை வர்க்க மோதல்களின் ஒரு பரிமாணமாகவே இதுவரை அடையாளம் காட்டி வந்த பாரம்பரிய விளக்கம் சற்று விரிவடைந்து சாதி/வர்க்க மோதல்கள் என மாறியுள்ளது.

இதுமட்டுமல்ல இக்கட்டுரையில் தாழ்த்தப்பட்டோர் இயக்கம் பற்றிய ஒரு மதிப்பீடு உள்ளது. அதைக் காண்போம்.

படிப்பகம்

padippakam



பெயரளவிலான சுதந்திரம் பெற்று 45 ஆண்டுகளுக்குப் பின்னரும் சாதிய அமைப்பு, குடியேற்ற காலத்திலும் அதற்கு முன்னரும் இருந்ததைப் போலவே பெரும்பாலான மக்களைக் கசக்கிப் பிழிந்து கொண்டிருக்கிறது. இப்பொழுதும்கூட தாழ்த்தப்பட்டோர் மீது படுகொலைகள் நிகழ்த்தப்பட்டுள் ளன. கடந்த நூற்றாண்டு தொடங்கி உருவாக்கப்பட்ட சமுதாய மறுமலர்ச்சி இயக்கங்களின் ஒரு பகுதியாக சமூக சீர்திருத்தங்களுக்கான பல முயற்சிகளுக்குப் பின்னரும் இப்படி நிகழ்கிறது என்பதை நாம் மறக்கக்கூடாது. இத்தகைய இயக்கங்களின் ஒரு பகுதியாக தாழ்த்தப்பட்டோர், ஆதிவாசிகள், பிற்பட்ட சாதிகள் ஆகியோர் அமைப்பு ரீதியாகத் திரண்டு அவர்களின் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான போராட்டங்கள் பல நடத்தப்பட்டன. அவை உருவாகி வளர்ந்த வரலாற்றுச் சூழலில் அவை முற்போக்கான சனநாயக இயக்கங் களாகும். டாக்டர் அம்பேத்கருடைய இயக்கம் உள்ளிட்ட இத்தகைய இயக்கங்களின் பங்களிப்பை அவற்றின் வரலாற்றுச் சூழலில் காண வேண்டும். அந்தந்தக் காலத்தில் குடியேற்ற ஆதிக்க எதிர்ப்புப் போராட்டத்தில் தம்மை இத்தகைய இயக்கங்கள் இணைத்துக் கொண்டிருப்பின் சாதிய ஒழிப்பு உள்ளிட்ட சமூக மாறுதலுக்கான அடிப் படையை இத்தகைய இயக்கங்கள் உருவாக்கவியலும்.

மிக நீண்ட மேற்கோளே இது. எனினும் இது டாக்டர் அம்பேத் கருடைய இயக்கம் குறித்து வரலாற்றுச்சூழல் பூர்வமான ஒரு மதிப்பீட்டைக் கொடுத்துள்ளது.

# 3. அம்பேத்கரின் வரலாற்றுச் சூழல்

அம்பேத்கரின் செயல்பூர்வ வரலாற்றுக் காலம் 1920-1956 எனலாம். முதல் உலகப் போரின் முடிவு தொடங்கி புதிய காலனி ஆதிக்கச் சரண்டல் வடிவத்தை உறுதி செய்யும் காலம் வரை எனவும் இதைக் குறிப்பிடலாம். இந்த விதத்தில் குடியேற்ற நாட்டு மக்களின் பிரதான எதிரியாக ஏகாதிபத்தியம் நிலவும் காலகட்டத்திலேயே அம்பேத்கரின் செயல்கள் அமைந்திருந்தன. ஏகாதிபத்தியம் தன் தேவைகளுக்கேற்பவும் அந்தந்த காலத் தின் தன்மைகளுக்குத் தக்க விதத்திலும் இங்கு தரகு முதலாளி யத்தை உருவாக்கியது. நிலவுடைமை முறையைச் செதுக்கிக் கொண்டது. இவற்றுக்குகந்த விதத்தில் நிர்வாக முறையும்,

படிப்பகம்

padippakam



கல்வி முறையும் ஏகாதிபத்தியம் கொண்டு வந்தது. ஏகாதிபத்தியம் வரும் வரை இங்கு நிலவிய சாதிய அடிப்படையிலான உற்பத்தி முறையை இத்தகைய நடவடிக்கைகள் மிகச் சிறிய அளவே தகர்த்தன. சாதிய சமூகத்தில் ஏகாதிபத்தியத்தின் இறுதித் தேவை கருதி வர்க்க மாறுதல்கள் ஏற்பட்டன. அம் மாறுதல்கள் சாதியப் படி நிலை வரிசையில் ஏற்பட்டன. இந்த வர்க்க மாறுதல்கள் ஒப்பீட்டளவில் உயர் சாதியினரிடத்தில் அதிகமாகவும், தாழ்த்தப்பட்ட சாதியினரிடத்தில் மிகவும் குறைவாகவும் உள்ளன.

இத்தகைய மாறுதல்கள் பொருளாதார தளத்தில் ஏற்பட்டுக் கொண்டிருந்தது. இருப்பினும் சமூக உற்பத்திக் கட்டமைப்பிலும் நுகர்வு கட்டமைப்பிலும் சாதிய சித்தாந்தம் ஆதிக்கம் வகித்துக் கொண்டிருந்தது குறிப்பாக சமூகம் தீண்டத் தகுந்தோர்/தீண்டத்தகார் என்றே பிளவுபட்டு இருந்தது. தீண்டத்தகுந்தோரில் பார்ப்பனரே உச்சத்தில் இருந்தனர். எனவே, பார்ப்பனர், பார்ப்பனரல்லாத உயர் சாதியினர் எனத் தொடங்கி தாழ்த்தப்பட்டோர் என்ற வரையறை சமூகத்தில் நிலவியது. பல்வேறு காலங்களில் உருவாகித் திரண்ட வேத நெறியிலான இந்து சமயம் இதற்குரிய சித்தாந்த நியாயத்தைக் கற்பித்துக் கொடுத்துக் கொண்டிருந்தது. ஒரு சிவில் சமூகத்துக்கு உரிய குறைந்தபட்ச அம்சங்கள் கொண்டிராத சாதிய சமூகம் மிக மெதுவான மாறுதல்களை உள்ளடக்கிக் கொண்டிருந்தது. ஆயினும் உற்பத்திக் கட்டமைப்பிலும், நுகர்வுக் கட்டமைப்பிலும் அதன் நடைமுறை ரீதியிலான மையத் தொடர்பு உடைத்தெறியப்படவில்லை. தீண்டாமை உள்ளிட்ட சாதியத்தை எதிர்ப்பதே குறைந்தபட்ச சனநாயக அம்சம் என்கிற அளவில் வரலாறு அமைந்திருந்தது. இத்தகைய சாதியம் நிலவுடைமை உற்பத்தி உறவின் வடிவமாகவும் வாழ்வியற் பண்பாட்டுக் கூறுகளின் செறிவாகவும் இரட்டைப் பரிமாணங்கள் கொண்டிருந்தன

முதல் உலகப் போருக்குப் பின் தொழில் துறையில் ஏகாதிபத்தியம் பல சீர்திருத்தங்களை வழங்கி, தன் தரகு முதலாளிய ஆதரவுத் தளத்தை விரிவுபடுத்தியது. சட்டமியற்றும் பிரிவுகளிலும், அதிகாரத்துவப் பிரிவுகளிலும் இந்தியர்க்கென உருவாக்கிய இடத்தை உயர் சாதியினர்—குறிப்பாக பார்ப்பனரே நிரப்பியதால் சமூக அடுக்கில் அவர்க்கு அடுத்து இருந்த சாதியினர்கள் தமக்கான இடங்களைக் கோரினர்.

படிப்பகம்

padippakam



அதுவரை வரலாற்றில் இத்தகைய வாய்ப்புகள் நிராகரிக்கப் பட்ட சாதியினரும் இத்தகைய அமைப்புகளில் இடம்பெற்றாலும் இவை அரசின் தொழில், நிர்வாகம், கல்வி ஆகிய கட்டமைப்பு களில் எல்லா சாதியினரையும் உள்ளிழுத்தன. இத்தகைய உள் ளிழுத்தலிலும் ஒரு சாதியப் படிநிலை வரிசை நிலவுகிறது. 1950இல் இயற்றப்பட்ட இந்திய அரசியல் சட்டம் இத்தகைய அடிப்படைக் கட்டமைப்பை மீறவில்லை.

முதல் உலகப் போருக்குப் பின்னரே காந்தியம் ஒரு அரசியல் சிந்தாந்தமாகத் திடப்பட்டது. ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வு களைப் பயன்படுத்திக்கொண்டு ஏகாதிபத்தியத்திடம் பேரம் பேசு வதற்குரிய ஆற்றலைத் தொடர்ந்து வளர்த்தெடுத்துக் கொள்ளு தல் இந்து சனாதன தர்மங்களை அடிப்படையில் பேணிப் பாது காத்துக்கொண்டு இந்து மத மேலாதிக்கத்கின் கீழ் எல்லா சமயங் களையும் ஒருங்கிணைத்துக் கொண்டு செயல் படல், சாதிய சமூகத்தைத் தலைகீழாகப் புரட்டக்கூடிய தொழில் மயத்தை எதிர்த்தும் ஏகாதிபத்தியத் தேவையிலான சீர்திருத்தத்தின் மூலம் சாதியத்தில் ஏற்பட்ட வர்க்க மாறுதல்களை ஆதரித்தும் செயல் படுவதனால் சமூகத்தின் உயர்சாதியத் தலைமையைத்தொடர்ந்து பேணுதல் ஆகியனவற்றுக்கு உகந்த செறிவான சித்தாந்தமாகக் காந்தியம் இருந்தது. இந்த சித்தாந்தம் இந்திய தேச அளவிலான/ மாநில அளவிலான / கிராமப்புற அளவிலான மேல்நிலை வர்க் கங்கள் மற்றும் உயர்சாதியினர் நலன்களுக்காகச் செயல்பட்டது.

காந்தியம் பிரிட்டன் ஏகாதிபத்தியத்தை மேற்புறத் தோற்றத் தில் எதிரியாகப் பாவனை செய்தாலும் ஏகாதிபத்தியக் கட்ட மைப்புக்குள்ளான பொருளாதார, அரசியல் சீர்திருத்தங்களைப் பெற்றுக்கொண்டு தம் வர்க்க நலன்களை விரிவடையச் செய்து கொள்ளும் நோக்கம் அதற்கு இருந்தது. இந்தியத் தேசிய காங் கிரசின் பிரதானப் போக்கான இது ஏகாதிபத்தியத்தையோ, நில வுடைமையையோ பிரதான எதிரிகளாக்கிக் கொள்ளவில்லை. காங்கிரசில் இடதுசாரி, சோசலிசப் பிரிவு என்றெல்லாம் அவ்வப் பொழுது தோன்றிக் கொண்டிருந்தாலும் அவை இந்தப் போக் கினால் இறுதியில் உட்செரிக்கப்பட்டன; அல்லது வெளித் தள்ளப் பட்டன. ஏகாதிபத்தியம் வகுத்த தொழில், அரசு, சமூகக் கட்ட மைப்புகளை அடிப்படையில் இது தகர்த்து விடவில்லை.

முதல் உலகப் பெரும் போருக்குப் பின்னரே இங்கு மார்க்சியக் கருத்துகளை வைத்து அமைப்பு கட்டும் முயற்சி இருந்தது,

படிப்பகம்

padippakam



ஏகாதிபத்தியத் தொழில் மையங்களில் மட்டுமே அமைக்கப்பட்ட பொதுவுடைமைக் குழுக்கள் (1920—1930) தொழிலாளர், விவசாயிகள் மக்கள் திரள் அமைப்புகளை ஏகாதிபத்திய, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு முன்னணியாகக் கட்ட விரும்பினர். ஆனாலும் காங்கிரசு கட்சியின் இடது சாரிப் பிரிவாக செயல்படுவதில் அக்கறை காட்டி, சொந்தக் கட்சி அமைக்கும் போக்கை இக்குழுக்கள் நிராகரித்தன. பிரிட்டன், சோவியத் ரசியா ஆகிய நாடுகளின் வழியே மார்க்சியத்தை உள்வாங்கிக் கொண்ட தொடக்க கால இந்திய மார்க்சிய அறிவாளிகள், பொருளாதாரப் போராட்டத்தை மட்டுமே வர்க்கப் போராட்டமாக சுருக்கிக் கொண்டனர்.

1930இல் இ. பொ. க.வின் செயல்முறைத் திட்ட நகல் அறிக்கை, ஏகாதிபத்திய நிலவுடமை எதிர்ப்புக் குணாம்சத்தைக் கொண்டிருந்தது. இவற்றின் தகர்வோடு சாதியத்தின் தகர்வைக் கண்டறிந்தது. இந்த அறிக்கை காங்கிரசை ஏகாதிபத்திய—நிலவுடைமை எதிர்ப்பு முன்னணியாக ஏற்றுக்கொள்ள மறுத்தது காலனிய ஆட்சியை எதிர்த்து தொழிலாளர்—விவசாயிகள் சோவியத் ஆட்சியை உருவாக்கும் திட்டத்தைக் குறிப்பிட்டது. எனினும் ஏகாதிபத்தியத்தை எதிர்த்தும் சாதியத்தை எதிர்த்தும் குறிப்பான செயல் திட்டங்கள் எதுவும் முன்வைக்கப் படவில்லை. பெருகிவரும் எதிர்ப்புணர்வுகட்கு காங்கிரசே வடிகாலாக அமைந்தது. பம்பாயில் செயல்பட்ட டாங்கே குழு இத்தகைய திட்டத்தைக் கூட ஒத்துக்கொள்ளாமல் காங்கிரசில் ஏகாதிபத்திய எதிர்ப்பைத் தேடி அலைந்துகொண்டிருந்தது.

1934இல் இந்தியப் பொதுவுடைமைக் கட்சி தடைசெய்யப் பட்ட காலத்தில் நிறைவேற்றப்பட்ட தத்-டட்லி கோட்பாடு (1934—1948) பொதுவுடமை உறுப்பினர்களும் அமைப்புகளும் காங்கிரசில் இணைந்து காங்கிரசுக்கு இடதுசாரித் திசை வழியைத் தரவேண்டும் எனக் கோரியது. பி. சி. ஜோஷி தலைமையிலான வலது சாரி சமரச சரணடைவுப் பாதை, காந்தியின் தலைமையில் ஏற்படும் சனநாயக உடன்பாட்டின் மூலம் நாட்டுக்கு சுதந்திரத்தை வழங்கும்படி பிரிட்டிசு தூதுக் குழுவுக்கு மனு கொடுத்தது.

அடுத்து 1948இல் பி. டி. ரணதிவே குழு கட்சியில் பொறுப்புக்கு வந்தது. 1947இல் கொடுக்கப்பட்ட சுதந்திரம் போலி சுதந்திரம்; ஏகாதிபத்திய எதிர்ப்பை காங்கிரசின் தலைமை

படிப்பகம்

padippakam



இழந்து பிரிட்டனின் கூட்டாளியாக மாறியது என அக்குழுவினர் குறிப்பிட்டனர். ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு என்பதை அக்குழு முன்வைத்தாலும் புரட்சியின் கட்டம் என்பதை சோசலிசப் புரட்சிக் கட்டத்தையும் சனநாயகப் புரட்சிக் கட்டத்தையும் இணைத்தது. இதனால் பணக்கார விவசாயிகளையும் சிறு முதலாளிகளையும்கூட புரட்சியின் எதிரிகளாகப் பாவிக்கும் நடைமுறைத் தந்திரம் அப்போது செயல்பட்டது.

1940 களில் தொடங்கிய தெலுங்கானா போராட்டம் பொதுவுடமையரின் தலைமையிலான ஆயுதம் தாங்கிய விவசாயப் புரட்சியாகப் பரிணமித்து,4000 கிராமங்களை விடுவித்தது. 1948 இல் இந்திய ராணுவத்தின் முற்றுகைக்குப் பின் 1949 இல் தெலுங்கானா இயக்கம் பின்னடைந்தது இந்நிலையில் தெலுங்கானா போராட்டப் பாதையை முன் வைத்து **தோழர் இராசேசுவரராவ்** 1950 இல் பொதுச் செயலராக்கப்பட்டார். சீனப் பாதையில் கொரில்லா போராட்டத்தை முன்னெடுக்க மூவர் அடங்கிய உச்சக்குழு நியமிக்கப்பட்டது. இத்தகைய பாதையை பி.டி. இரணதிவே, இ.எம்.எஸ்., டாங்கே, ஜோஷி, அஜாய்கோஷ், ஆகியோர் கடுமையாக எதிர்த்தனர் 1951 இல் கட்சியின் தலைவர்கள் ரசியா சென்று வந்தபின் கட்சித்திட்டம், கொள்கை அறிக்கை, செயல் தந்திரவழி ஆகியனவற்றை வெளியிட்டனர். இந்தியப் புரட்சி சனநாயகக் கட்டத்தில் இருப்பதாகவும், இந்தியா அரைக்காலனி நாடு என்றும் ஏகபோக—நிலப்பிரபுத்துவ இந்திய அரசை வீழ்த்த பாராளுமன்றத் தேர்தலைப் பயன்படுத்த முடியும் என்றும் இந்த ஆவணம் குறிப்பிட்டது.

1952 பொதுத்தேர்தலுக்குப் பின் 1953 மார்ச்சில் கூடிய மத்தியக்குழு. முற்போக்குக் கருத்துடைய காங்கிரசாருடன் இணைந்து அய்க்கிய முன்னணி அமைக்கும் செயல் தந்திரத்தை வலியுறுத்தியது. 1955 ஜூனில் கூடிய மத்திய குழு, இந்தியா சுதந்திரக் குடியரசு என்றும், இந்திய அரசின் வெளிநாட்டுக் கொள்கை முற்போக்காக உள்ளது என்றும் அரசின் பொருளாதார திட்டங்கள் முதலாளியத்தைக் கட்டியமைப்பதாக இருப்பதால் அதன் இயல்பான வளர்ச்சிப் போக்கில் ஏகாதிபத்தியத்துக்கும், நிலவுடைமைக்கும் எதிரான நடவடிக்கைகளை எடுக்கும்படி அரசு நிர்ப்பந்திக்கப்படும் என்றும் குறிப்பிட்டது. முதலாளிய சீர்திருத்தவாத நோக்கத்துடன் காங்கிரசல்லாத (அல்லது காங்கிரசின் முற்போக்குப் பிரிவுடன்) பாராளுமன்றவாத சனநாயக

படிப்பகம்

padippakam



முன்னணியை அமைப்பதையே இலட்சியமாகக் கட்சி ஏற்றுக் கொண்டது. இதுவே 1956 பாலக்காட்டில் நடந்த நான்காம் பேராயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இவையே நமது ஆய்வுக்காலத்திய (1920—1956) பொதுவுடைமைக் கட்சியின் வரலாற்றுச் சாராம்சம் ஆகும்.

அம்பேத்கரின் செயல் பூர்வ வரலாற்றுக் காலத்தில் **பிரதான எதிரியாக ஏகாதிபத்தியம்** இருந்தது. எனினும், நிலவுடைமையை முற்றிலும் சிதைத்து விடாத சூழலில் **நிலவுடைமைச் சமூக அமைப்பைத் தன் வலுமிக்க ஆதாரமாக ஏகாதிபத்தியம்** கொண்டிருந்தது. நிலவுடைமைச் சமூக அமைப்பின் பிரதான வெளிப்பாட்டு வடிவமாக சாதியம் அமைந்திருந்தது. இத்தகைய வரலாற்றுச் சூழலில் நாம் அம்பேத்கரின் பணிகளை மதிப்பீடு செய்ய வேண்டும்.

# 4. கே. என். ஆர். கருத்துகள் மீதான விவாதம்

கே.என்.ஆர். குறிப்பிடும் அம்பேத்கரின் பங்களிப்புகளில் மறுக்கத்தக்க மற்றும் பாதக அம்சங்களைப் பற்றி முதலில் விவாதிப்போம்.

## அ. ஏகாதிபத்தியம் மீதான அணுகுமுறை

அம்பேத்கர் ஏகாதிபத்தியத்தை எதிர்க்கவில்லை என்றும் சாதிய சிக்கலுக்குத் தீர்வு ஏற்படும் வரை பிரிட்டிசு ஆட்சி இங்கு இருக்க வேண்டும் எனக் குறிப்பிட்டதாகவும் **கே என்.ஆர்.** வலியுறுத்துகின்றார். இதுபோல் பலரும் குறிப்பிட்டுள்ளனர். இதுபற்றிக் காண்போம்.

அம்பேத்கரின் வரலாற்றுச் சூழலில். ஏகாதிபத்திய எதிர்ப்புத் தன்மைகளை ஓரளவு கண்டோம். இந்திய தேசிய காங்கிரசு ஏகாதிபத்தியத்தை உண்மையில் எதிர்க்கவில்லை. மக்களின் தேசிய உணர்வுகளை பேர ஆற்றலாகப் பயன்படுத்தி தரகு முதலாளிய— பெரு நிலவுடைமை—உயர் சாதியின் நலன்களை காங்கிரசு உயர்த்திப் பிடித்தது. இந்தியப் பொதுவுடைமைக் கட்சியில் ஒரு வலிமைமிக்க குழு தொடர்ந்து காங்கிரசுக்குள் ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்வைத் தேடி அலைந்தது. ஏகாதி

படிப்பகம்

padippakam



பத்திய எதிர்ப்பு என்பது பொதுவுடைமைக் கட்சியின் அதிகாரப் பூர்வ நிலைபாடாக இருப்பினும் குறிப்பான செயல் திட்டங்கள் எதையும் அக்கட்சி முன்வைக்க வில்லை. புரட்சியின் கட்டம் பற்றிய ஊசலாட்ட நிலை சில நேரங்களில் இருந்ததால் ஒரு பரந்துபட்ட மக்கள் முன்னணியைக் கட்ட இயலாமலும் போயிற்று இதனால் ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வுக்குரிய வடிகாலாக காங்கிரசே இருக்க நேரிட்டது; மேலும் தேசிய பேரெழுச்சிக் காலத்தில் சர்வதேச முரண்பாடுகளை மட்டுமே கணக்கிலெடுத்துக்கொள்ளப்பட்டது. (1942 ஆண்டுப் போராட்டம்) பொதுவுடைமைக் கட்சியானது சர்வதேச முரண்பாடுகளையும், தேசிய முரண்பாடுகளையும் ஒருங்கிணைந்த தன்மையில் காணவில்லை. எனவே செயல் தந்திர ரீதியில் பிரிட்டன் அரசுக்கு சார்பாக அக்காலத்தில் பொதுவுடைமைக் கட்சி நடந்து கொண்டது. காங்கிரசு, பொதுவுடைமைக் குழு ஆகியவற்றின் இத்தகைய இயங்கு தளத்தில் அம்பேத்கரின் செயல்பாடுகளைக் காணவேண்டும்.

அம்பேத்கர் 1919 இல் சௌத்பாரே குழுவுக்கு சாட்சியம் கொடுக்க வாய்ப்பு பெற்றது தொடங்கி இந்திய வைசிராய் மன்ற உறுப்பினராக (1942-1946) இருநத காலம் வரை இந்தியாவில் பிரிட்டன் அரசை ஆதரித்ததாகக் குறிப்புகள் கிடையாது. பிரிட்டன் அரசு நியமித்த பல குழுக்களில் சாட்சியம் அளித்தும் பல குழுக்களிடம் அறிக்கைகள் சமர்ப்பித்தும் உள்ளார். இப்படி காங்கிரசு மட்டுமின்றி பொதுவுடைமை இயக்கமும் அறிக்கைகள் அறித்துள்ளன. இவற்றில் அம்பேத்கரின் கருத்துக்கள் எப்படி இருந்தன என்பதே முக்கியமானதாகும். பிரிட்டன் ஏகாதிபத்தியம் குறித்து அவரது நிலைபாடு முதல் வட்டமேசை மாநாட்டில் (20-11-1930) முதன் முதலில் வெளிப்பட்டது.

> தற்போதுள்ள அரசை நாங்கள் எங்கள் சொந்த சூழ்நிலைகளைக் கொண்டு மதிப்பிட்டுப் பார்த்து ஒரு நல்ல அரசாங்கத்துக்கு இருக்க வேண்டிய மிக முக்கிய அடிப்படைக் கூறுகள் அதனிடம் முழுமையாக இல்லாமல் இருப்பதை அறிகின்றோம். நாட்டின் சமூக பொருளாதார வாழ்க்கைக் கோட்பாடுகளை மாற்றியமைப்பதற்குத் தயங்காததுமான ஓர் அரசு நமக்கு வேண்டும். இத்தகைய தோர் அரும் பணியைப் பிரிட்டிஷ் அரசால் என்றைக்கும் செய்ய முடியாது. அரசியல் அதிகாரம் எங்கள் (அதாவது ஒடுக்கப்பட்ட வகுப்பினருக்கு- கட்டுரை ஆசிரியர்) கைகளுக்கு வந்தால் தவிர இவர்களால் மட்டுமல்ல; பிறர்

படிப்பகம்

padippakam



எவராலும் கூட எங்கள் குறைகளைத் தீர்க்கமுடியாது. பிரிட்டிசு அரசு இன்றிருக்கும் நிலையிலேயே தொடர்ந்து இருக்குமானால் இத்தகைய அரசியல் அதிகாரத்தில் எங்களுக்கு உரிய பங்கு கிடைக்கும் என எதிர்பார்ப்பதற்கு இல்லை.

ஒரு சுதந்திர அரசியலமைப்பிலே தான் அரசியல் அதிகாரம் எங்களுக்குக் கிடைக்கக் கூடிய வாய்ப்பு உள்ளது... குடியேற்ற நாட்டுத் தகுதிபெற்ற இந்திய அரசின் அதிகாரம் யாரிடம் இருக்கும்? ஒடுக்கப்பட்ட வகுப்பார் அந்த ஆட்சி அதிகாரத்தில் பங்கு பெறுவார்களா? இவையே முக்கியமாக நாம் ஆர்வம்காட்டும் கேள்விகள்... எங்கள் சிக்கல்கள் காலப்போக்கில் தீர்ந்து விடும் என்ற நிலையில் விடப்படக்கூடாது என்ற ஒரு நிபந்தனையுடன் 'சுயராஜ்யம்' அளிப்பதற்கு உடன்படுகிறோம்...... ஒரு பொறுப்பான ஆட்சியையே கேட்கிறோம். வெறும் எசமானர்கள் மாற்றமாக அமைந்த அரசாங்கத்தை அல்ல என்பது தான்.

இந்த நீண்ட கருத்துரையின் மூலமாக, அம்பேத்கர், தாழ்த்தப்பட்ட மக்களின் நலன்களைப் பெறுகின்ற கண்ணோட்டத்தில் ஏகாதிபத்தியத்தை அணுகியதைக் காண முடியும். மக்களின் அதிகாரம் என்ற கருத்தோட்டத்தில் உறுதியாக இருந்த அம்பேத்கர், டொமினியன் தகுதியா, சுயராஜ்யத் தகுதியா, என்பனவற்றை விட அமையவிருக்கும் அரசியலமைப்பில் தாழ்த்தப்பட்டோருக்கு எத்தகைய அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்பதில் முனைப்பாக இருந்துள்ளார்.

சட்டமறுப்பு இயக்கம், ஒத்துழையாமை இயக்கம், வெள்ளையனே வெளியேறு இயக்கம், என்றெல்லாம் காங்கிரசு கட்சி நடத்திய இயக்கங்களில் அம்பேத்கர் கலந்து கொள்ளாததோடு, அவற்றைக் காலப் பொருத்த மற்றவை எனக் கண்டித்துள்ளார். மேலும் காங்கிரசு இந்து சனாதன அமைப்பாக மட்டுமின்றி முதலாளிகளின் ஏவல் அமைப்பாகவும் செயல்பட்டதை சரியாகக் கண்டறிந்தார். ஏகாதிபத்தியத்தை எதிர்க்க காங்கிரசில் சேருமாறு 1938 இல் அழைப்பு விடுத்த பொழுது, விவசாயிகள், தொழிலாளர்கள் ஆகியோரின் நலன்களைப் புறக்கணித்துவிட்டு முதலாளிகள் நலன்களை முன்னேற்றம் அடையச் செய்ய சட்டபூர்வ வழிகளை காங்கிரசு பின்பற்றுகிறது என்றும், ஏகாதிபத்தி

படிப்பகம்

padippakam



யத்தை காங்கிரசு எதிர்த்தால் அதனோடு இணைவதாகவும் அம்பேத்கர் குறிப்பிட்டதாகத் தெரிகிறது. 1945 இல் அம்பேத்கரை காங்கிரசில் இணைக்க முயற்சி நடந்த பொழுது **எந்தவொரு காங்கிரசுக்காரரையும் விட நான் ஒரு மகத்தான தேசியவாதி** எனப் பதிலளித்தார். காங்கிரசின் போலித்தன்மையை சரியாகப் புரிந்து கொண்ட அம்பேத்கர் ஏகாதிபத்திய முயற்சிகளில் காங்கிரசோடு கைகோர்க்க விரும்பவில்லை.

அதே நேரத்தில் அன்னிய அரசுகுறித்து விரிவான விதத்தில் சட்டபூர்வ குழுக்களிடத்தில் எடுத்துரைத்த அம்பேத்கர், ஏகாதிபத்தியத்தை எதிர்த்த போராட்டங்களை நடத்துவது குறித்து எவ்விதப் புரிதலையும் கொண்டிருக்கவில்லை. ஏகாதிபத்திய எதிர்ப்பு அரசியலை செயல்படுத்துவதற்காக அவர் கீழ்க்கண்ட அணுகுமுறைகளை மேற்கொண்டார்.

தாழ்த்தப்பட்ட மக்களின் கண்ணோட்டத்தில் இந்திய தேசிய விடுதலையை அம்பேத்கர் அணுகினார். தாழ்த்தப்பட்ட மக்கள், மிக பொதுவான மாறுதலுக்கு உட்பட்டிருந்தனர். அவர்களிடம் சிறு விவசாயிகள், சிறு அதிகாரிகள் என்பன போன்ற சிறுவுடைமை வர்க்கம் மிகக் குறைவாகவே உருவாகியிருந்தது. குறிப்பாக மகாராட்டிரம், சென்னை மாகாணம் ஆகிய இரண்டிலும் இப்படிக் காண இயலும். குத்தகை விவசாயிகள், சிறு விவசாயிகள் எனக் கிராமப் புறங்களிலும், இராணுவ வீரர்கள், சிறுபணியாளர்கள், அரசு ஊழியர்கள், சிறு அதிகாரிகள் என நகர்ப்புறங்களிலும் ஒரு மிக மெல்லிய வளையம் உருவாகி இருந்தது. தாழ்த்தப்பட்டோரில் 95 சதவீதத்துக்கும் மேற்பட்டோர் கூலி விவசாயிகளாகவும், கொத்தடிமைகளாகவும் மட்டுமின்றி இழிவாகக் கருதப்பட்ட தொழில் முறைகளிலேயே பாரம்பரியமாக இருத்தி வைக்கப்பட்டனர்.

இந்து சனாதன வாழ்வியலையும், ஏகாதிபத்திய அரசையும் எதிர்க்கும் அரசியலை உருவாக்கிக் கொள்வதில் தாழ்த்தப்பட்ட சாதிகளின் கண்ணோட்டத்தில் அம்பேத்கர் செயல்பட்டிருந்தார். இத்தகைய அரசியல் செயல் தந்திரங்களை உருவாக்கிக் கொள்வதில் **தாழ்த்தப்பட்டோரிடையே உருவான நடுத்தர வர்க்க சிந்தனை** செயலூக்க மிக்க பங்கு வகித்தது எனக் கூறலாம். தாழ்த்தப்பட்டோரில் உள்ள அடிப்படை வர்க்கங்களின் பொருளாதார சமூக வாழ்வியல் சிக்கல்களையும் **இத்தகைய நடுத்தர வர்க்க நோக்கு நிலையில்** நின்று காண்பதனாலே அம்பேத்கரின் வரலாற்றுப் பங்களிப்பில் **ஒரு வரம்புக்கு உட்பட்ட வளர்ச்சியைக் காண்கிறோம்.**

படிப்பகம்

padippakam



## ஆ. விவசாயப் புரட்சியின் மீதான அணுகுமுறை

தாழ்த்தப்பட்ட மக்களின் சிக்கல், நிலத்தோடு தொடர்புடையது என்பதில் இரண்டு கருத்துக்கள் இருக்கவியலாது. தோழர் கே.என்.ஆர். கருதுவது போல தாழ்த்தப்பட்ட சாதிகளில் உள்ள விவசாயக் கூலிகள், வறிய விவசாயிகள் ஆகிய வர்க்கங்களின் சமூக பொருளாதார பின்னடைவிற்கான அடிப்படைத் தீர்வு **விவசாயப் புரட்சியில் உள்ளது.**

இந்தியாவின் தொழில்மயத்தின் அளவையும் தன்மையையும் ஏகாதிபத்தியமே தீர்மானித்தது. இந்தியாவில் விவசாயப் பிரச்சனைகளுக்கான தீர்வு, இந்தியாவைத் தொழில் மயமாக்குதலே என 1918இல் அம்பேத்கர் குறிப்பிட்டார். தரிசு நிலங்கள் அனைத்தையும் அரசு ஏற்றுக் கொண்டு அவற்றைத் தாழ்த்தப்பட்ட கூலி விவசாயிகளுக்கு வினியோகிக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார். அதே நேரத்தில் விவசாயிகளின் சமூக உளவியலையும் கணக்கிலெடுத்துக் கொண்டு நிலத்தின் மீதான விவசாயியின் தனிவுடைமை ஆர்வத்தை மாற்றியமைத்து கூட்டுப் பண்ணைக்கு ஏற்ற மனோபாவத்தை அவர்களிடத்தில் உருவாக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

உற்பத்திச் சாதன வினியோகப் பரவல் குறித்து மட்டுமல்ல, உற்பத்தி உறவுகளையும் மாற்றியாக வேண்டுமெனக் குறிப்பிட்டார். **கோத்தி** முறையை ஒழித்து, அரசாங்கத்துக்கும், உழுபவருக்கும் இடையிலான நேரடி உறவு இருக்க வேண்டும் என ஒரு மசோதா கொணர்ந்தார். இது ஏறத்தாழ ஜமீன்தாரி முறை ஒழிப்பு ஆகும். மகார் கூலி விவசாயிகளின் பாரம்பரிய பணிகள் குறித்த தடுப்புச் சட்டத்தை(வாட்டன் முறை தடுப்பு) உருவாக்கப் பெரிதும் பாடுபட்டார். சோவியத் ரசியாவின் கூட்டுப் பண்ணை முறை குறித்து 'நமது கொடுமைகளுக்கெல்லாம் அதுவே தீர்வு' எனக் குறிப்பிட்டார்.

அம்பேத்கரின் சிந்தனைகள் வர்க்கப் போராட்டத்தின் ஊடாகப் பயணம் செய்யவில்லையெனினும் நிலவுடைமை எதிர்ப்புக் குணத்துடனும் வேளாண்மை உற்பத்திச் சாதனங்கள் மீதான அரசுக் கட்டுப்பாட்டை ஆதரித்தலையும் கொண்டிருந்தன. சோவியத் ரசியாவில் சோசலிசப் பொருளாதாரத்தை



படிப்பகம்

padippakam



நோக்கிச் செல்லும் பாதையில் அரசு முதலாளியத் தன்மை கொண்ட நிலை இடைக்காலத்தில் ஏற்பட்டது. அங்கு விவசாயத் துறையில் நடந்த சோதனை முயற்சிகளை அம்பேத்கர் முன் மாதிரிகளாகக் கொண்டிருந்தார். அன்றைய கால வரலாற்றுச் சூழலோடு ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது இத்தகைய கருத்துக் கள் விவசாயப் புரட்சிக்கு நெருங்கிய தொடர்பு கொண்டவை ஆகும். இன்னொன்றையும இங்குச் சேர்த்துச் சொல்ல வேண்டும். 1938 வரை (பரித்பூர் காங்கிரசு) அதிகாரபூர்வமான விவசாயத் திட்டம் எதுவும் காங்கிரசுக்கு இல்லை. அதற்குப் பின் காங்கிரசில் உருவான திட்டம், ஏகாதிபத்தியத்தின் தேவை கருதியும், முதலாளியத்துக்கு உகந்ததாகவும் இருந்தது.

ஆனால் பொதுவுடைமைக் கட்சியைப் பொறுத்து அப்படி இல்லை. பின்னடைந்த நாடுகளில் கட்டப்படும் பொதுவுடைமை இயக்கம், விவசாய இயக்கங்களுடன் தெளிவான உறவு கொண்டாலன்றி பொதுவுடைமைக் கொள்கையை நிறைவேற்ற இயலாது என 1920 இல் லெனின் குறிப்பிட்டார். (தொகுப்பு நூல் 31 : 241-242) இந்தியப் புரட்சியின் மையம் விவசாயப் புரட்சி என்று பொதுவுடைமை அகிலம் குறிப்பிட்டது. ஆனால் இந்தியாவின் பல பகுதிகளில் செயலாற்றிய பல தோழர்களிடம் விவசாயப் புரட்சி குறித்த புரிதல் குறைவாக இருந்தது. இது குறித்து பல விமர்சனங்கள் முன் வைக்கப்பட்டன. கட்சியின் முன் முயற்சியினால் கூட்டப்பட்ட **அனைத்து இந்தியத் தொழிலாளர்-விவசாயிகள் கட்சி** (1928 டிசம்பர்) யானது நிலவுடைமைத் துவத்தையும் மன்னராட்சியையும் ஒழிப்பது என்பதைத் திட்டமாகக் கொண்டிருந்தது. எனினும் **விவசாயி யார்?** என்ற வரையறையில் தெளிவின்றி இருந்தது. சிறு கைவினைஞர், மீனவர் ஆகியோரையும் அக்கட்சி விவசாயிகளாக இணைத்துக் கொண்டது.

சீர்திருத்தவாத முதலாளிகளுடன் இணைந்து பணியாற்ற விரும்பிய அளவுக்கு, பொதுவுடைமையர்கள் விவசாய வர்க்கத்துடன் இணையவில்லை. 1935க்குப் பின்னரே விவசாய இயக்கங்களைக் கூட்டி விவசாயப் போராட்டங்களில் பொதுவுடைமையர் பங்கெடுத்தலைக் காணலாம். நிலங்கள், காடுகள் முதலானவற்றைப் பறிமுதல் செய்து சமுதாய உடைமை ஆக்குதல் என்பதைப் பொதுவுடைமைக் கட்சியின் பிரதான நோக்கங்களுள் ஒன்றாக அறிவித்த கட்சியின் செயல்முறைத் திட்ட நகல் அறிக்கையை (1930 டிசம்பர்) கட்சியின் வலிமையான பம்பாய்க்

படிப்பகம்

padippakam



குழு நிராகரித்தது குறிப்பிடத்தக்கது. 1945 களில் தேபகா (வங்காளம்), மாண்ட்கோம ரி(பீகார்), பாட்டியாலா (பஞ்சாப்), புன்னப்புரா வயலார் (கேரளா), தஞ்சை (தமிழ்நாடு), தெலுங் கானா (ஆந்திரம்) ஆகிய பகுதிகளில் நிலவுடைமைத்துவ எதிர்ப்புக் குணாம்சமிக்க போராட்டங்களில் பொதுவுடைமைக் குழுக்கள் உணர்வுபூர்வமாக ஈடுபட்டன. இவற்றிலிருந்துதான் விவசாயப் புரட்சிக்குரிய செயல் தந்திர வடிவங்கள் பின்னாளில் வகுக்கப்பட முடிந்தது என்பது உண்மையாகும்.

இத்தகைய காங்கிரசு-கம்யூனிச அமைப்புகளின் இயங்குதல் சூழலில் அம்பேத்கரின் கருத்துக்களைக் காண வேண்டியுள்ளது. அம்பேத்கரின் கருத்துக்கள் தாழ்த்தப்பட்ட மக்களின் நலன் களுக்கு உகந்தவையாக இருப்பினும் அவை நடுத்தர வர்க்கக் கற்பனாவாதத் தன்மையில் அமைந்துள்ளது.

தாழ்த்தப்பட்டவர்கள் வர்க்க அமைப்புகளில் அணி திரண்டு சாதியத் தடைகளை உடைத்தெறிந்து நிலச்சிக்கலைத் தீர்க்க முடியும் என தோழர் கே. என். ஆர். குறிப்பிடுதலே நடக்க இயலும். ஆனால் இதில் உள்ள நடைமுறைச் சிக்கல்களை அம்பேத்கர் கணக்கிலெடுத்த அளவுக்கு அவரது காலத்திய பொது உடைமையர்கள் கணக்கிலெடுத்ததாகத் தெரியவில்லை. அதற்குப் பிந்தைய காலத்திலும்கூட பெருமையாகச் சொல்லிக் கொள்ளும் அளவில் பொதுவுடைமையர்கள் நடைமுறைச் சிக்கல்களைக் கணக்கிலெடுத்துக் கொள்ளவில்லை.

வர்க்கமாக அணி திரண்டு சாதியத் தடைகளை உடைத் தெறிவதற்கு முந்தைய கட்டத்தில் உருவாகும் தடைகளை அம்பேத்கர் கணக்கிலெடுத்தார். **வர்க்கமாக அணி திரள்வதற்கு சாதி தடையாக உள்ளது** என்பதை ஒப்புக்கொள்வதே நேர்மை யாகும். தாழ்த்தப்பட்ட சாதியினரோ பிற சாதியினரோ புற நிலை அளவில் கூலி விவசாயி வர்க்கமாக இருக்கலாம். இதைத் தான் ஒரு **வாக்கம்** என்பர். ஆனால் இந்த வர்க்கம் **தமக்குரிய வர்க்க உணர்வு** பெறுதலையும் தமக்குரிய வர்க்க அமைப்புகளில் அணி திரளுதலையும் **தமக்கான வர்க்கமான நிலை** (Class) என்பர். புறநிலை அளவில் ஒரே வர்க்கமாக உள்ள பல சாதியினர், தமக் கான வர்க்கமாக மாறுதலுக்கு அவரவர் சாதிய உணர்வு தடை யாக உள்ளது. இதிலும் குறிப்பாக அடிப்படை வர்க்கங்களாக உள்ள பிற்பட்ட/தாழ்த்தப்பட்ட சாதிகளிடத்தில் இத்தடையை மிகவும் அதிகமாகக் காணலாம். எனவே **வர்க்க அமைப்புகளில்**

படிப்பகம்

padippakam



**அணி திரண்டு தொடர்ந்து வர்க்கமாக இருத்தலுக்கே சாதி வலுவான தடையாக** இருப்பதை அம்பேத்கர் உணர்ந்த அளவுக்குப் பொதுவுடைமையர்கள் அன்று உணரவில்லை.

இதற்காக அம்பேத்கர் வர்க்க அமைப்புகளில் திரளுவதை எதிர்த்தார் என அர்த்தமல்ல. தாழ்த்தப்பட்ட தொழிலாளர்கள் வர்க்க அளவில் அணி திரளுதல் சரியானதென்றும் அவர்கள் மீதான சாதியக் கொடுமைகள் குறித்து வர்க்க அமைப்புகள் கவனம் செலுத்தவில்லையானால் தங்களுக்கான வேறு அமைப்புகளை அவர்கள் வைத்துக் கொள்வதே சரி என்றும் அம்பேத்கர் (பிப்ரவரி 1938)குறிப்பிட்டார். இங்கு விவசாயப் புரட்சிக்குப் பல சாதிகளின் அடிப்படை வர்க்கத்தினரை ஒருங்கு திரட்டலுக்கு வலுவான தடையாக சாதியம் இருப்பதைக் கண்டறிதலும், விவசாயப் போராட்டங்களில் சாதிகளுக்கு இடையிலான சமத்துவத்தை உருவாக்கப் போராடலும், சாதிய எதிர்ப்புப் போராட்டத்தில் பிற்பட்ட, உயர் சாதிகளில் உள்ள சனநாயக சக்திகளை இனங்கண்டு, தாழ்த்தப்பட்ட சாதியினரோடு அவர்களை இணைத்தலும் தேவைப்படுகின்றன.

அம்பேத்கரின் அணுகுமுறை நடுத்தர வர்க்க முதலாளியக் கற்பனை நிலையில் உள்ளது. இதில் **விவசாயத்தின் முதலாளித்துவப் போக்கு** காணப்படுகிறது. அதை முற்றுப்பெறச் செய்ய வேண்டும். ஆனால் நடுத்தர வர்க்கக் கண்ணோட்டம் என்பது உடைமை ஒழிப்பை விரும்ப இயலாதது. உடைமை ஒழிப்பு என்பது அதன் வர்க்க இருத்தலுக்கே ஆபத்து. இங்கு கூலி விவசாயிகள் கண்ணோட்டம் என்பது கூட, அம்பேத்கர் குறிப்பிடும் விவசாய சமூக உளவியலோடு காணும் பொழுது, அது சிறு விவசாயி வர்க்கமாகவே தன்னை உயர்த்திக் கொள்ள விரும்புகிறது. இந்த விதத்தில்தான் உற்பத்தி சாதன உரிமை இல்லாத உற்பத்தித் திறன் நுட்பம் மட்டுமே கொண்டு உற்பத்தியில் ஈடுபடும் **பாட்டாளி வர்க்கக் கண்ணோட்டம்** தேவைப்படுகிறது. இத்தகைய கண்ணோட்டமே உற்பத்தி சாதன உரிமையின் தனியுடைமையை நிராகரித்து சமூகவுடைமையை முன் வைக்க இயலும். ஆகவே பாட்டாளி வர்க்கத் தத்துவக் கண்ணோட்டத்தின் மூலம் விவசாயப் புரட்சியை அணுகும்பொழுது மட்டுமே, அம்பேத்கரின் கற்பனையில் உள்ள கூட்டுப் பண்ணை முறையை யதார்த்தமாக்க இயலும்.

இதற்கு காங்கிரசை மட்டுமல்ல பிரிட்டன் அரசையும் அம்பேத்கர் முழுமையாக நம்பி இருக்கவில்லை. அதே நேரத்தில்

படிப்பகம்

padippakam



தாழத்தப்பட்ட கூலி விவசாயிகள், சிறு விவசாயிகள் ஆகியோரையும் நிலவுடைமை எதிர்ப்புப் போராட்டத்திற்கு அவர் ஒருங்கு திரட்டவில்லை. தாழ்த்தப்பட்ட அடிப்படை வர்க்கங்களின் பொருளாதார இழிநிலைகளைப் பற்றிய சரியான புரிதலை அம்பேத்கர் கொண்டிருந்தார். ஆயினும் இவற்றுக்கான தீர்வுகளை முன் வைப்பதில் சீர்திருத்தவாத முதலாளியக் கண்ணோட்டத்தையோ பாட்டாளி வர்க்க கண்ணோட்டத்தையோ அம்பேத்கர் ஏற்றுக் கொள்ளவில்லை. அந்த அளவிற்கு அவரது நடுத்தர வர்க்கக் குணம் அமைந்திருந்தது.

## இ. அம்பேத்கர் உருவாக்கிய அரசியல் சட்ட மாயை

> ஏகாதிபத்தியத்தையோ நிலவுடைமையையோ அம்பேத்கர் வன்முறை வழியில் எதிர்க்க விரும்பவில்லை. **அரசியல் சாசன வடிவிலான சீர்திருத்தங்கள்** வாயிலாக, ஒடுக்கப்படும் மக்களின் சிக்கல்களை தீர்க்க முடியும் என்ற நம்பிக்கையை உருவாக்கினார்... இது ஒடுக்கப்பட்ட மக்களிடையே ஒரு வித மாயையை உருவாக்கப் பயன்பட்டது என்பதே தோழர் கே. என். ஆர். மதிப்பீடாகும். இது குறித்து காண்போம்.

அம்பேத்கர் இந்திய அரசியல் சட்ட வரைவுக் குழுவின் தலைவராகவும் இருந்தார். முதல் காங்கிரசு அமைச்சரவையில் சட்ட அமைச்சராகவும் இருந்துள்ளார். இன்னமும்கூட அம்பேத்கர் சிலை எனில், கோட்டு சூட்டு அணிந்துகொண்டு ஒரு புத்தகத்தை (அது அரசியல் சட்டமாம்) கையில் வைத்துக்கொண்டிருப்பதுபோல அமைக்கப்படுகிறது. பாராளுமன்றத்தில் வைக்கப்பட்ட சிலை மட்டுமல்ல, கிராமங்களில் ஏழைத் தாழ்த்தப்பட்ட மக்களால் அன்போடு வைக்கப்படும் சிலையும் அதையே முன் மாதிரியாகக் கொண்டுள்ளது. ஆளும் வர்க்கம் திணிக்கும் மனோநிலைக்குக் கிடைத்த வெற்றி என்றுகூட இதைச் சொல்லலாம்.

> ஒவ்வொரு குடிமகனின் வாழ்வு நிலையையும் சுதந்திரத்தையும் அரசு பேணிக் காக்க வேண்டும். அதோடு சமூக, பொருளாதார, அரசியல் சமத்துவமின்மைகளை அரசு நீக்க வேண்டும். எல்லோரின் தேவைகளையும் நிறைவேற்றி அச்சத்தினின்று விடுதலை செய்வதாக அரசு அமைய வேண்டும்.

படிப்பகம்

padippakam



அரசு குறித்து இவ்வாறு அம்பேத்கர் குறிப்பிட்டுள்ளார்: இத்தகைய அரசு செம்மையாக நடைபெற வேண்டுமெனில் சட்டங்களின் ஆட்சியை அம்பேத்கர் வற்புறுத்துகின்றார். சட்டங்கள் தனிநபரின் சுதந்திரங்களைப் பறிக்காமல் இயற்றப் பட வேண்டும் என்கிறார். அம்பேத்கர் ஒரு தூய்மையான, பார பட்சமற்ற அரசை மனதில் கொண்டிருந்தார் எனத் தெரிகிறது.

ஆனால் சாதிய சமூகத்தில் அல்லது சாதிகளுக்கு இடையில் வர்க்க மாறுதல்கள் ஏற்பட்டுக் கொண்டு வரும் சமூகத்தில் அரசு பாரபட்சமானதாகவே இருக்கும். இதை ஏற்றுக்கொள்ளும் அம்பேத்கர் வலுவான சட்டபூர்வக் கிளர்ச்சிகள் மூலம் அரசு இயந்திரத்தை நடுநிலைப்படுத்த இயலும் என எண்ணினார். தாழ்த்தப்பட்ட மக்களின் ஒடுக்கப்பட்ட நிலைகளை முதலில் அவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டி கிளர்ச்சி வடிவிலான போராட்ட வடிவங்களை அவர்கள் மத்தியில் கைக்கொண்டார். மகத் குளம் நீர் எடுத்தல், காலாராம் கோயில் நுழைவு ஆகிய போராட்டங்கள் இத்தகைய தன்மையில் அமைந்தவை. பண் பாட்டு வாழ்வியல் சமத்துவத்துக்காக அவர் நடத்திய போராட் டங்கள் சட்ட அரங்கிற்குள் மட்டுமின்றி மக்களை எழுச்சியூட்டக் கூடிய கிளர்ச்சி வடிவங்களையும் மேற்கொண்டிருந்தன.

ஆனால் 1930களுக்குப் பின்னர் தாழ்த்தப்பட்டோரின் அரசியல் அதிகாரப் பங்கேற்புக்கும் பொருளாதார சிக்கல் களுக்கும் உரிய தீர்வுக்கு அவர் நடத்திய போராட்டங்கள் சட்ட அரங்கிற்குள் மட்டுமே அமைந்தன. எனினும் அவற்றுக்கு ஊக்கமளிக்கும் வகையில் பாராளுமன்ற வாதத்துக்கு அப்பாற் பட்ட மக்கள் திரள் இயக்கங்களையும் அம்பேத்கர் பயன்படுத்திக் கொண்டார். வாட்டன் தார் ஒழிப்புக்கு சட்டரீதியில் சிக்கல்கள் ஏற்படும் காலங்களில் மகார் வாட்டன் தார் மாநாடுகள் நடத்தி (1939 மற்றும் 1941) போராட்டத் தளத்தை மக்கள் தளத்துக்கும் விரிவு படுத்தினார். 1938இல் பம்பாய் மாகாணக் காங்கிரசு அரசாங்கம் தொழிற் தகராறு மசோதாவைக் கொண்டு வந்த பொழுது சுதந்திரத் தொழிலாளர் கட்சி சார்பில் நடத்தப்படும் போராட்டம் பாராளுமன்ற நெறிமுறைகளுக்கு உட்பட்டும் அமைந்தது; சட்டமன்றத்துக்கு வெளியில் தொழிலாளர்கள், உழவர்கள் ஆகியோரைத் திரட்டிப் பலம் பெறுவதாகவும் அமைந்தது.

அவரை அரசியல் சட்டவாதத்தின் வரம்புக்குள் மட்டுமே சுருக்கிக் காணும் போக்கை ஆளும் வர்க்கச் சிந்தனையாளர்கள்

படிப்பகம்

padippakam



திட்டமிட்டே உருவாக்கிக் கொண்டு வந்தனர். **எனது விருப்பத்துக்கு மாறாகவே நான் அரசியல் சட்ட வரைவுப் பணியில் ஈடுபட்டிருந்தேன்** என்று அம்பேத்கர் கைகழுவி விட்டாலும் அவர்கள் அவரைவிடத் தயாராக இல்லை. அது மட்டுமின்றி மாநிலங்களவையில் மத்திய உள்துறை அமைச்சரைப் பார்த்து அவர் இப்படிக் கூறினார்.

> அரசியல் சட்டத்தைக் கொளுத்தும் முதல் ஆள் நானாகத்தான் இருப்பேன் என்பதைக் கூற நான் தயார். எதுக்கு அது, வேண்டவே வேண்டாம். அது யாருக்குமே உகந்தது அன்று.

அம்பேத்கர் தன்மீது திட்டமிட்டு உருவாக்கப்பட்ட **எதிர்மறை அரசியல் படிமத்தை** உதறியெறிவதற்குக்கூட இன்னொரு நிலையில் நின்று இதைக் கூறியிருக்கலாம். எனினும் அம்பேத்கர் தன் இறுதிக் காலத்தில் **சம்யுக்த மகாராட்டிர சமிதியுடன்** இணைந்து போராடுமாறு தம் அமைப்பினரை வேண்டினார். இவை எல்லாவற்றையும் காணும் பொழுது **வன்முறை தவிர்த்த வடிவங்களை**—எது சாத்தியமானதோ அதை—அவர் கையாண்டுள்ளார் எனத் தெரிகிறது.

**இரானடேயின்** அரசியல் தத்துவம் பற்றி ஒருமுறை பின்வருமாறு அம்பேத்கர் குறிப்பிட்டுள்ளார்.

> அரசியல் பேச்சுவார்த்தைகளில் சாத்தியக் கூறுகளே பொது நியதியாக இருக்க வேண்டும். கிடைத்தது போதும் என திருப்தி படுவது அல்ல இதன் பொருள். எதிரியை வற்புறுத்தி மேன்மேலும் இணங்க வைப்பதற்கான பின்பலம் இல்லை என்று தெரிந்தபோது கிடைப்பதை நிராகரிக்கக் கூடாது என்பதே இதன் பொருள்.
>
> இரானடே கொண்டிருந்த இக்கருத்து மிகச் சரியானது என்று உறுதியாகச் சொல்லலாம். மூலக்கோட்பாட்டி சமரசம் இருக்கலாகாது. இருக்கவும் கூடாது. ஆனால் மூலக் கொள்கையை ஒப்புக்கொண்ட பின் தவணைகளில் பெறுவதை எதிர்க்கலாகாது. படிப்படியாக முன்னேறுதல் அரசியலில் தவிர்க்க முடியாத ஒன்றாகும் என்பதை ஒப்புக் கொண்டால் அதன் தீங்கு ஏதும் இல்லை.
>
> (ரானடே, காந்தி, ஜின்னா பற்றி அம்பேத்கர்)

படிப்பகம்

padippakam



இது இரானடேயின் நடைமுறை மட்டுமல்ல. இரானடேயின் நடைமுறையைச் சொல்லி அம்பேத்கர் தன் நடைமுறையை விளக்குகின்றார் என்பதே சரியாகும்.

படிப்படியாக முன்னேறுதல், பின்பலம் இல்லாத பொழுது கிடைத்ததைத் தக்க வைத்தல், மூலக் கோட்பாட்டில் சமரசமின்மை என்பனவற்றை இங்குக் காணலாம். அம்பேத்கரின் **மக்கள் திரள் அடிப்படை** (Mass Base) மற்றும் **அமைப்பு பலம்** என்பனவற்றோடு அம்பேத்கரின் செயல் தந்திரங்களைக் காண வேண்டும். **தாழ்த்தப் பட்ட மக்களின் அடிப்படை வர்க்கத்தின்** முன் முயற்சியைக் கட்டவிழ்த்துவிடக் கூடிய செயலூக்கமிக்க நடைமுறைகளை அம்பேத்கர் வழங்க இயலவில்லை. தாழ்த்தப் பட்ட மக்களின் நடுத்தர வர்க்கத்தின் சட்ட ரீதியிலான பங்கெடுப்பு முயற்சிகளைக் கட்டவிழ்ப்பதும் அவர்கள் தலைமையில் தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவரையும் செயலூக்கமிக்க அளவில் திரட்டுவதும் அம்பேத்கரியத்தில் உள்ளது. அனைத்து தாழ்த்தப் பட்ட மக்களுக்கான பண்பாட்டு சமத்துவப் போராட்டங்கள் சட்ட ரீதியாக அமைந்தாலும் செயலூக்கமிக்க கிளர்ச்சி வடிவத்தில் நடந்தேறின. ஆனால் அரசியல் பொருளாதார சீர்திருத்தங்களில் தாழ்த்தப்பட்டோரின் பங்கேற்புக்கான போராட்டங்கள் சட்ட மன்ற விவாதங்களின் ஊடாகவும், சட்டமன்றங்களில் தமக்குரிய பேர ஆற்றலை அதிகப்படுத்தக்கூடிய அளவுக்கு சட்ட மன்ற அமைப்புக்கு அப்பால் மக்களைத் திரட்டுவதன் ஊடாகவும் நடந்தேறின.

பன்முகப்பட்ட அம்பேத்கரியப் போராட்ட முறைகளில், ஆளும் வர்க்கம் தனக்குகந்ததை மட்டுமே எடுத்துக்கொண்டு அதையே அவரது முழுமையானதாக்கி அவர்மீது ஓர் **எதிர்மறைப் படிமத்தைப்** புகுத்தியது. அதன் வழி, போர்க்குணமிக்க தாழ்த்தப் பட்ட மக்களைத் தம் சிந்தனை மண்டலத்துக்குள் இழுத்துக் கொள்ள ஆளும் வர்க்கம் தொடர்ந்து முயர்சித்துக்கொண்டு வருகிறது. இதற்குத் தாழ்த்தப்பட்ட மக்கள் பலியாகிவிடக் கூடாது.அவர்கள் மட்டுமல்ல. பொதுவுடைமையரும்கூட.

## ஈ அம்பேத்கரின் மதமாற்றமும், ஏகாதிபத்திய அரசியலும்

இரண்டாம் உலகப் போருக்குப் பின் மக்களைப் பிரித்தாளுவதற்கு ஏகாதிபத்தியம் மதங்களைப்பயன்படுத்தியது.

படிப்பகம்

padippakam



இந்த யதார்த்தத்தை அம்பேத்கர் விளங்கிக்கொள்ள மறுத்து, புத்த சமயத்தில் இணைந்துள்ளார் என்பது தோழர் கே.என் ஆர். மதிப்பீடு. அதாவது இங்கும் கூட ஏகாதிபத்தியத்தின் புதிய காலனிய ஆதிக்க சூழ்ச்சிக்கு அம்பேத்கர் இரையாகி விட்டார் என்பதே அவரது உள்ளார்ந்த மதிப்பீடு ஆகும். இது குறித்துக்காண்போம்.

வாழ்வியலிலிருந்து சமயத்தைப் பிரித்துப் பார்க்க அம்பேத்கர் தயாராக இல்லை. தார்மீக ஒழுக்க மதிப்பீடுகளை சமயம் வரையறுத்து, சமத்துவம் நிறைந்த சமூக வாழ்க்கைக்கு சமயம் உந்துதலாக அமையும் எனஅவர் நம்பினார். சமயத்தின் மையம் கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையிலான கற்பனை உறவு என்பதை நிராகரித்து மனிதர்களுக்கு இடையிலான யதார்த்த உறவு என அவர் வலியுறுத்தினார். கடவுள் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்ட சமயங்களை அவர் நிராகரித்தார். மூடநம்பிக்கை உணர்வுகளை எதிர்த்து, பகுத்தறிவை சமயத்தின் உள்ளார்ந்த கூறாகக் கண்டறிந்தார். இந்நிலைபாட்டிலிருந்தே இந்து சமயத்தைக் கண்டறிந்ததால் அதன் சமத்துவமற்ற போக்கைக் கடுமையாகச் சாடினார். சமத்துவத்தையும், சாதி ஒழிப்பையும் நடைமுறைப்படுத்தி இந்து சமூகத்தைப் புனரமைக்கவேண்டும் என விரும்பினார். ஆனால் அவரது அனுபவங்கள் இந்து சமயம் திருத்தப்பட முடியாதது என அவருக்கு உணர்த்திய பின்னரே, 1935இல் சமய மாற்றத்துக்கு உரிய அறிவிப்பைக்கொடுத்தார்; 'இந்துவாக இறக்க மாட்டேன்' என்ற அறிவிப்பைக் கொடுத்தார் (பம்பாய் இலயோலா மாநாடு 13.10 35) இதை ஏகாதிபத்தியத்தின் வலைப் பின்னலாக கே.என்.ஆர். காணுதல் காரணப்பொருத்தமற்றதாகும். இதன் பின்னரே மதம் மாறினார்.

இந்து சமயத்தின் மீதான அவரது விமர்சனமே அவரை அதன் இயல்பான முடிவிற்குக் கொண்டு வந்து புத்த சமய நெறியில் இணைத்தது. அதே நேரத்தில் 1940-50களில் அவர் எதிர்கொள்ள நேர்ந்த மார்க்சியத்துக்கான எதிர்வினையாகவும் புத்த சமய மாற்றம் இருந்தது. சமத்துவம், சாதியம் அற்ற தன்மை ஆகியன கொண்ட சமய நெறியாக மட்டுமே அவர் புத்தமதத்தைக் காணவில்லை. பகுத்தறிவு வாதத்துக்கும், அனுபவவாதத்துக்கும் உட்பட்டதாகவும் கண்டறிந்தார். புத்த சமய நிறுவனங்களின் தனியுடமை ஒழிப்புச் சிந்தனை, புத்த சமயத்தின் வன்முறை மறுப்பு, அளவியல் மதிப்பு ஆகியன அவரைக் கவர்ந்தன.

படிப்பகம்

padippakam



அவரது சமய மாற்றத்தை மகாராட்டிரத்தில் அவரது மகர் சாதியைச் சேர்ந்த மக்களே பின்பற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த மத மாற்றத்தினால் ஏற்பட்ட எந்தவொரு விளைவும் ஏகாதிபத்தியத்தின் புதிய காலனிய ஆதிக்கத்துக்குப் பயனளிக்கவில்லை. அவரது சமய மாற்றத்துக்குரிய காரணங்களை இந்து சமயத்தின் சனாதன, சமத்துவமற்ற போக்குகளிலும் சமயம் குறித்த அம்பேத்கரின் புரிதல்களிலும் காண இயலும்.

## உ. அம்பேத்கரின் சீர்திருத்தவாதம்

காலனிய நீக்கம்- (Decolonialisation) சட்டரீதியிலான மாற்றங்கள், நல் வாழ்வு குறித்த கருத்தாக்கம் ஆகியனவற்றை ஏகாதிபத்தியம் பரப்பியது; இத்தகைய சீர்திருத்தவாதத்தை அம்பேத்கர் தேர்ந்தெடுத்தார். எனவே அவர் ஒரு **புரட்சியாளர் அல்லர்.** இவ்வாறு தோழர் கே.என்.ஆர். மதிப்பிடுகின்றார். இது குறித்து க்காண்போம்.

மேற்சொன்ன கருத்தாக்கங்களுக்கு ஏகாதிபத்தியம் கொடுத்த வரையறைகளிலிருந்து அம்பேத்கர் **மாறுபட்டும் மேம்பட்டும்** இருந்தார். ஏகாதிபத்தியமே மேலிருந்து படிப்படியாக அறிமுகப்படுத்துகிற காலனிய நீக்கத்தில் அவர் முழுமையாக உடன்பாடு கொள்ளவில்லை. அத்தோடு அடிமை மக்களின் போராட்ட முயற்சிகளினால் சுதந்திரம் துரிதமாகிறது என்பதையும் இணைத்துக்கண்டார். **மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் மக்களின் அதிகாரம்** என்ற கருத்தை மிகவும் வன்மையாக முன்வைத்தார்.

ஏகாதிபத்தியத்தையும், நிலவுடமையையும் இந்து சமயத்தையும் தாழ்த்தப்பட்ட மக்களின் குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களிலுள்ள நடுத்தரவர்க்கத்தின் கண்ணோட்டத்தில் கண்டார். இந்தியப் புரட்சியின் சனநாயகக் கட்டத்தின் அன்றைய நிலை, ஏகாதிபத்தியத் தரகு முதலாளிகள், பெருநிலவுடமையாளர்— இந்து சனாதனவாதிகள் ஆகியோரின் பிரதான அரசியல் இயக்கமான காங்கிரசின் முதலாளிய சமரச சீர்திருத்தவாத நிலை; 1925 முதற்கொண்டே இயங்கினாலும் ஏகாதிபத்திய நிலவுடமை எதிர்ப்பில் தொடர்ந்து சரியான நிலைபாட்டையும் குறிப்பான செயல் தந்திரங்களையும் எடுக்க இயலாமல் முடங்கிய பொதுவுடைமை இயக்கத்தின் ஊசலாட்ட

படிப்பகம்

padippakam



மான பலவீனநிலை; என இவற்றையெல்லாம் கணக்கில் கொண்டு பார்க்கையில் அம்பேத்கர் சீர்திருத்தங்களைப் பயன் படுத்திக் கொண்டவரெனினும் அவரை ஒரு சீர்திருத்தவாதி என்று அடையாளப் படுத்திவிட இயலாது. அவரது செயல் பாடுகளை முற்போக்கு சனநாயகம் (Radicalism) என வரையறுக்க லாம். அம்பேத்கரின் இத்தகைய போக்கை மேற்சொன்ன அரசியல் பொருளாதார நிலைமைகளிலும் தாழ்த்தப்பட்ட சாதி களின் நடுத்தர வர்க்க கண்ணோட்டத்திலும் காண முடியும். அவரது செயல் பாட்டின் வரம்பையும் இதில் காணமுடியும்.

சாதிய சமூகத்தில் வர்க்க மாறுதல்கள் ஏற்பட்டுக்கொண்டு வரும் நிலையில் தாழ்த்தப்பட்ட சாதிகளின் நடுத்தர வர்க்கக் கண்ணோட்டத்தின் விசேடத்தன்மையை அம்பேத்கரின் வரம்பு களில் காணவியலும். இதற்கும் தாழ்த்தப்பட்டோர் அல்லாத உயர் சாதிகளின் நடுத்தர வர்க்கத்தின் கண்ணோட்டத்துக்கும் வேறுபாடுகள் உண்டு. உயர் சாதியின் நடுத்தரவர்க்கத்தினர் நாகரிக சமூகத்திற்குள் புதியதாக நுழையவில்லை. இந்து சமூகம் அவர்களுக்கு அத்தகைய சமூக வாய்ப்பை ஏற்கெனவே சாதிய சமூகத்திலேயே கொடுத்துள்ளது. தொழில், அரசு, பண்பாட்டுக் கட்டமைப்புகளில் ஏற்கெனவே நாகரிக சமூகத்தில் உயர் சாதி யினர்க்கென பாதுகாப்பான இடங்கள் இருந்தன. ஆனால் தாழ்த்தப்பட்ட மக்கள் இத்தகைய நாகரிக சமூகத்திலிருந்து புறக்கணிக்கப்பட்டு எவ்விதப் பாதுகாப்பான இடமும் பெறாத நிலையில் ஒதுக்கிவைக்கப்பட்டிருந்தனர். பிரிட்டன் அரசின் நடவடிக்கைகளினால் இவர்களிலிருந்து சிறுவுடைமை வர்க்கம் உருவாயிற்று. இவர்கள் தமக்குரிய வரலாற்றுச் சூழலில் தமது போராட்டத்தினாலும் ஏனைய அரசியல் நிகழ்வுகளாலும் தமக்குப் புதியதாகக் கிடைத்திருக்கிற எந்தவொரு இடத்தையும் மிகக் கவனமாகப் பாதுகாத்து அதைத் தக்கவைத்து அதிலிருந்து மேலே செல்ல எத்தனிக்க நினைக்கும் இயல்பினர். இது தவிர்க்க இயலாதது.

அம்பேத்கரைப் பொறுத்து மூலக் கொள்கையில் சமரசம் கிடையாது. மூலக் கொள்கையில் முடிவு ஏற்பட்டுவிட்டால் அதைப் படிப்படியாகப் பெறுவதை எதிர்க்கலாகாது. 1920களில் கோயில் நுழைவு உரிமைக்காக அம்பேத்கர் சண்டையிட்டார். ஆனால் பூனா ஒப்பந்தத்துக்குப் பின்னர் இந்து உயர் சாதியில் ஒரு பிரிவினர் கோயில்களைத் திறந்துவிட இசைவு அளித்தனர். கோயிலைத் திறந்தால் மட்டும் போதாது. இந்து சமயத்தின்

படிப்பகம்

padippakam



நால்வருண பாகுபாட்டை ஒழிக்கவேண்டும் என அதன்பின்னர் 1933இல் அம்பேத்கர் குறிப்பிட்டார். சமூகத்தின் தாழ்த்தப்பட்ட மக்களுடைய நிலையைக் கணக்கிலெடுத்துக்கொண்டு அவர்களிடமிருந்து உருவெடுத்த சிறுவுடைமை வர்க்கக் கண்ணோட்டத்தில், பெற்ற புதியனவற்றை இழந்து விடாமல் தாழ்த்தப்பட்ட சாதியினரின் வாழ்வியலை உயர்த்தும் நோக்கம் அவரிடத்தில் காணப்பட்டது. எனவே அவரிடத்தில் முற்போக்கு சனநாயகப் போக்கு தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருந்ததைக் காண இயலும்.

"அன்றைய வரலாற்றுக் கட்டமைப்பிலும் அரசியல் சமூக சக்திகளின் தன்மைகளைக் கொண்டும் காணும்பொழுது முற்போக்கான சனநாயக இயக்கமாக அம்பேத்கரின் இயக்கத்தைக் காண்பதே பொருத்தமாகும். அதுவன்றி அவரை சீர்திருத்த வாதத்துக்குள் தள்ளி விட்டால், அம்பேத்கரியத்தையும் அதனால் உந்து விசைபெறும் தாழ்த்தப்பட்ட மக்களையும் இறுதி நிலையில் முதலாளிய சீர்திருத்த வாதத்துக்குள் நாமே தவறாக அமிழ்த்துவதில் போய் முடிந்து விடும்.

## 5. அம்பேதகரியத்தைக் காணும் முறை

அம்பேத்கர் மீதான தோழர் கே. என். ஆர். மதிப்பீடுகள் குறித்து இதுவரைக் கண்டோம். இதுவரையில் நாம் கண்ட கட்டுரைப் பகுதிகள் மீது சில கருத்துக்கள் முன்வைக்க வேண்டிய அவசியம் உள்ளது.

அ. தோழர் கே. என் ஆர். கட்டுரையின் தலைப்பு **அம்பேத்கரியம்: ஆளும் வர்க்கத்தின் ஒரு புதிய மாற்றுக் கருத்துருவம்** என்று உள்ளது.

இதில் டாக்டர் அம்பேத்கர் குறித்த மதிப்பீடும் சம காலத்திய அம்பேத்கரியப் போக்குகள் குறித்த மதிப்பீடும் உள்ளன. இவற்றில் எதை கே என். ஆர். ஆளும் வர்க்கத்தின் மாற்றுக் கருத்துருவம் என்கிறார்? இரண்டையுமா? அல்லது சம காலத்திய அம்பேத்கரியப் போக்குகளையா? தலைப்பைப் பொதுவாகப் போட்டுவிட்டு இரண்டு போக்குகளையும் சுட்டிக் காட்டிவிட்டுச் சென்றால் அம்பேத்கரியத்தையே ஆளும் வர்க்கத்தின் கருத்துருவமாகப் பதிய வைக்கிற ஒரு போக்கு மறைமுகமாக இதில் உள்ளார்ந்து இருப்பது தவிர்க்க இயலாது. ஆனால்

படிப்பகம்

padippakam



கட்டுரையின் பிற்பகுதியில் (ஜுன் 1994, பக். 22) சமூக மாறுதலுக்கான இயக்கத்தின் ஒரு பகுதியாக அம்பேத்கரைக் காண்கிறார். இந்நிலையில் தோழர் பாசுகரன் எழுதிய கட்டுரையொன்றில் (Red Star, October 1991) டாக்டர் அம்பேத்கர் இயக்கம் போன்றவற்றை முற்போக்கு சனநாயக இயக்கம் என மதிப்பிடுவதையும் இங்கு இணைத்துக் காண வேண்டும் இப்படித் தெளிவாகக் கூறாத ஒரு மயக்க நிலை கே. என். ஆர். கட்டுரையின் தலைப்பில் உள்ளது.

ஆ. வரலாற்றுச் சூழலிலும் முழுமையாகவும் அம்பேத்கரை மதிப்பிடவேண்டும் என கட்டுரையின் முற்பகுதியில் கே.என்.ஆர். குறிப்பிட்டு உள்ளார். ஆனால் அவை பற்றிய விளக்கங்கள் போதுமான அளவில் இல்லை. ஏகாதிபத்தியம், அரசியல் சட்டம், விவசாயப் புரட்சி ஆகியன குறித்த அம்பேத்கரிய அணுகுமுறைகள் வரலாற்றுச் சூழலில் மட்டுமின்றி வர்க்கக் கண்ணோட்டத்திலும் விளக்கப்பட்டிருக்க வேண்டும். இங்கு அம்பேத்கரியத்தின் வர்க்கக் கண்ணோட்டம் குறிப்பிடப்படவேயில்லை. அது பொதுவாகவே ஆய்வுக்குள் தவிர்க்கப்பட்டிருப்பதாகவே தென்படுகிறது.

இ. ஏகாதிபத்தியக் காலத்தில் அதன் உலகளாவிய யுத்த தந்திரப் போக்கை நாம் ஒப்புக்கொள்ளும் நேரத்தில் எந்தவொரு காலனிய, அரைக் காலனிய, நவ காலனிய நாட்டிலும் நடைபெறும் எல்லா சம்பவங்களையும் ஏகாதிபத்திய சதியாக பார்க்கும் மனநிலை கட்டுரையின் பொதுப் போக்காக உள்ளது. ஒரு நாட்டின் அகநிலை சக்திகளுக்கு இடையிலான முரண்பாடுகளைக் கணக்கிலெடுக்க இது மறுத்து விடுகிறது. அசாமியர் கிளர்ச்சி எனினும், பஞ்சாபில் தேசிய இன எழுச்சி எனினும், எல்லாமுமே ஏகாதிபத்திய சதி என அடையாளமிட்டுவரும் மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சியின் போக்கை இது நினைவுபடுத்துகிறது. வரலாற்றுச் சூழலை முழுமையாகக் காணவேண்டும். வர்க்கக் கண்ணோட்டத்தை அடையாளம் காணவேண்டும். அதேநேரத்தில் அம்பேத்கரிடம் இயங்கிய தாழ்த்தப்பட்டோரின் சுயமரியாதைக்கான சாதிய மனநிலையை அடையாளம் காண வேண்டும் நாம் இப்படிக் கண்டிருந்தால் 'சதி' முத்திரைகளைக் குத்த வேண்டிய அவசியம் நேர்ந்திருக்காது.

இந்து மதத்திலிருந்து அம்பேத்கர் புத்த சமயத்துக்கு மாறியதை ஏகாதிபத்தியத்தின் பிரித்தாளும் உலகளாவிய யுத்த தந்திர வலைக்குள் வைத்துக் காண்பதைவிட இந்து சமயத்

படிப்பகம்

padippakam



துக்குள் உள்ள சாதிய முரண்பாடுகளிலும் புத்த சமயம் குறித்து, அம்பேத்கரின் புரிதலிலும் அம்பேத்கரை சரியாக விளங்கிக் கொள்ள மறுத்த டாங்கேயிஸ்டுகளின் அரசியல் தவறுகளிலும் காண்பதே பொருத்தமானதாகும். அதுபோல் அம்பேத்கரின் பன்முகப்பட்ட போராட்ட வடிவங்களில் சட்ட வடிவிலான போராட்டத்தை மட்டுமே அவருடையதாகக் காண்பதுகூட குறுக்கப்பட்ட மதிப்பீடாகவே உள்ளது. அதே நேரத்தில் அவரின் பன்முகப்பட்ட போராட்ட வடிவங்கள் வன்முறை மறுப்பில் அமைந்ததற்கான காரணத்தை அன்றைய தாழ்த்தப்பட்ட சாதியின் வர்க்கக் கண்ணோட்டத்தின் மூலமே சரியாகக் கண்டறிய இயலும்.

ஈ, அம்பேத்கர் போன்று இந்திய முற்போக்கு சனநாயக இயக்கச் செயல் வீரர்களை மதிப்பிடுகிற பொழுது ஒரு பொதுவுடைமைக் கட்சியின் ஏற்ற, இறக்க வரலாற்று அனுபவங்களோடு இணைத்து மதிப்பிடலே இன்னமும் பலனளிக்கும்.

காந்திய அணுகுமுறைக்கு அம்பேத்கரியம் ஒரு புரட்சிகர மாற்றாக எப்போதும் இருக்கவியலாது எனக் கூறும்பொழுது, காந்தி காலத்திலும், அம்பேத்கர் காலத்திலும் இருந்த பொதுவுடைமையரின் அணுகுமுறைகளோடு பொருத்திப் பார்த்து இது எந்த விதத்தில் அமைந்திருந்தது எனவும் கே. என். ஆர். குறிப்பிட்டிருக்க வேண்டும் இந்த விதத்தில் பொதுவுடைமையர்கள் சுய விமர்சனத்தோடு அணுகுதல் வேண்டும். சுயவிமர்சனம் எனில் தவறுகளை ஒப்புக் கொள்வது மட்டுமல்ல. ஸ்டாலின் ஒருமுறை குறிப்பிட்டதைப் போல தவறான புரிதல்களுக்கு அடிப்படையாக உள்ள பொருண்மைக் காரணிகளைக் கண்டறிதலும் அவற்றைச் சரியாக விளங்கிக் கொள்வதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ளுதலும் ஆகும். இத்தகைய இணைப்போடு அம்பேத்கரியத்தை விளங்கிக் கொள்ள வேண்டும்.

## 6. சம காலத்திய போக்குகள் பற்றி கே. என். ஆர். மதிப்பீடு

தோழர் கே. என். ஆர். தன் கட்டுரையை இத்தோடு முடித்து விடவில்லை. அதன் இரண்டாம் பகுதி சம காலத்திய அம்பேத்கரியப் போக்குகளை மதிப்பிடுகின்றன. அவை:

படிப்பகம்

padippakam



அ. குடியரசுக் கட்சி முதற்கொண்டு பகுஜன் சமாஜக் கட்சி வரை எல்லா அம்பேத்கரிய இயக்கங்களும், அம்பேத்கரை விமர்சனக் கண்ணோட்டத்தில் காணாமல் விசுவாசக் கண்ணோட்டத்தில் காண்கின்றன. அவரது சீர்திருத்தவாத நிலைபாடுகளை உயர்த்திப் பிடித்து அதைத தாண்டிச் செல்ல மறுக்கின்றன. இந்த அமைப்புகள் இட ஒதுக்கீட்டை வலியுறுத்துகின்றன. ஆனால் ஏகாதிபத்திய சார்பான பொருளாதாரக் கொள்கைகளால் வேலை வாய்ப்புகள் பெருகாத சூழலிலும்—இட ஒதுக்கீடு இல்லாத தனியார் துறை பெருகிக்கொண்டு வரும் சூழலிலும் எந்தவொரு அம்பேத்கரிய இயக்கமும் புதிய காலனியக் கொள்கையை அமுல்படுத்தும் நரசிம்மராவ் அரசின் கொள்கையை எதிர்க்கவில்லை.

ஆ. சட்ட வாதத்தை இக்கட்சிகள் முழுமையாகப் பயன்படுத்துகின்றன. தான் ஆட்சிக்கு வந்தால் சாதி அமைப்பை அரசியல் சட்டம் கொண்டு ஒழித்து விடுவேன் எனக் கன்சிராம் குறிப்பிடுகின்றார். ஏகாதிபத்தியம், தரகு அதிகார வர்க்க முதலாளியம், நிலப்பிரபுத்துவம் ஆகியனவற்றுக்கு இந்த அரசதிகாரம் சேவை செய்கிறது. பகுஜன் சமாஜக் கட்சி அரசாங்கத்தைக் கைப்பற்றினால், இந்த அரசதிகாரம், தாழ்த்தப்பட்டோருக்கு சேவை செய்யும் என்பது அபத்தமாகும்.

அம்பேத்கரியர்களின் வீராவேசமான வாய்ச் சவடால்கள் எதுவாக இருப்பினும் நிலத்துக்கான போராட்டங்களில் அவர்கள் ஈடுபட மறுக்கின்றனர். பாராளுமன்றத்தோடு முடங்கிக் கொள்கின்றனர். ஏகாதிபத்திய — நிலவுடைமை எதிர்ப்புப் போராட்டங்களிலிருந்து ஓடி ஒளிந்து கொள்கின்றனர்.

இ. தாழ்த்தப்பட்டோர் — பிற்பட்டோர் — ஆதிவாசி — சிறுபான்மையோர் ஆகியோர் அடங்கிய கூட்டணியை அம்பேத்கரியத்தின் எல்லா 'பிராண்டுகளும்' வலியுறுத்துகின்றன. இது ஆளும் வர்க்க மாற்று ஆகும். இந்தியா முழுக்க இருக்கும் அம்பேத்கரியர்கள் ஆளும் வர்க்க அரசியலின் பகுதிகளாக உள்ளனர்.

ஈ. அனைத்தையும் பொதுவுடைமையர்கள் வர்க்கமாகக் குறுக்கிக் கொள்கின்றனர் என அம்பேத்கரியர் குறிப்பிடுகின்றனர். 1947க்கு முன் வர்க்கப் போராட்டத்தை வெறும் பொருளாதாரப் போராட்டமாக குறுக்கிக் கண்ட டாங்கேயிஸ்டுகளின் அணுகுமுறையை மட்டுமே கம்யூனிச அணுகுமுறையாகக் குறிப்பிட்டு அவர்கள் அவ்வாறு விமரிசிக்கின்றனர். வர்க்கப்

படிப்பகம்

padippakam



போராட்டமே சாதிய சிக்கல் உட்பட அனைத்தையும் தீர்க்கும் என்ற இயந்திர மயமான அணுகுமுறையே இதுவாகும். ஆனால் பொதுவுடைமை அகிலம் முன்மொழிந்த வர்க்கப் போராட்டம் குறித்த அணுகுமுறை இதிலிருந்து அடிப்படையில் மாறுபட்டது. கேரளா போன்ற இந்தியாவின் பகுதிகளில் பருண்மையாக அதை நடைமுறைப் படுத்தியதை அம்பேத்கரியர்கள் விவாதத்துக்கு எடுத்துக் கொள்வது இல்லை. 1970இல் உருவான இ. பொ. க. மார்க்சிய லெனினிய அமைப்பின் திட்டத்தில் சாதிய ஒழிப்பு உள்ளிட்ட சமூகப் புரட்சிக்கான செறிவான அணுகுமுறை உள்ளது. இதை அம்பேத்கரியர்கள் கணக்கில் கொள்வது இல்லை. இத்தகைய மார்க்சிய விரோத நிலைபாடுகளைத் தொடர்ந்து வலியுறுத்துவதால் தாழ்த்தப்பட்டோரைப் புரட்சிகரப் பாதை யிலிருந்து விலக்கி, ஆளும் வர்க்கத்தின் பின்னே அவர்களை அணி திரளச் செய்கின்றனர்

உ. ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலவுடைமை எதிர்ப்பு ஆகிய நிலைபாடுகளைப் புறக்கணித்தல்; எல்லாச் செயல்களையும் அரசியல் சட்ட வாதத்துக்குள் முடக்குதல், விவசாயப் புரட்சியைப் புறக்கணித்தல்; அனைத்து அடிப்படையான சமூகப் பொருளாதார சிக்கல்களோடு சாதிய சிக்கலின் தீர்வை இணைக்க மறுத்தல்; மார்க்சிய நிலைபாடுகளை தாக்குதல்; என இத்தகைய நடைமுறைகளின் மூலம் அம்பேத்கரிய அமைப்பு களும், இத்தகைய அம்பேத்கரியத்தை உயர்த்திப் பிடிப்பதாக உரிமை கொண்டாடும் அனைவரும், செயலளவில், **ஆளும் வர்க்க அரசியலுக்கு சேவை செய்கின்றனர்.**

ஊ. இத்தகைய அம்பேத்கரியத்தின் செல்வாக்கிலிருந்து விடுபட்டு சில அமைப்புகள் மார்க்சிய லெனினிய சிந்தனையை உயர்த்திப் பிடித்துள்ளன. குறிப்பாக வட கர்நாடகப் பகுதியில் இயங்கும் **தலித் சங்கர்ஷ் சமிதி** அமைப்பின் ஏகாதிபத்திய நில வுடைமை எதிர்ப்புப் போராட்டங்களின் அனுபவங்கள் குறிப் பிடத்தக்கன.

தோழர் கே. என். ஆரின் மேற்கண்ட கருத்துக்களைப் பற்றி இனிக் காணலாம்.

# 7. சமகாலப் போக்குகள் மீதான விமரிசனப் பார்வை

சமகாலத்திய அம்பேத்கரியப் போக்குகள் மீதான விமரி சனத்தில் தோழர் கே. என். ஆரின் குவிமையம், பாராளுமன்ற வாத நடைமுறையிலான அமைப்புகள் மீது—அதிலும் கன்சி

படிப்பகம்

padippakam



**ராமின் பகுஜன் சமாஜக் கட்சியின்** மீது உள்ளது. இது குறித்து தனி யாகக் காண்பதே சரியானதாகும். பிற்பட்ட மற்றும் சிறு பான்மை இனத்தவர் பணியாளர் கூட்டமைப்பாகத் (B A M-C E F-1978) தொடங்கி பின்னர் தாழ்த்தப்பட்டோர் மற்றும் சுரண்டப்பட்டோர் போராட்டக் குழு (Dalit Soshit Samaj Sangharsh Samita—Ds. 4, 1981) என விரிவாகிப் பின்னர் இது பகுஜன் சமாஜ் கட்சியாக (1984) உருமாறியது. 1985இல் தேர்தலில் இக்கட்சி நிற்கத் தொடங்கி 1993 நவம்பரில் உத்திரபிரதேச சட்ட மன்றத்திற்கான தேர்தலில் 68 இடங்களைப் பெற்றது. முலாயம் சிங் யாதவின் **சமாஜ்வாடி கட்சியுடன்** இணைந்து கூட்டணி அரசாங்கம் அமைத்தது. ஆனால் அதன் பின் நடந்த **கர்நாடகம், ஆந்திரம், குஜராத், ஒரிசா, மகாராஷ்டிரம்** ஆகிய மாநில சட்ட மன்றத் தேர்தல்களில் குறிப்பிடத்தக்க தோல்வியை இக்கட்சி அடைந்துள்ளது. இப்போது மாயாவதி.

இக்கட்சி, ராவ் அரசாங்கத்தின் நெருக்கடி காலங்களில் அவரை ஆதரிக்கிறது. இக்கட்சியிடம் ஏகாதிபத்திய எதிர்ப்பு திட்டம் இல்லை. உ. பி. கூட்டணி அரசு, புதிய பொருளாதாரக் கட்டமைப்பைப் பின்பற்றி 9 சர்க்கரை ஆலைகளைத் தனியார் மயமாக்கியது. நிலவுடைமைக்கு எதிரான போராட்டமோ, நிலத் துக்கான போராட்டமோ எதையும் அது திட்டமாக்கிக் கொள்ள வில்லை. சாதிய மோதல்களில் கூட்டணி அரசாங்கம் உயர் சாதியத் தன்மையோடு விளங்குகிறது.

இன்றைக்கு ஒரு சீட்டு, இரண்டு சீட்டு கூட மிகவும் முக்கிய மாக இருப்பதனால் சிறிய கட்சிகளையும் தரகு முதலாளியம் தன் வலைப் பின்னலுக்குள் இழுத்துக் கொள்ளுதல் தவிர்க்க இயலாத தாகி விடுகின்றன. தரகு முதலாளி **ஜெயந்த்-மல்கோத்ரா** என்பவன் சனதாக் கட்சியின் புரவலராக இருந்து, பின்னர் சந்திரசுவாமி என்ற ஆன்மீகத் தரகனுக்கு நெருக்கமாகி, வி. பி. சிங் அரசைக் கவிழ்த்து, ராஜீவ் ஆசியுடன் காங்கிரசில் இணைந்து அதன் முதல்தர அதிகாரத் தரகனாக மாறி இப்போது அதிலிருந்தும் விலகி பகுஜன் சமாஜக் கட்சியின் சார்பில் மாநிலங்களவைக்கும் போட்டியிட்டு வென்றான். எந்தக் கட்சியையும் விழுங்கக்கூடிய தரகர்கள வலையில் பகுஜன் சமாஜக் கட்சி உள்ளது என்பதை இதன் மூலம் உணரலாம். பகுஜன் சமாஜக் கட்சி இந்திய அளவில் ஒரு முன்மாதிரியாக வளர இயலாது உத்திரபிரேதசத்தில் சில குறிப்பான நிலைகளில் ஆளும் கட்சியாக வளர்ந்துள்ளதைக்கூட

அ—3

படிப்பகம்

padippakam



ஆளும் வர்க்கத் தரகர்கள் தம் வலைப் பின்னலுக்குள் இறுக்கிக் கொள்ளும் அளவுக்கு பகுஜன் சமாஜக் கட்சி உள்ளது என்பதே யதார்த்தம்.

அதே நேரத்தில் இக்கட்சி ஏனைய மாநிலங்களில் அல்லாமல் உத்திரபிரதேசத்தில் மட்டுமே ஒரு குறிப்பிடத்தக்க அளவுக்கு 1993 நவம்பர் தேர்தலில் வளர்ச்சி பெற்றதற்கான சூழ்நிலைகள் குறிப்பிடத்தக்கவையாகும். தேர்தல் கட்சியொன்றின் வளர்ச்சிக்குப் பல காரணங்கள் உண்டு. **ரெட்ஸ்டார்** இதழ் (டிசம்பர் 1994, பக். 19) குறிப்பிடுவது போல. சாதி, சமய உணர்வு, பண செல்வாக்கு, குறுகிய பிற்போக்கு உணர்வுகள், அடியாள் பலம், அரசாங்க அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்துதல் ஆகியவை தேர்தல் வெற்றியில் மிக முக்கியமான செல்வாக்குச் செலுத்துகின்றன. உண்மையான பிரச்சினைகளிலிருந்து திசை திருப்பவும் போலிப் பிரச்சினைகள் மீது கவனத்தைக் குவிக்கவும் ஆன சேவையை இன்றைய தொடர்பு சாதனங்கள் செய்கின்றன. தேர்தல் அரசியல் என்றாலே தில்லுமுல்லு அரசியலாகும். அதே நேரத்தில் தேர்தல் காலத்தில் தம் உணர்வை வெளிப்படுத்த மக்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைக்கிறது. **எந்தத் திருடரைத் தேர்ந்தெடுப்பது என்பதே அதுவாகும்**. மேலும் ஆளும் அரசாங்கத்தின் மீது தமக்குரிய வெறுப்பையும் மௌனமாகப் பதிவு செய்யவும் வாய்ப்பு உள்ளது.

இப்போது எல்லாத் தேர்தல் கட்சிகளுமே சாதி, சமய உணர்வு, பண பலம், அடியாள் பலம், பிற்போக்கு உணர்வு என எல்லாவற்றையும் **சரிநிகராகக்** கொண்டுள்ளன. எல்லாத் தேர்தல் கட்சிகளுக்குமே தொடர்பு சாதன பலம் உண்டு. இந்திய அரசியலில் இனிமேல் முழுமுற்றான **புதிய** அரசியல் கட்சியோ, அரசியல்வாதியோ தோன்றுவது சாத்தியமே இல்லை. வெண்மை நிறம் ஏழு நிறங்கள் ஆவதைப் போல இந்த நிறங்களுள் ஒன்றோ, பலவோ, சில விகிதச் சேர்க்கைகளில் எண்ணிக்கையற்ற நிறங்கள் ஆவதைப் போல இந்திய அரசியலில் தேர்தல் கட்சிகள் உருவாகலாம். ஆனால் ஒரு குறிப்பிட்ட தேர்தலில், ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில், ஒரு குறிப்பிட்ட காலத்தில், ஒரு குறிப்பிட்ட கட்சியை மக்கள் தேர்ந்தெடுத்தலுக்கு சில காரணங்கள் உண்டு.

உத்திரபிரதேசத்தில் மற்ற எல்லா மாநிலங்களைவிட இசுலாமியர் மக்கள் சதவீதமும், (23) தாழ்த்தப்பட்ட மக்கள் சதவீதமும் (21.8) அதிகம், அதாவது உ. பி. மொத்த மக்கள் தொகையில் 44.8 சதவீதம் 1960 களுக்குப் பின்னர் ஏற்பட்ட

படிப்பகம்

padippakam



பொருளாதார நெருக்கடிகளால் பிற்பட்ட சாதியிலே ஏற்பட்ட அணிச் சேர்க்கைகளில் அவற்றில் ஓர் உயர் பிரிவினரும், ஒரு நடு நிலைப் பிரிவினரும் தோன்றினர். தாழ்த்தப்பட்ட சாதியினரும் பிற்பட்ட நடுத்தர சாதியினரும் இணையத்தக்க அளவில் பொருளாதார மாற்றங்கள் ஏற்பட்டன. இந்த இணைப்பை வெளிப்படுத்துவதாக பகுஜன் சமாஜக் கட்சியின் அறிமுகம், வளர்ச்சி ஆகியன காணப்படுகின்றன. பகுஜன் சமாஜக் கட்சியில் தாழ்த்தப்பட்ட வகுப்பின் சாமர் சாதியினரே அதிக சட்ட மன்ற உறுப்பினர்களாக இருப்பினும் மாநிலக் கட்சிக்கும், சட்டமன்ற பிரிவுக்கும் பிற்பட்ட வகுப்பின் குர்மி சாதியரே தலைவராக உள்ளார்.

இந்துப் பெருமத வாதத்தால் கிளப்பப்பட்டுள்ள வகுப்பு வாதத்துக்கு எதிரான உணர்வுகள் ஒருங்கிணைவதற்கு ஒரு தளம் தேவைப்பட்டது. 1991 இல் அறிவிக்கப்பட்ட மண்டல் குழு பரிந்துரைகளுக்கு எதிராகப் பார்ப்பனர் தலைமையிலான கலகம் எழுந்தது. இதற்கு எதிராகப் பிற்பட்ட சாதிகள் ஒருங்கிணையும் தேவை ஏற்பட்டது. பாரம்பரிய இடதுசாரிக் கட்சிகள் மிகவும் பலவீனமாக இருக்கும் பகுதிகளாக உத்திர பிரதேசம் உள்ளது. ஏற்கெனவே சனதாக் கட்சி மாதிரியையும் மக்கள் தேர்ந்தெடுத்த தாகிவிட்டது. இத்தகைய சூழலில் பாபர் மசூதி இடிப்புக்குப் பின்னரும் முன்னரும் கட்டவிழ்த்துவிடப்பட்ட பார்ப்பனர் தலைமையிலான இந்துப் பெருமதவாத உணர்வை பிற்பட்ட சாதிகள்—தாழ்த்தப்பட்ட சாதிகள்—இசுலாமிய சமூகத்தினர் ஆகியோர் எதிர்க்க வேண்டிய அவசியம் உள்ளது. இந்நிலையில் (நவம்பர்-டிசம்பர் 1993) நடந்த தேர்தலில் மொத்தம் 425 இடங்களில் காங்கிரசு (28 இடங்கள்) சனதாதளம் (27) ஆகிய கட்சிகளின் ஆதரவுடன் முலாயம் சிங்கின் சமாஜ் வாடிக் கட்சியும் (109) பகுஜன் சமாஜ் கட்சியும் (67) இணைந்து சிறுபான்மை அரசாங்கத்தை நடத்தின. அங்கு தனிப் பெரும்பான்மை கட்சியாக பாரதீய சனதாக்கட்சி (17.) உள்ளது.

இது அங்கு அன்றிலிருந்த நிலை. மக்கள் தொகையில் தாழ்த்தப்பட்ட சமூகத்தினர், முசுலீம் சமூகத்தினர் ஆகியோர் கூட்டுத்தொகை கணிசமாக இருத்தல்; 1960 களுக்குப் பின் ஏற்பட்ட சமூகப் பொருளாதார மாற்றங்களால் பிற்பட்ட சாதிகளுக்கு இடையில் ஏற்பட்ட பொருளாதார வேறுபாடுகள்; பார்ப்பனர் தலைமையிலான இந்து உயர்சாதியினர் தூண்டிய இந்துப் பெருமதவாதம் கடுமையாதல்; இடதுசாரி இயக்கங்களின் செல்வாக்கின்மை; இதற்கு முன்னரே சனதாதளக் கட்சி பதவி ஏற்று

படிப்பகம்

padippakam



தனி நபர் மோதல்களினால் அமைப்புச் சீர்குலைவாதல்; என்ற இன்னோரன்ன குறிப்பான காரணங்களினால் அங்கு இந்தக் கட்சிகளின் கூட்டணி அரசாங்கம் ஏற்பட்டது. அது 1993 டிசம்பர் நிலை. அங்கேயே 1993 சூலையில் நடந்த பாராளுமன்றத் தேர்தலில் சமாஜ்வாடிக் கட்சியும் பகுஜன் சமாஜ் கட்சியும் தலா 3 இடங்களை மட்டுமே பெற்றன.

இப்போது நிலைமை தலைகீழாகிப் போய்விட்டது. பகுஜன் சமாஜக் கட்சிக்கும் சமாஜ்வாடி கட்சிக்கும் இடையிலான உறவு அறுந்துபோய், பகுஜன் சமாஜக்கட்சி, பாரதீய சனதாக் கட்சியின் ஆதரவு பெற்று ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது. இந்தியாவின் முதல் தாழ்த்தப்பட்டோர் பெண் முதலமைச்சரைப் பெறக்கூடிய வாய்ப்பு உத்திரபிரதேசத்துக்குக் கிடைத்துள்ளது.

பாரதீய சனதாக்கட்சி பார்ப்பனியக்கட்சி, இந்துப் பெரு மதவாதக் கட்சி, மனுதர்மக் கட்சி என்ற விமரிசனங்களுக்கெல்லாம் இப்போது இடமில்லை என்ற வகையில் பகுஜன் சமாஜ் கட்சி அதனோடு சேர்ந்து அதன் ஆதரவைப் பெற்று சிறுபான்மை அரசாங்கத்தை நடத்துகின்றது. இதுவரை செயல்பட்ட மூலாயம் சிங் ஆட்சியும் இப்போது செயல்படும் மாயாவதி ஆட்சியும் எந்தவிதமான மக்கள் நலத்திட்டங்களையும் மிகக் கடுமையாக நிறைவேற்றும் என்ற கனவுகள் நமக்கு வேண்டியதில்லை. ஆட்சிக்கு வந்தால் சாதியை ஒழிப்பேன் எனக் கன்சிராம் அன்று சொன்னார். அதுவே அபத்தமாகும். இன்றைக்கு அவர் கட்சியின் ஆட்சியே உத்திரபிரதேசத்தில் நடைபெறும் வாய்ப்பு உள்ளது. மனுதர்மக் கட்சியான பாரதீய சனதாக் கட்சியின் ஆதரவில் செயல்படும் உத்திரபிரதேச அரசு சாதியத்தை ஒழிக்கும் என்பது யாரும் நினைக்க வேண்டாத ஒன்று.

ஒரு பெண் முதல்வராக வந்துவிட்டால் ஆணாதிக்கம் ஒழியும் என்பதோ தாழ்த்தப்பட்டோர் அதிகம் கொண்ட ஒரு கட்சி ஆட்சிக்கு வந்துவிட்டால் சாதியம் ஒழியும் என்பதோ சுவாரசியமான கற்பனைகள் ஆகும். நீண்ட காலம் முதல்வராக இருப்பதில் சாதனை செய்யும் மார்க்சியப் பொதுவுடைமைக் கட்சியின் **ஜோதிபாசு** அரசாங்கம், தரகு முதலாளிய, பெரு நிலவுடைமைத்துவ, உயர்சாதிய இந்துப் பெருமதவாத சமூகக் கட்டமைப்புக்கு **இறுதி சேவகம்** செய்வதைப் போலவே எந்த அரசாங்கமும் இருக்க இயலும். திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் **அண்ணாதுரை** மீது பல விமரிசனங்களைக் குறிப்பிட்டாலும், ஒரு விதத்தில் நேர்மையாக இருந்தார். ஆட்சியைக்

படிப்பகம்

padippakam



கைப்பற்றினால் அனைத்தையும் சாதித்து விடலாம் எனக் கனவுகளில் மிதந்த தமிழக இளைஞர்களுக்கு, தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கங்களின் செயல் வரம்பை அவர் அம்பலப்படுத்தியதை அரசியல் நேர்மையாகக் குறிப்பிடலாம் அண்ணாத்துரை தம்மை சூழ்நிலையின் கைதி என வருணித்துக் கொண்டார்.

1993-க்கு முன்னும் அதன் பின்னும் ஏற்பட்டுவரும் அரசாங்க மாற்றங்கள் நமக்கு மீண்டும் மீண்டும் ஒன்றை அம்பலப்படுத்திக் கொண்டிருக்கிறது. இந்த அரசாங்கக் கட்டமைப்புக்குள்—மார்க்சியத்தை ஏற்றுக் கொண்ட பொதுவுடைமையரோ சாதியத்தால் ஒடுக்கப்பட்டுவரும் தாழ்த்தப்பட்ட சாதியினரோ ஆணாதிக்கத்தால் மோசமான அவலத்துக்கு உள்ளான பெண்ணோ என யாரும் உள்நுழைந்து அதைப் பயன்படுத்தினாலும் தரகு முதலாளிய-பெருநிலவுடைமை அரசுக்கட்டமைப்புக்கு எதிரான செயல்களை செய்ய யாராலும் இயலாது. செய்யவும் முடியாது.

ஆனால் இங்கே நாம் இன்னொன்றையும் கண்டறிந்தாக வேண்டும். அரசதிகாரக் கட்டமைப்பில் சட்டமியற்றும்பிரிவிலும் (Legislature) அதிகாரத்துவப் பிரிவிலும் (Executive) பார்ப்பனர் உட்பட்ட உயர் சாதியினரே மேலாதிக்கம் கொண்டு விளங்குகின்றனர். குறிப்பாக உத்தரப்பிரதேசத்தில் கல்வி வருமானம் தொழில் சொத்துடமை ஆகியனவற்றில் (இதை சமூகப்பொருளாதாரத்தகுதி—Socio Economic states என்பர்.) பார்ப்பனரே முதல் இடத்தில் உள்ளனர். அரசியல் ஈடுபாடு. அரசியல் பதவிகளில் பங்கெடுப்பு என்று அரசியல் துறையில் பார்ப்பனர் இரண்டாம் இடத்தில் உள்ளனர் உத்தரபிரதேசத்தில் உள்ள 400 இந்திய ஆட்சிப்பணி அதிகாரிகளில் (I.A.S) 105 பேர்கள் பார்ப்பனராக உள்ளனர் (1987ஆம் ஆண்டு விவரம்). இப்படி பார்ப்பனரும் உயர் சாதியினரும் மேலாதிக்கம் வகிக்கும் சூழலில் பிற்பட்டசாதிகள் / தாழ்த்தப்பட்ட சாதிகள் / சிறுபான்மையினர் ஆகியோரிடமிருந்து இத்தகைய சட்டமியற்றும் பிரிவுகளிலும் அதிகாரத்துவப் பிரிவுகளிலும் பொறுப்பாளர்கள் உருவாகி வரக்கூடிய சூழலை நாம் செயல் தந்திர அளவில் வரவேற்க வேண்டியுள்ளது.

இந்த அரசுக் கட்டமைப்பில் பார்ப்பனராயினும் பறையராயினும் யார் முதல்வராக வந்தாலும் யார் அதிகாரியாக வந்தாலும் இந்த சமூக கட்டமைப்புக்கே இறுதி சேவகம் செய்ய இயலும். இந்த உண்மையைத் தொடர்ந்து சொல்லிக்கொண்டே வரும் நேரத்தில் இதுவரை வரலாற்றில் வாய்ப்பு மறுக்கப்பட்ட

படிப்பகம்

padippakam



பகுதிகளிலிருந்து பொறுப்பாளர்கள் உருவாகி வருதலை இந்த சமூக அமைப்புக்குள்ளேயே வரலாற்றின் முன்னோக்கிய நகர்தலாகவே காண இயலும்.

குடியரசுத் தலைவராக தாழ்த்தப்பட்டவர் வருவதாலேயே நாடு சனநாயக சமத்துவமாகி விடாது என்பது உண்மையே. ஆனால் குடியரசுத் தலைவராக தாழ்த்தப்பட்டவர் வரலாமா, வேண்டாமா என நாட்டில் உள்ள எல்லாக் கட்சிகளும்—பொதுவுடமைக் கட்சி உட்பட— விவாதித்தன. இறுதியில் அவை மறுத்தன. இதில் பொதுவுடமைக் கட்சிகள் அம்பலப்பட்டுப் போயின. நாடு இன்னமும் சாதியம் ஒழிந்த சமூகமாக இல்லை என இதன் மூலம் நிரூபித்துக் கொண்டாகி விட்டது.

தாழ்த்தப்பட்டோரிலிருந்து உருவாகி வரும் இத்தகைய சக்திகளை ஆளும் வர்க்கம் முற்றாகத் தன் வலைக்குள் இழுத்துக் கொள்வதைத் துரிதப்படுத்துவதாக நமது விமரிசனம் அமைந்து விடக்கூடாது என்பதல்ல இங்கு வலியுறுத்தப்பட வேண்டிய கருத்து. வரலாற்றில் இதுவரை வாய்ப்பு மறுக்கப்பட்டவர்களுக்கு பாராளுமன்றவாத வரலாறு வழங்கும் வாய்ப்புகளை அளவு ரீதியிலான முன்னோக்கிய நகர்தலாகக் கண்டு வரவேற்கும் அதே நோக்கில் சட்டவாதத்தில் அமிழ்ந்து விடக்கூடிய அவர்களின் செயல்களையும் அவர்களைத் தம் வலைப்பின்னலுக்குள் இறுக்கிக் கொள்ளும் ஆளும் வர்க்க முயற்சிகளையும் அம்பலப்படுத்தவேண்டும் ஆரோக்கியமான அடுத்த கட்ட அரசியல் நகர்த்தலுக்கு இது பயன்படக்கூடிய வாய்ப்புண்டு.

மேலும் இவர்கள் அம்பேத்கரியத்தின் சட்டவாத அணுகுமுறையை மட்டுமே உயர்த்திப் பிடித்துக்கொண்டு வருகின்றனர் என்பதை விமரிசனக் கண்டோட்டமாகக் காணவேண்டும். அம்பேத்கர் வீரிய மிக்க முறையில் செயலூக்கமான கிளர்ச்சிகளுக்கு மக்களை எழுச்சி கொள்ளச் செய்துள்ளார். சனாதன எதிரிகளுக்கு எதிராக தைரியமிக்க அச்சுறுத்தல்களைக் கொடுத்துள்ளார். அவரது சட்ட ரீதியிலான செயல்பாடுகள் கூட மக்கள் திரள் வழிப் போராட்டங்களின் மூலம் அவர் பெற்ற பலத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தன. இதை நாம் அதிகமாக வலியுறுத்தவேண்டும். ஆளும் வர்க்கம் அம்பேத்கரை அரசியல் சட்ட வாதத்துக்குள் முடக்கும் ஒரு எதிர்மறைப் படிமத்தை திணிக்கிற பொழுது நாம் இத்தகைய எதிர்ப்புணர்வுப் படிமத்தை அம்பேத்கருக்கு வழங்க வேண்டும்.

படிப்பகம்

padippakam



தோழர் கே.என்.ஆர் சமகால அம்பேத்கரியத்தின் ஒரு போக்கிற்கு மட்டும் அதிகமான அழுத்தம் கொடுத்துள்ளார். மேலும் அத்தகைய பாராளுமன்றவாதப் போக்கையே குறிப்பான வரலாற்றுச் சூழலில் விமர்சனக் கண்ணோட்டத்துடன் காணாமல் முற்றாக எதிர் மறையாக மட்டுமே காணும் போக்கு கே.என்.ஆரிடம் உள்ளது. அந்தப் போக்கின் தலைமையைச் சாடி அம்பலப்படுத்துவதற்குப் பதில் அதன் கீழ் திரட்டப்பட்ட சமூகத்தினரையும் சேர்த்து ஒதுக்கிவிடக்கூடிய விளைவையும் இது ஏற்படுத்திவிடுகிறது. இது தாழ்த்தப்பட்டவர்களுக்கும் மார்க்சிய லெனினியர்களுக்கும் இடையிலான இடைவெளியை மேலும் அகலப்படுத்திவிடும் அபாயம் கொண்டதாகும்.

சம காலத்திய அம்பேத்கரியத்திடம் இன்னொரு போக்கையும் காணலாம். அம்பேத்கர் நூற்றாண்டுக்குப் பின்னர் இந்தப் போக்கின் வளர்ச்சி வீதம் அதிகமாகி உள்ளது. அம்பேத்கரின் மக்கள் திரள் போராட்டப் பாதைக்கு முதன்மை கொடுத்து தாழ்த்தப்பட்டோருக்கு உரிய அரசியல்—சமூக சுயமரியாதைக்கான போராட்டங்களை செயலூக்கமிக்க விதத்தில் முன் வைக்கும் இந்தப் போக்கை ஏற்கெனவே மகாராட்டிரத்தில் செயல்பட்ட **தலித் பேந்தர்** அமைப்பில் காணலாம்.

இந்த அமைப்பின் அறிக்கை மட்டுமல்ல இவர்களின் செயல்பாடுகளும் ஜனநாயகப் புரட்சிக்கு உகந்தனவாக இருந்தன. நிலப்பிரபுத்துவ முதலாளிய எதிர்ப்பு நிலைகளைக் கொண்ட தலித் பேந்தர் இயக்கம் போலீஸ் அடக்குமுறைகளைச் சந்தித்ததோடு, மக்கள் நீதிமன்றங்களை அமைத்து மக்கள் விரோதிகளைத் தண்டித்தது. நிலப்பறி—தானியப் பறி இயக்கங்களை நடத்தியது; தொழிலாளர் வேலை நிறுத்தத்தை ஆதரித்தது; இந்து மதக் குறியீடுகளை உடைத்து நொறுக்கியது; தேர்தல் புறக்கணிப்புகளை அமைப்பு ரீதியாகச் செய்தது. இத்தகைய தலித்பேந்தர் இயக்கம், அம்பேத்கரியத்தின் முற்போக்கு சனநாயகப் பரிணாமத்தின் வளர்நிலை. வட கிழக்குப் பகுதியில் 1970களின் தொடக்கத்தில் தோன்றிய மார்க்சிய லெனினிய இயக்கத்தின் செல்வாக்கை தலித்பேந்தரின் தோற்றத்தோடு இணைத்துக் காண்பது சரியாக இருக்கலாம்.

இத்தகைய இயக்கத்தை 1980களில் காங்கிரசு தன் ஆட்சி அதிகாரத் துணைகொண்டு சிதறடித்தது. எனினும் இத்தகைய பின்னடைவுக்கான பிரதான காரணங்களை தலித்பேந்தர் அமைப்பிலும் சனநாயக, புரட்சிகர சக்திகளின் பலவீனத்திலும்

படிப்பகம்

padippakam



காணவேண்டும். தாழ்த்தப்பட்ட சாதிகளிடத்தில் தோன்றி வரும் நகர் மயமான சிறுவுடைமை வர்க்கம் எந்த அளவுக்கு தன் சனநாயகக் கண்ணோட்டத்தை விரிவுபடுத்தி தாழ்த்தப்பட்ட மக்களின் சுயமரியாதைக்கான போராட்டத்தில் சமரசங்களையும் சந்தர்ப்ப வாதங்களையும் மேற்கொள்ளாமல் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துகின்றதோ அந்த அளவுக்கு இயக்கத்தின் பலம் இற்றுவிடாமல் இருக்கிறது. ஏனெனில் தாழ்த்தப்பட்டோர் இடையே தோன்றிய தொழிலாளர் வர்க்கம் இன்னமும் சுயேச்சை யாகவோ, சுய அமைப்பாகத் திரளக் கூடியதாகவோ உருப்பெற வில்லை. தாழ்த்தப்பட்டோரில் ஆகப் பெரும்பான்மையான கூலி விவசாயிகள் தம் வர்க்க உணர்வை அடக்கி வாசிக்கும் படியாகவே தாழ்த்தப்பட்ட சாதிகளின் சிறு நிலவுடைமையாளர் களால் கட்டுப்படுத்தப்படுகின்றனர். இத்தகைய இரண்டு இயக்கங் களுக்கு இடையிலான உள் முரண்களில் சிறுவுடைமை வர்க்கத்தின் நலன்களே இறுதிச் சுற்றில் வெளிப்பட்டு விடும். இதற்கு ஏற்ற நிலைமை இன்றைய அளவில் இருப்பதே இத்தகைய சிதறுதலின் பிரதான காரணமாகும்.

1980களில் இத்தகைய இயக்கங்கள் பின்னடைவுக்கு உள்ளாக நேரிட்டாலும் 1990களில் அம்பேத்கரியத்தின் இத்தகைய போக்கின் வளர்ச்சியை மீண்டும் காண இயலும். 1970களில் தோன்றிய கர்நாடக தலித் சங்கர்ஷ் சமிதி ஆளும் வர்க்கத்தின் சதி வேலைகளால் பல குழுக்களாக உடைந்து போயிற்று. எனினும் அதிலிருந்து உருவான தலித் சங்கர்ஷ் சமிதி (ஒருங் கிணைப்புக் குழு) மக்கள் திரள் போராட்டங்களில் ஈடுபட்டு புரட்சிகர இயக்கத்தை வலிமை பெறச் செய்ய அறைகூவல் விடுக் கிறது.

1990களுக்குப் பின் தமிழகத்திலும்கூட இத்தகைய போர்க் குணமிக்க அமைப்புகளைக் காண இயலும். இந்தியத் தலித்பேந்தர் இயக்கம், தியாகி இமானுவேல் பேரவை, மனித உரிமை இயக்கம் இன்னும் இவை போன்ற இயக்கங்களில் இளைஞர்கள் திரள கின்றனர். போர்க் குணமிக்க போராட்டங்களில் பங்கெடுக் கின்றனர். இ. பொ. க, மா. லெ. அமைப்பின் வினோத் மிசுரா குழுவைச் சேர்ந்த தமிழக மக்கள் முன்னணி அமைப்புடன் இணைந்து தாழ்த்தப்பட்ட அமைப்புகள் பல தேவகோட்டை, திருவாடனை ஆகிய பகுதிகளில் சமத்துவ வாழ்வுரிமைக்காகவும் பண்பாட்டு உரிமைக்காகவும் 1990களில் இருந்து நடத்திக் கொண்டு வரும் போராட்டங்கள் குறிப்பிடத்தக்கவை. இவை

படிப்பகம்

padippakam



யெல்லாம் பகுதி அளவிலும், மிகச் சிறிய அளவிலும் தொடர்பு அறுந்த தன்மையிலும் செயல்படும் இயக்கங்களாக உள்ளன எனினும், நாட்டின் சனநாயகப் புரட்சிக்குத் தம்மளவில் பணி ஆற்று பவையாகவும் இவை உள்ளன.

இன்றைய அம்பேத்கரியர்கள், டாங்கேயிஸ்டுகளின் அணுகு முறையை கம்யூனிச அணுகுமுறையாகக் கொண்டு விமர்சிக் கின்றனர் என்றும், அப்படி விமர்சிப்பது தவறு என்றும் கே. என். ஆர். குறிப்பிடுகின்றார். இது குறித்துக் காண்போம்.

அம்பேத்கரின் மராட்டியச் சூழலில் அவருக்கு முன்னால் டாங்கேயிசமே வலிமையான கோட்பாடாக இருந்தது. அம்பேத் கர் காலத்தில் அம்பேத்கர் கம்யூனிசத்தை விளங்கிக் கொள்வதி லும் விமர்சிப்பதிலும் பல உள்முகக் காரணிகளை நாம் கண்டறிந் தாலும் மராட்டிய டாங்கேயிசம் ஒரு பாதிப்பைச் செலுத்தியது வரலாற்று உண்மை. ஆனால் இன்று நிலைமைகள் மாறி உள்ளன.

1970களின் தொடக்கத்தில் உருவாகிய மார்க்சிய லெனினிய அமைப்பு பல்வேறு நடைமுறை அனுபவங்களுக்குப் பின் பல குழுக்களாகச் சிதறிய சூழலில் சாதியம், சாதிய ஒழிப்பு ஆகியன குறித்து பல்வேறு செயல் தந்திரங்களை உருவாக்கிச் செயல் பட்டுக் கொண்டு வருகின்றன. தாழ்த்தப்பட்ட சாதியினரைத் தம் உறுப்பினர்களாக்கியும், தலைமையினராக்கியும் உள்ளன. தம் அமைப்பு பலத்தோடு அல்லது தாழ்த்தப்பட்ட அமைப்பு களோடு இணைந்து போராடிக் கொண்டிருக்கின்றன எனவே பம்பாய் மாகாணத்தில் தொழிற்சங்க வாதத்தை மையமாகக் கொண்டு 1930களில் செயல்பட்ட டாங்கேயிசத்தைக் கொண்டு இன்றைய பொதுவுடைமையர்களை மதிப்பிடல் பொருந்தாது என கே. என். ஆர். கூறுதல் மிகவும் சரியாகும்.

இன்றைய மார்க்சிய லெனினியத்தின் நிலைபாடுகளை சம கால அம்பேத்கரியர்கள் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ள வேண்டும். ஆனால் இதுவரை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை என்பதை அம்பேத்கரியர்களின் மார்க்சிய விரோத நிலைபாடாகவும் ஆளும் வர்க்கத்தின் பின்னால் தாழ்த்தப்பட்டோரை அணி திரளச் செய்யும் அரசியல் சதியாக வும் கே. என். ஆர். மதிப்பிடல் தவறாகும்.

**விவாதத்துக்கு எடுத்துக் கொள்ள வேண்டிய தேவையை விளக்குவதில் நிதானமும் பொறுமையும் இன்றியமையாதன ஆகும்.**

படிப்பகம்

padippakam

# உண்மையே வெளியேறு!

விழி ப. இதயவேந்தன்

எதையும்
எங்கும் வெளிப்படையாகப் பேசாதே.

விமர்சனம்
சுயவிமர்சனம் எதுவும் கவைக்கு உதவாது.

உண்மைகளை
மூட்டைக்கட்டி மூடிப் பேசக் கற்றுக்கொள்.

ஒன்றை இன்னொருவரிடம் சொல்லி
மேலும் விரிவாக்காதே.
சுருக்கமாய்
உண்மைகளை கற்பழி,
அல்லது குழிதோண்டிப் புதை.

சமூகம்,
வட்டாரம் இவைகளிலிருந்து தப்பித்து
ஒரு போலி உறவை சம்பாதித்துக் கொள்.

நீ நீயாக இருக்க முயற்சிக்காதே
மனித நேசங்களுக்கு ஏற்ப
அவ்வப்போது பச்சோந்தியாய் மாறிக்கொள்.

சமூக அந்தஸ்து
சதா வராது; இருக்கும்வரை அனுபவி.

உன் எண்ணம்,
சிந்தனை முழுவதும்
மேல் வர்க்கத்தோடு அடிக்கடி ஒத்துப்பார்.
குறிப்பாய்
நீ நீயாக இருக்கிறாயோ இல்லையோ
உன்னை
உன் சுயரூபத்தை வெளிப்படுத்திக் கொள்ளாதே

படிப்பகம்

padippakam



எழுத்து, சிந்தனை,
வாழ்க்கை எல்லாவற்றையும்
நாகரீகமாக்கி
சமூகத்தின் எல்லாக் கட்டுகளிலிருந்தும்
விடுவித்துக்கொள்.

உன்னை
உன் மோசமான சூழலிலிருந்து காப்பாற்றிக்கொள்.
எதையும் சொல்லத் தயங்கு.
நாகரீகமானவற்றை மட்டும் நயம்பட பேசு,
எழுது, விற்றுக் காசாக்கு...
என்ன வேண்டுமானாலும் செய்.

அப்போதுதான்
நீ மதிக்கப்படுவாய் —
குறிப்பிட்ட சிலரால் மட்டும்.

---

# வினவு

— பழமலய்

"எங்க ஆண்ட" என்று சொல்லி
பொங்கல் பானை கேட்டுக்
காலில் விழுவார்கள்.

உழைப்பவர்கள் முன்னால்,
நிமிர்ந்து கொண்டு நிற்பதற்கு
வெட்கமாய் இருக்காது?

கால்மேல் கால் போட்டுக்கொண்டும்
வாயில் வைத்துப் புகைத்துக்கொண்டும்
இளைப்பாறி இருப்பவர்கள்,
முதலாளி வரப் பார்த்து,
எழுந்து நின்று ஒதுங்குவார்கள்.

விடைத்துக் கொண்டே நுழைவதற்கு
மனசை உறுத்தாது?

தாம், ஒருத்தரை ஒருத்தர்,
யாராக நினைக்கணும்?

படிப்பகம்

padippakam



மூட்டையைத் தூக்கிக் கட்டிக் கொண்டாள்.

''வண்ணாத்தி... வண்ணாத்தி...''

இரட்டைக் குரல் காதருகில் கிசுகிசுத்தது. உடம்பு வெடவெடக்க 'ஆயா... மாரியாயா...' என்று மனசு முணுமுணுத்தது. எந்தப் பக்கமும் திரும்பிப் பார்க்காமல் நடையைக் கட்டினாள்.

''வண்ணாத்தி, வண்ணாத்தி...
வண்ணாத்தி, வண்ணாத்தி...
வண்ணாத்தி, வண்ணாத்தி...''

குழுப் பாடகர்களின் தொண்டையைத் தகரத்தால் அறுத்ததுபோல, நாராசமாய்க் குரல்கள் வந்தன. வட்டமிட்டுச் சுற்றிலும் கண்களை ஓட்டினாள். ஒன்றும் தெரியவில்லை. மூட்டையின் மேல் யாரோ உட்கார்ந்து கொண்ட மாதிரி, கனம்அழுத்தியது. பிசாசுகளின் குரல்தான் இது. எப்போதும் ஒண்டியாய் வருபவர்களைக் கோட்டி பண்ணுவதில் பிசாசுகளுக்குத் தனி உற்சாகம். குரல்களின் ஓரத்தில் லேசாய் சிரிப்பு ஒட்டிக்கிடந்ததை உணர முடிந்தது. 'தூய் தூய்...' என்று சத்தமிட்டாள். நடுக்கத்தோடுதான் குரல் எழுந்தது. இனி இதையொன்றும் சட்டைசெய்யாமல் நடப்பதுதான் நல்லது. மரத்தின் உள்ளிருந்து வெளியேறுவதற்குள் சிரிப்பு பொழிந்தது. பற்கள் அவள் உறுப்புகளைக் கவ்விஇழுக்கக் கூசின. சிலிர்த்து அண்ணார முயன்றாள். தடித்த கிளைகளில் திடீரென ஆங்காங்கே தலைகள் முளைத்தன. அவள் பார்ப்பதைக் கண்டதும் மாயமாய் மறைந்தன. சிரிப்பு மட்டும் எதிரொலித்தது. அடித்தொண்டையில் எகத்தாளமிட்டது ஒரு குரல்.

''வண்ணாத்தீ...''

அதேசமயம் ஆலம்பழம் ஒன்று சொத்தென்று அவள் மூட்டைமேல் விழுந்து தேங்கி நின்றது. பொத்துக்கொண்டது போல மறுபடியும் சிரிப்பு. எங்கோ ஒரு மூலையில் இருந்து 'ஹ்ஹேஹே...' என்று ஒற்றைப் பழிப்புச் சிரிப்பு. அதற்கு அனுசரணையாய் மொத்தச் சிரிப்புகள். கோமாளித் தலை கொண்ட ஒன்று ஆலம்பழத்தை வீசியது. அது சரியாக அவள் தலைமேல் வந்து விழுந்தது. உடனே புழுத்த ஆலம்பழங்கள் கல்மாரியாய் அவள் மேல் விழுந்தன. தலையைக் குனிந்து கொண்டு அவள், மூட்டை எகிற வெளியே ஓடுவதைக் கண்டு கெக்கலி கொட்டியது சிரிப்பு.

''வண்ணாத்தி... வண்ணாத்தி...''

என்றபடி மரத்தின் மேல் இருந்து தலைகள் குதித்துப் பாய்ந்தன. பெரிதும் சிறுசுமாய் ஏழெட்டுக் குட்டிப்பிசாசுகள். விழுதுகளைக குஞ்சி ஊஞ்சலாடின. சந்தோசம் கொண்டு கத்தின. இதுவரை வேண்டும் என்றே ஒளிந்து கிடந்தது போலப் பறவைகளும் சேர்ந்து கொண்டன. மரத்தை விட்டுத் தடத்துக்கு ஓடிவந்து ஆசுவாசம் கொண்டாள். வெயில் நிழலைவிடக் குளுமையாயிருந்தது. ஊதிப் பெருத்து மூட்டை கனம் கூடியிருந்தது. கல்லை வைத்துக் கட்டியிருப்பதுபோல

படிப்பகம்

padippakam



நெஞ்சில் ஏறியது. ஓடிவந்ததில் மூச்சிரைத்தது. தப்பித்து வந்து விட்ட நிம்மதி. கழுத்தை ஒடித்துத் திரும்பிப் பார்த்தாள்.

சந்தோசம் நிலைக்கவில்லை. பின்னாடியே மிதந்து வந்தன அவைகள். குதிப்பும் ஆட்டமும் வெண் புழுதிக்குள் கால்கள் அற்றுப் போயிருந்தன.

''வண்ணாத்தி வண்ணாத்தி...

வண்ணாத்தி வண்ணாத்தி...''

ஓடுவது போல நடந்தாள். திரும்பிப் பார்க்கவில்லை. குரல்களை வைத்தே அவற்றின் அண்மையை உணர்ந்தாள். இப்போது, வந்து மேலே விழுந்தவை ஆலம்பழ அளவிலிருந்த கற்கள். சில கற்கள் மண்டையில்பட்டு எகிறின. புடைத்துக் கொண்டும் ரத்தம் கசிந்தும் வலி கூடிற்று. தொட்டுப் பார்க்கவும் முடியவில்லை. அதற்குமேல் வேகம் கூட்டி ஓட முடியவில்லை. கால்கள் பின்னிச் சோர்ந்தன. மூட்டை எகிறி எகிறி முதுகில் விழுந்தது. எங்கும் வெண்புழுதி சூழ்ந்தது. மூச்சுவிட முடியவில்லை. குரல்கள் தேய்வது போல இருந்தது. திரும்பினாள். புழுதிக்குள் எதுவும் தெரியவில்லை. என்றாலும் துரத்துவது நின்றுவிட்டதை உணர்ந்தாள். வெயிலின் தகிப்பு, புழுதியின் சூடு தாங்காமல் அவை நின்றிருக்கலாம்.

மெல்ல அடி வைத்தாள். தொண்டை தகித்தது. வேர்வையைத் தான் குடிக்க வேண்டும். இந்த வயசுக்கு இப்படி ஓட்டமும் நடையும் தாளாது விழுந்து விடுவது போலக் கால்கள் சோர்ந்தன. தடத்துக்கு கொஞ்சம் விலகி, பனை மரத்து நிழல் ஒன்று, அதன் காலடியில் கிடந்தது. ஓய்ந்து, அதில் உட்காரப் போனாள். மூட்டையைத் தளர்த்தி தொப்பென்று போட்டு, அதன் மேலேயே உட்கார்ந்து கொண்டாள். கண்களுக்குப் படலமாய் எதிரில் தெரிந்தன. புழுதியும் காற்றும். அவற்றில் மிதந்து வந்தன குரல்கள்.

''வண்ணாத்தி... வண்ணாத்தீ...

வண்... ணாத்...தீ... வண்ணாத்தீ...

இனி ஓட முடியாது. குரல்கள் மெல்ல உயர்ந்து அருகணைநதன. ஒரு கணத்தில் ஏதோ ஞாபகம் வந்தவள் போல், காலில் இருந்த தோல். செருப்பைக் கழற்றிக் கையில் பிடித்துக் கொண்டாள். 'தூய்... தூய்... ஒடுங்கடா பெசாசுக் கழுதைவளா' என்று சத்தம் கொடுத்தாள். செருப்புக்குப் பயந்து குரல்கள் ஒடுங்குவதாய்த் தோன்றியது. 'தூய்... தூய்...' என்று நடுக்கமில்லாமல் சத்தம் எழுப்பத் தொடங்கினாள்.

— O —



படிப்பகம்

padippakam

# ஒரு பிரகடனம்

—இரா. நடராசன்

என் கண்ணெதிரே உங்களின்
'ஆச்சார'க்கல்லில் காலம் காலமாய்
துவைக்கப்பட்டு வரும்
'ரத்தம் சிந்தி'களோடு ஒருவனாய்
கைகோர்த்துக் கொள்கிறேன்.

எதற்காகவென தெரியவில்லை
உங்கள் கூட்டத்தில் உங்களில்
ஒருவனாக உங்களோடு வந்து
பிறக்க நேர்ந்து விட்டது.

'அதிகாரி' அப்பா, அப்பாவி அம்மா
அன்பைத் தவிர
வேறெதுவும் இங்கெனக்கு
பிடிக்கவில்லை.

பட்டம் விட்டு பம்பரம் ஆடி
சுற்றித் திரிந்த வீதியெங்கிலும்
உங்களின் பல நூற்றாண்டு கால
'முகவரி' எனக்கு கிடைத்த நாளில்
என் அறிதலில் ஓங்கி என்னை
அறைந்தது யதார்த்தம்.

எதை கற்பிக்கலாம் எனக்கு என
முடிவெதையும் நீங்கள்
மேற்கொள்ளும் முன்பாக
உங்களிடம் எதையுமே
கற்பதில்லையென எனக்குள்
முடிவாயிற்று.

'தோத்திர' பாடம் வேதபாராயணம்
மறந்து விட்டு வண்டியோட்டி சிங்காரம்
சாணி தட்டும் எலங்காலி யாத்தா
நெல்லு மூட்டை சுமந்து வந்த கோயிந்து,
தோட்டக்கார தாத்தா;
எனக்கு முத்தம் கொடுக்கக் கூட

படிப்பகம்

padippakam



'நீங்கள் பார்த்து விடுவீர்களோ' எனப் பயந்த
தொரைசாமி கோனார்.
இவர்களோடு கழிந்தது கால் சட்டை காலம்.

நாய் கழுத்து பட்டைபோல உடம்பில்
அறியாத பருவத்தில் உங்களால்...
இழுத்துக் கட்டப்பட்டிருந்த
கயிற்றுப் பாம்பினை உங்கள் முன்னிலையிலேயே
அறித்தெறிந்து விட்டு நான்
மானுடனாகிய போதிலும்...

ஒரு வைர்ாக்கியத்தின் உந்துதலால்
உங்கள் கழிவறையை முன்னின்று
கழுவிய வேளையிலும்...
துக்கம் வருட தோள் கொடுத்து
எலங்காலி யாத்தாவை
காடு சேர்த்து விட்டு நான்
திரும்பிய நாளிலும்...

கொடிதூக்கி உண்டியல் குலுக்கி
தோழர் சகிதம் ஊர்வலம் போய்
போஸ்டர் வொட்டி திரிந்து விட்டு
அம்மா ரகசியமாய் கதவு திறந்த
நடுநிசியில் 'மாட்டி'க் கொண்ட நேரத்திலும்......
தயாராய் நீங்கள் வைத்திருந்த சொற்கள்:
ஈஸ்வரா... பிராமண
வம்சத்தையே அழிக்க
இப்படி ஒரு பிசாசு வந்து வாச்சிருக்கு''

இந்த பூமி உருண்டையில்
எல்லா மூலைகளிலும், வரலாற்றின்
அத்தனை பக்கங்களிலும்
'பாட்டாளி வர்க்கம்' என்று
பட்டம் பெற்றவர்களை

உங்கள் வீட்டு வாசல் கதவு
கீழ்ச்சாதியினன் எனச் சொல்லி
அறைந்து சாத்தப்படும் இந்த
நீசத்தனம் தொடரும் வரை
வம்ச அழிப்புகள் குறித்தும்
எமக்கு ஆட்சேபணையில்லை.

படிப்பகம்

padippakam



உங்கள் கூட்டத்தில் உங்களில்
ஒருவனாக உங்களோடிருந்து
நான் சாக விரும்பவில்லை.
செவிகளை கூச்சத்தோடு நீங்கள்
பொத்திக் கொள்ளும் முன்
முகத்திலடித்தாற் போல
உரக்கச் சொல்கிறேன் கேட்டுக் கொள்வீர்
''எனக்குள் எங்கும்
பஞ்சமர் ரத்தம்''

□

---

கலை மக்களைச் சார்ந்தது. அதன் வேர்கள் உழைக்கும் மக்களிடத்தில் மிகவும் நெருக்கமாகவும் ஆழமாகவும் ஊன்றப்பட வேண்டும்.

**— லெனின்**

பூர்சுவா இலக்கியங்களை ஆதரிப்பவர்கள் நிகழ்காலத்தைக் கொலை செய்தவர்கள் ஆவார்கள். நிகழ்காலத்தைக் கொலை செய்வதன் மூலமாய் அவர்கள் எதிர்காலத்தையும் கொலை செய்கிறார்கள். எதிர்காலம் என்பது இனிமேல் வர இருக்கும் நமது சந்ததியர்க்கு உரியது. அவர்களுக்கு உரியதான எதிர்காலத்தையும் கொலை செய்ய இவர்களுக்கு என்ன யோக்யதை இருக்கிறது?...

**— லூ-சுன்**

மக்களை நம்பு... அவர்கள் புதியன படைக்கும் ஆற்றல் மிக்கவர்கள். அந்த ஆற்றலில் நம்பிக்கை வை. மண்டியிட்டுக் கிடக்கும் அவர்களை எழுந்து நிமிர்ந்து நிற்க உதவி செய்: அவர்களை அணுகி அவர்களோடு நீயும் நட.

**— மார்க்சிம் கார்க்கி**

படிப்பகம்

padippakam

சென்ற இதழ் தொடர்ச்சி...

# இல்மஸ் குணே

—யமுனா ராசேந்திரன்

**எனக்குக் குளிருகிறது**
**பாரிஸ் கம்யூன் தோழர்களின் போர்வையை எனக்கு**
**போர்த்துங்கள்**

இல்மஸ் குணேயின் மறைவினால் மூன்றாம்உலக சினிமாவுக்கு மிகப்பெரிய சோகம் நிகழ்ந்திருக்கிறது. தனித்துவமான, இலட்சக்கணக்கான மக்களைச் சென்றடைந்த வெகுஜன இடது சாரி சினிமாவின் பிதாமகன் அவன். இடது சாரி கலை இலக்கிய சினிமா வரலாற்றுக்கு நேர்ந்திருக்கும் இன்னொரு மகத்தான சோகம் அவருடைய படைப்புக்கள் துருக்கி ராணுவ அடக்கு முறை அரசினால் அழிக்கப்பட்டு விட்டன என்பதுதான். வெளி நாடுகளுக்குக் கடத்தப்பட்ட அவருடைய 10 படங்களைத் தவிர, (இதில் The Herd, Yol, The Wall மூன்றும் அடங்கும்) பிற அவரது 300க்கும் மேற்பட்ட படங்கள் அழிக்கப்பட்டுவிட்டன. இல்மஸ் குணே சினிமா இயக்குனர். கம்யூனிஸ்டு போராளி. துருக்கி மக்களின் கதாநாயகன். குணேவின் மூன்று படங்கள் தான் மேற்குலகுக்கு பரவலாகக் காணக் கிடைத்த படங்கள். மற்றவை பார்க்க கிடைப்பது மிகமிக அரிது. குணே பற்றிய மேற்கத்தியர்களின் பார்வையும் இந்த மூன்று படங்களில் அடிப்படை கொள்கிறது.

குணேவின் படைப்புகளில் பல்வேறு பார்வையுடையோர் பல்வேறு தனித்தன்மைகளைக் காண்கிறார்கள். பிரபஞ்சமான குறியீட்டுத் தன்மை, யதார்த்தத்தை மறுபடைப்புச் செய்யும் அவர் பாணி, அரசியலின் சாராம்சத்தை மனித உறவுகளுக்கிடையில் வெளியிடும் நுட்பத்தன்மை, இயற்கைக்குள் முகிழ்த்த மனிதர்கள் என இவ்வாறு அற்புதமான கலாசிருஷ்டிக்குத் தேவையான அனைத்துக் கூறுகளையும் இவர் படங்களில் தரிசிக்கிறார்கள். கிராமியம் சார்ந்த சூழலில் வடிவமைக்கப்பட்ட சித்தாந்தம் அவரது இளமைக்கால் உலகநோக்கு. தனது பள்ளி நாட்களி

படிப்பகம்

padippakam



லேயே ஒரு சிறுகதை எழுதியதற்காக ராணுவத்தினால் கைது செய்யப்பட்டார். ஆரம்ப காலததில் தான் சந்தித்த கம்யூனிஸ்டு கள் அனைவருமே தனக்கு ஏமாற்றத்தையே தந்தார்கள் என்கி றார் குணே. தனது திரைப்படங்கள் உலகத் திரைப்பட விழாக் களில் பரிசு பெற்ற ஏற்பு விழாக்களில் தன்னை அவர் எப்போ துமே ஒரு கம்யூனிஸ்ட்டு என்றும் மார்க்ஸிய, லெனினியவாதி என்றும் அடையாளம் காட்டிக் கொண்டார்.

மாவோவின் மறைவுக்குப் பின் கலாச்சாரப் புரட்சி தொடர்பாக மாமோ மீது வீசப்பட்ட அவதூறுகளை எதிர்த்து விவாதித்தார் குணே. சிறையிலிருந்த காலங்களில்தான் தன் வாழ்க்கைப் பார்வை முழுமையாக வடிவமைக்கப்பட்டது என்கிறார். மார்க்ஸ், லெனின், மாவோ போன்றவர்களின் புத்தகங்களை அவர் சிறை வாழ்வில் தான் படித்தார். தான் நடித்த எல்லாப் படங்களும் ஜனநாயகரீதியானதோ புரட்சிகர மானது என்றோ அவர் சொல்லிக் கொள்ள விரும்பவில்லை. ஆயினும் எல்லாப் படங்களும் வெகுஜனத் தளத்தை எட்டிய பிரபலமான படங்கள் என்கிறார். எப்போதும் குறிப்பிட்ட உயர்ந்த தர ரசிகர்களுக்காகப் படம் எடுப்பதை அவர் மறுதலித் தார். எவ்வளவுதான் உயர்மட்ட ரசனை கொண்டிருந்தாலும் அந்த சிறுபான்மையும் தங்களளவில் வெவ்வேறு உலகப் பார்வை களைக் கொண்டவர்கள்தான் என்கிறார்.

1968 தொடங்கி 1970 வரை ராணுவ சேவையில் இருந்தார் குணே. அப்போதும் அவர் மார்க்ஸிய நூல்களைப் படித்துக் கொண்டுதான் இருந்தார். 1970 ராணுவ சேவையின் முடிவில் அவரது முதல் படத்தை ('நம்பிக்கை— The Hope') தயாரித்தார். அந்தப் படத்தைத் தயாரிப்பதற்காக அவர் 'கேங்ஸ்டர்' படங் களில் நடித்து பணம் ஈட்டினார். அக்கால கட்டத்தில் அவர் பல்வேறு அரசியல் குழுக்களோடு தொடர்பு கொண்டார். மாணவர் எழுச்சிகளில் தொழிலாளி வர்க்கத்தின் போராட்டங் களில் கலந்து கொண்டார். சோவியத் நாடு ஒரு சோசலிஸ நாடு அல்ல எனும் நிலைபாட்டுக்கு வந்திருந்தார் 'நண்பன்' (The Friend) எனும் ஒரே ஒரு படத்தை தயாரித்திருந்த அக்கால கட் டத்தில் மறுபடியும் அவர் 1974 முதல் 1981 வரை சிறையில் அடைக்கப்பட்டார். இக்கால கட்டத்தில் திரைப்பட கருத் துருவம் பற்றி இறுதியான புரிதலுக்கு வந்திருந்தார். சிறையில் நாவல்களும் சிறுகதைகளும் எழுதிக் கொண்டிருந்தார். ஐந்து முறை திரைப்படங்கள் எடுப்பதற்கான முயற்சிகளை மேற்

படிப்பகம்

padippakam



கொண்டார். இரு முறை தோல்வியில் முடிந்த அவர் முயற்சி பிற மூன்று முறை வெற்றி பெற்றது. அடுத்து மூன்று படங்கள் தான் அவர் இறுதிப் படங்களாயின. The Herd, Yol, மற்றும் The Wall ஆகியவை

சிறையில் இவரோடு இருந்தவரும் 1974-1981 கால கட்டங்களில் இவரது படைப்புக்களை நாவல், சிறுகதை, திரைப்படங்கள் போன்றவற்றை வெளியுலகுக்குக் கொண்டு வந்தவருமான **நிகாத் பஹ்ரம்** எனும் சக துருக்கிய எழுத்தாளர் தனது நினைவுகளில் குணே பற்றி இன்னும் சில தகவல்களைத் தருகிறார் :

புரட்சிகரக் கலை வடிவங்களை உருவாக்க வேண்டும் என்பவர்க்கு ஆதர்ஷமாக இருந்தார் குணே. கம்யூனிஸ்ட் என்று ஒரு வார்த்தை சொன்னாலே சட்ட விரோதம், ஏழு ஆண்டுச் சிறை வாசம் என்றொரு சூழல் துருக்கியில் இருந்த போதுதான் 'நான் ஒரு கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட்' என்றொரு கட்டுரைஎழுதினார் குணே. அக்கட்டுரைக்காக ஏழுஆண்டுச்சிறை வாசம் (1974-1981) புகுந்தார். சிறை அனுபவத்திற்குப் பின்னால் திரைப்படத் தொழிலாளியாக சினிமாவுக்குள் நுழைந்தார். ஒரு சினிமாக் கொட்டகையிலிருந்து பிறிதொரு கொட்டகைக்கு திரைப்படச் சுருள்களை எடுத்துக்கொண்டு திரிந்தார். ''மிக அழகான பூச்சுடன் படைக்கப்பட்ட திரை மாந்தர்களுக்கிடையில் சாதாரண பொதுஜன முகத்துடன்'' குணே இருந்தார். ஏனெனில் சாதாரண மக்களில் ஒருவனாகத்தான் அவர் இருந்தார். 1960 இல் தொடங்கி 5 ஆண்டுகளில் 100 சாகசப் படங்களில் அவர் நடித்திருந்தார். மிகமிகப் பிரபலமான நாடறிந்த நடிகராக அவர் வெற்றி பெற்றார்.

பூமியின் மகள் (Bride of Earth 1968), 'பசித்த நரிகள், (Hungry Wolves), 'நம்பிக்கை' (The Hope) போன்ற படங்கள் இரண்டாவது காலகட்டத்தவை (1968—1970). இக்கால கட்டப் படங்கள்தான் துருக்கியக் கலை வரலாற்றில் சோசலிச யதார்த்தத்தின் துவக்கப்புள்ளி என்கிறார் பஹ்ரம். இந்தப் படத்தில் கதாநாயகன், இதுவரை வெற்றியாளனாக இருந்த கதாநாயகன் (குணே) நையப் புடைக்கப்படுகிறான். தனது நம்பிக்கைகள் அனைத்தும் பொடிப் பொடியாக, பைத்தியக் காரன் மாதிரி அலைகிறான். எலியா காஸன் இந்தப் படத்தை முதன் முதல் பார்த்த போது ''மிகச் சக்தி வாய்ந்த சினிமா

படிப்பகம்

padippakam



இயக்குநர் இதோ'' என்றார். உடனடியாக இது மத விரோத மான. துருக்கிய எதிர்ப்புப் படமென துருக்கியில் தடை செய்யப் பட்டது. 'நம்பிக்கை' படம் வெனிஸ் திரைப்பட விழாவுக்கு கடத்தப்பட்டு திரையிடப்பட்டு பரிசு பெற்றது. குணே மீது இதற்காக வழக்குத் தொடுக்கப்பட்டது.

குணே, ''குணே பிலிம்ஸ்'' எனும் தனது சொந்தத் திரைப் பட நிறுவனத்தை இப்போது தொடங்கினார். 20-30 திரைக்கதை வசனங்கள் எழுதினார். அனைத்தும் புத்தகங்களாகப் பதிக்கப் பெற்றன. இக்கால கட்டத்தில் 1968 — அமெரிக்காவில் வியட் நாமிய தலையீட்டுக்கெதிரான மக்கள் எழுச்சி, பிரான்ஸில் மாணவர் எழுச்சி, 'சேகுவேரா—மாவோ' படம் ஏந்திய ஐரோப் பிய இளைஞர் எழுச்சி போன்றன அலையடித்தன. 1971 ராணுவக் கலகத்தில் இடதுசாரி அமைப்புகள் தடை செய்யப்பட் டன. மக்கள் தெருக்களில் சுட்டுக் கொல்லப்பட்டார்கள் இக்கால கட்டத்தில் ராணுவத்துக்கெதிரான இளைஞர் கலகத் தோடு சேர்ந்து நின்றார் குணே. இளைஞர்களுக்கு அடைக்கலம் அளித்தார். அரசுக்கு எதிரான ஆயுதப் போராட்டம் நடந்து கொண்டிருந்தது. அடைக்கலம் அளித்ததற்காக குணே கைது செய்யப்பட்டு இரண்டரை ஆண்டுகள் மறுபடியும் சிறையில் அடைக்கப்பட்டார். இக்கால கட்டத்தில் 'சிறையின் பெயர், (Name of the Prison) என்றொரு புத்தகம் எழுதினார். தனது நடவடிக்கைகள் அனைத்தும் நியாயமானவை நான் புரட்சிகர இயக்கத்தின் ஒரு அங்கம். துருக்கியில் நடக்கும் மக்கள் போராட்டத்தில் ஒரு அங்கம் நான் என்று எழுதினார்.

1974 இல் எக்விட் ஆட்சியைக் கைப்பற்றியதையடுத்து பொது மன்னிப்பின் கீழ் குணே விடுவிக்கப்பட்டார் அவரோடு சிறைத் தோழர் பஹ்ரமும் விடுவிக்கப்பட்டார். அதன் பின் 45 நாட்கள்தான் சிறைக்கு வெளியிலிருந்தார். இந்நாட்களில் நகர வாழ்க்கை பற்றிய 'நண்பன்' (The Friend) பருத்தித் தோட்டத் தொழிலாளர் வாழ்வு பற்றிய 'ஆவல்' (The Anxiety) என்ற இரு படங்களுக்கான படப்பிடிப்பு நடைபெற்றது. இப்படப்பிடிப்பின் போது ஒரு மது விடுதியில் ஏற்பட்ட தகராறில் ஒரு நீதிபதி கொல்லப்பட்டார். குணே கொலை குற்றம் சுமத்தப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார். சிறையில் அவரைக் கொல்லவும் முயற்சி நடந்தது. இந்த ஆண்டில் ''எமக்கு ஒரு அடுப்பு, ஜன்னல்,

படிப்பகம்

padippakam



மற்றும் பிராட்டி வேண்டும்'' என்றொரு நாவல் எழுதினார். அந்நாவலின் இறுதி 50 பக்கங்களில் சோவியத் சமூக அமைப்பை கடுமையாக விமர்சித்தார். அந்த நாட்களில் பஹ்ரம், குணேவை அடிக்கடி சிறையில் சந்தித்தார். அதன் விளைவாக 'குணே' எனும் கலாச்சார மாத இதழ் வெளிவரத்துவங்கியது. 18 இதழ்கள் வெளிவந்தபின், வெளிவந்த ஒவ்வொரு இதழும் ராணுவத்தினால் தடை செய்யப்பட்டது. அதன்பின் பஹ்ரம், குணேவின் சினிமா நிறுவனப்பொறுப்பை ஏற்றார். இதன் விளைவாகவே அவரின் இறுதி மூன்று படங்கள் வெளியுலகை எட்டின. இப்படங்களின் திரைக்கதையை சிறையிலிருந்தபடி குணே எழுதினார். பஹ்ரம் வெளியில் மக்களைச் சந்தித்து நேர்முகங்கள் எடுத்து குணேவுக்குக் கொடுக்க, அதை ஆதாரமாக வைத்துதான் திரைக் கதைகள் உருவாகின.

1980இல் 'குணே' பத்திரிக்கை ராணுவத்தால் மூடப் பட்டது. 1980இல் பஹ்ரம் துருக்கியிலிருந்து வெளியேறினார். பிற்பாடு குணே துருக்கியிலிருந்து தப்பி பிரான்சுக்கு வந்து சேர்ந்தார். சர்வதேச திரைப்பட விருதுகளை ஏற்கும்போது தனது முஷ்டியை இறுக்கிக் கையுயர்த்தி கம்யூனிஸ்ட் மனிதக் குறியீட்டை வெளிப்படுத்தினார் குணே. இவரது அரசியல் நிலைபாட்டையும் கலைப்பிரக்ஞையையும் மதிப்பீடு செய்யும் துருக்கிய மார்க்ஸிஸ்ட் லெனினிஸ்ட் கட்சியைச் சேர்ந்த 'ஏடி' (A D) என்பவர் குணேவின் நிலைபாடு மத்தியதரவர்க்கப் புரட்சிகர ஜனநாயக நிலைபாடு என்கிறார். சில மார்க்ஸிய—லெனினிய நிலைபாடுகளை குணே கொண்டிருந்தாலும், தனது மத்தியதரவர்க்க நிலைபாட்டிலிருந்து துருக்கிய சமூகத்தின் தனித் தன்மைகளைப் புரிந்து கொள்ளத் தவறினார் குணே என்கிறார். அதன் உலகு தழுவிய உண்மையையும் கிரகிக்கத் தவறினார் என்கிறார். சித்தாந்தரீதியில், அரசியல் ரீதியில் அமைப்பு ரீதியில் அவர் தனது படைப்புக்களை ஒருங்கிணைக்கவில்லை என்றும் குறிப்பிடுகிறார். துருக்கியில் நிலவிய அகபுற தன்மைகளை கம்யூனிஸ்ட் இயக்கம் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை, ஆகவே தான் குணே கம்யூனிஸ்ட் இயக்கத்தை முற்றிலும் தழுவிக் கொள்ளவில்லை என்று விளக்குகிறார் இவர்.

குணே அரசியல் பற்றியும் கலைவெளியீடு பற்றியும் தெளிவான நிலைபாடுகளைக் கொண்டிருந்தார். அதுதான் அவரை ஒரு வறட்டுத்தனமான பிரச்சாரக்காரராக இல்லாமல் கலைஞனாக ஆக்கியிருக்கிறது. 'பாதை', 'மதில்', 'ஆட்டிடையன்' படங்களில், யதார்த்தம் பற்றிய கேள்விகளுக்கு அவர் பல்வேறு

படிப்பகம்

padippakam



சந்தர்ப்பங்களில் பதிலளிக்கிறார். இம்மூன்று படங்களில், ஆக்க பூர்வமான அரசியல் விமர்சனம் தெளிவாக இருக்கிறதா எனும் கேள்வி; வாழ்க்கை இருக்கிறவாறு அவ்வாறே சொல்லப்பட்டிருக்கிறது; பெண்கள் மீதான அடக்குமுறை விமர்சனமற்று உள்ளபடி சொல்லப்பட்டிருக்கிறது எனும் விமர்சனம்; துயரத்தையும் விரக்தியையும் அவநம்பிக்கையையும் வெளியிடுகிறது எனும் குற்றச்சாட்டு; படங்கள் முழுக்க எதிர்மறையாக முன்வைக்கப்படுகிறது எனும் வாதம்; இவைகளுக்குத் தெளிவாக பதில் அளித்தார் குணே: 'இதுதான் வாழ்வுக்கும் கலைக்குமான உறவு பற்றிய முழுமையான பார்வை என்று நான் கருதுகிறேன்.'' அவர் சொல்கிறார்: ''முரண்பாடு ஒவ்வொரு நிகழ்விலும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. இதுதான் முரண்பாடுகளின் இணைவு என்று நாம் புரிகிறோம். மனிதனும் வாழ்வும் இத்தகையதுதான். 'பாதை' படத்தில் வருகிற 'ஸயத்' பாத்திரத்தை எடுத்துக்கொள்வோம். அவன் தன் மனைவியைப் பனியில் சாகவிடுகிறான். இறுதிநேரத்தில் காப்பாற்றவும் ஓடுகிறான். காப்பாற்ற வேண்டும் எனும் உள்விருப்பம் அவனுக்கு இருக்கிறது. அவள் இறந்த பின்னால் அதற்காக மிகவும் துயர முறுகிறான். அவனுக்குள் உறுத்தல் இருக்கிறது. அவனுக்குள் இருக்கும் அந்த உறுத்தல்' ஒரு தனி நபராக அவனைச் சீரழிக்கிறது. அவன் ஆன்மாவை உடைக்கிறது. இதுதான் எனக்கு மிகவும் ஆக்கபூர்வமானது. அந்தப் பொய்யன். திருடன் 'மொஹம'த்தை எடுத்துக் கொள்வோம். 'நான் கைவிட்டதனால்தான் எனது மைத்துனன் இறந்தான்' என ஒப்புக்கொள்கிறான். இந்த உறுத்தல், இந்த மனிதப் பண்புதான் எனக்கு ஆக்கபூரவமானது. முக்கியம்! இந்தக் குர்திஸ் பையனை எடுத்துக்கொள்வோம். அவன் சிறைக்குத் திரும்பிப் போக மறுக்கிறான். சுட்டுக்கொல்லப்பட்ட தமையனைத் தொடர்ந்து தானும் போராடப் போவதாகச் சொல்கிறான். அத்தனை சிரமங்களையும் ஏற்பதாகச் சொல்கிறான்! என்னளவில் ஆக்கபூர்வமானது என்று நான் காட்ட விரும்புவது. வாழ்வு மாறிக்கொண்டிருக்கிறது என்பதைத்தான். மனிதன் மாறிக் கொண்டிருக்கிறான். செழுமைப்படுகிறது. வேறுவிதமாக வளர்கிறது. இயங்குகிறது என்பதைத்தான்.''

புரட்சிகர இயக்கத்தில் உங்கள் கலையின் பங்கு என்ன என்பது ஒரு கேள்வி ''எனது நோக்கம் தொழிலாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தை வென்றெடுப்பது, இதற்கு 1. அரசியல் 2 பொருளாதாரம் 3. கருத்தியல் கலாச்சார களம் என்று

படிப்பகம்

padippakam



மூன்று உண்டு. கலாச்சாரப் போராட்டம் என்பது கருத்தியல் போராட்டமும்தான். ஒரு வகையில் அரசியல் போராட்டமும்தான். ஆனால் அரசியலில் எல்லாக் கூறுகளையும் அது கொண்டிருக்க வேண்டுமென பாசாங்கு செய்ய முடியாது. கலையின் பங்களிப்பை அரசியல் போராட்டம் நிறைவு செய்ய வேண்டும். கலையின் வீச்சை, அதோடு சேர்ந்த அரசியல் வேலை நிறைவு செய்யவேண்டும். கலைப்படைப்புக்குள் அரசியல் போராட்டத்தின் அனைத்துக் கூறுகளையும், அனைத்து இலட்சியங்களையும் தேடிக் கொண்டிருப்பது சரியல்ல. கலைப்படைப்பு அரசியல் இயக்கத்தை எளிமையானதாக்கும். அரசியலின் முழு வேலையையும் கலைப்படைப்பின் மீது ஒருவர் சுமத்த முடியாது. கலைப்படைப்பு சில ஸ்தூலமான அரசியல் நடவடிக்கைகள், எழுத்துக்கள், விளக்கங்கள், வியாக்கியானங்கள் மூலம் நிறைவு செய்யப்பட வேண்டும். சில தோழர்கள் என்மீது அரசியல் தொடர்பாக கடுமையான விமர்சனங்கள் வைக்கிறார்கள். அந்த விமர்சனங்கள் எனக்கு அவ்வளவு முக்கியமானவை அல்ல.

கலை அதனளவில் புரட்சி செய்யாது. ஆனால் சரியான அரசியல் நிலைபாடுள்ள கலைஞன். உலகு பற்றி சரியான அரசியல் நிலைபாடுள்ள கலைஞன் தனது படைப்பு மூலம் பரந்து பட்ட பலமான உறவை மக்களோடு கொள்ள முடியும். அந்த இணைப்புக் கண்ணி அரசியல் தன்மை வாய்ந்ததாகலாம் அந்த அர்த்தத்தில் பிரச்சாரத்திலும் போராட்டத்துக்கும் பயன்பட வேண்டுவது கலை என்று சொல்வதை நான் மறுதலிக்கிறேன்'' என்கிறார் குனே. குணே மேலும் சொல்கிறார்: ''இந்த அர்த்தத்தின்படி புரட்சிகரமான கலையை நீங்கள் கொண்டிருக்கும் போது நீங்கள் மக்களை மட்டும் ஆகர்ஷிப்பதில்லை. பிறகலைஞர்களையும் ஆகர்ஷிக்கிறீர்கள். அரசியல் பிரக்ஞைக்கு களத்தை நீங்கள் தயார் செய்கிறீர்கள். இந்த அர்த்தத்தில் கலை ஒரு ஆயுதம். ஒரு படைக்கலம் போன்றது. ஆனால் கலை தனக்கேயுரிய தனிமொழி கொண்டது. கலைக்கே உரிய மொழி அது. முழுமையாக (Totally) முற்று முழுதாக (Absolutely) அந்த மொழியை எவரும் மதிக்க வேண்டும். இதை நீங்கள் மதிக்கவில்லையானால், இந்த மொழியை நீங்கள் மதிக்கவில்லையானால், பிறகு அந்த ஆயுதம் உங்களைக் கொல்லும்படி அது திருப்பித்தாக்கும் வலு கொண்டது.''

1984 செப்டம்பர் 7ஆம் தேதி பாரிஸில் மருத்துவமனையொன்றில் கான்சர் நோயினால் மரண முற்றார் இல்மஸ் குணே. துருக்கி மக்களைப் பிரிந்த சோகத்துடனேயே, தன் நாட்டுக்குத்

படிப்பகம்

padippakam



திரும்பவும் வெற்றியாளனாகத் திரும்புவோம் என்ற நம்பிக்கை யுடனேஎய்ய நாடு கடந்து வாழ்ந்த அம்மனிதன் கண் மூடினான்.

குணேயின் இறுதி வார்த்தைகள் இவைதான்:

"எனக்குக் குளிருகிறது. பாரிஸ் கம்யூன் தோழர்களின் போர்வையை எனக்குப் போர்த்துங்கள்.

அவர் விருப்பப்படியே பாரிஸ் கம்யூன் தோழர்களின் கல்லறைக்கு அருகில் அவரின் உடல் அடக்கம் செய்யப்பட்டது.

அவன் நிரந்தர மனிதன். □

---

# ஜப்பானில் மழை பெய்தால்...

–புதிய ஜீவா

உன் அறிவு
அற்புதம்—

ரொம்ப காலமாய்
அமெரிக்கனாக வாழ்ந்து
அலுத்தது உனக்கு.
ஜப்பான்காரனாயும் வாழ
ஆசை தற்போது.

டி.க்யூ.எம்
கெய்சன்
கம்ப்யூட்டர்
ஹவுஸ் கீப்பிங்
ஜப்பானிய நிர்வாகக்கலை
ஹைக்கூ போல
கராத்தே போல.

உன் திட்டமிடலில் நேர்த்தி.
எல்லாவற்றுக்கும் ஃபார்மேட்
பட்டியல்களுக்குள்
அட்டவணைக்குள் அடங்கி
சுற்றுகிறது உலகம் உனக்கு.

இந்த விகிதத்தில்
வளர்ச்சி/வீழ்ச்சி எனில்
கி.பி. 2090 இல் நிலை?...
கம்ப்யூட்டர் திரையில் பதில்.
தற்போது ஒரு பிரிண்ட்
எடுத்துக் கொள்ளலாம்

பத்திரமாக ஃபிளாப்பியில்
பதிந்து கொள்ளலாம்.
(வைரஸ் ஜாக்கிரதை)

உனக்குப் பதிலாக
ஒரு ரோபாட்டை
வேலைக்கமர்த்துவாய்,
நீயே—
ஒரு நாள்!

அவசரமாய் உனக்குத் தேவை,
கூரான நேரான மூக்கை
சப்பையாய் மாற்றி
ஜப்பானியனாய் மாற்ற
ஒரு பிளாஸ்டிக் சர்ஜரி.

இடுப்பில் கோவணத்துடன்
வறுத்தெடுக்கும் வெயிலில்
பாலை வயலில்
ஒற்றை மாட்டுடன்
மழைக்காக ஏங்கித் தவிக்கும்
ஏழை உழவன் மட்டும்
சென்று விடாதே!

மாட்டிவிடுவான் ஏரில்
உன்னை,
"வக்காளி...
நல்ல மாடு கிடைச்சுது"
என்று.

படிப்பகம்

padippakam

# வன்முறை அரசியலும் புரட்சிகர சனநாயக இயக்கத்தின் தேவையும்!

—நாகரத்தினம்

'அமைதிப் பூங்கா'வாக விளங்கிய தமிழகம் இன்று வன்முறை அரசியலால் சூறையாடப்பட்டுக் கொண்டிருக்கின்றது காவல் நிலையங்கள் கற்பழிப்புக் கூடங்களாக மாற்றப் பட்டுள்ளன. சிறைகள் கொலைக்களம் ஆக்கப்பட்டுள்ளன. அப்பாவி மக்கள் மீது வன்முறைத் தாக்குதல்கள் நடத்துவது, தாழ்த்தப்பட்டோர் குடிசைகள் குடியிருப்புகள் தீக்கிரையாக் கப்படுவது இன்று அன்றாட நிகழ்ச்சிகளாகிவிட்டன.

"பத்மினி என்ற பெண்மணி போலீசாரால் பலாத்காரமாக கற்பழிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டாள்.

வத்சாத்தியில் பழங்குடிப் பெண்கள் கற்பழிக்கப்பட்டனர்.

காரணையில் தமக்கு சொந்தமான உரிமையுள்ள நிலத்தை மீட்டெடுக்கப் போராடிய தாழ்த்தப்பட்ட மக்கள் துப்பாக்கிச் சூட்டிற்கு பலியிடப்பட்டனர்.

அங்குசெட்டிபாளையத்தில் தாழ்த்தப்பட்டோரின் 100க்கும் மேற்பட்ட குடிசைகள் ஆதிக்க சாதிவெறியர்களால்- தீக்கிரையாக்கப்பட்டன.

சின்னாம்பதியில் பழங்குடி இனத்தைச் சேர்ந்த பெண்கள் சிறப்புக் காவல் படையினரால் கற்பழிக்கப்பட்டனர்.

சின்ன சேலத்தில் தமது பாரம்பரிய உரிமையை நிலை நாட்டக் கோரிய தாழ்த்தப்பட்ட மக்கள்மீது கொலைவெறி தாக்குதல் நடத்தப்பட்டது.

எதேச்சதிகார அரசுக்கு எதிராகச் செயல்படும் வழக்கறி ஞர்கள் போலீசாரால் குண்டர்களால் தாக்கப்படுகின்றனர். செயலலிதாவிற்கு எதிராக நிலமோசடி கிரிமினல் வழக்கு தொடுக்க முனைந்ததற்காக சென்னை வழக்கறிஞர் சண்முக

படிப்பகம்

padippakam



சுந்தரம் அ.தி.மு.க. குண்டர்களால் கொடூரமாக வெட்டி சாய்க்கப்பட்டார்.

இன்றைய முதலாளித்துவ அரசியல் கட்சிகள் தமக்குள் இருக்கும் முரண்பாடுகளை வெடிகுண்டுகளால் தீர்க்கப்பட வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகியுள்ளன. சமீபத்தில் வாழப்பாடியில் வெடித்த வெடிகுண்டு அ.தி.மு.க. உட்கட்சி முரண்பாடுகளை வெட்ட வெளிச்சமாக்கியது.

தமிழகம் மட்டுமின்றி, வடமாநிலங்களில் மிக அதிகமான அளவில், மக்கள் அன்றாடம் மாமூல் வாழ்க்கையை கூட நடத்த முடியாவண்ணம் இவ்வன்முறை நிகழ்ச்சிகள் தலைவிரித்தாடுகின்றன. வன்முறைக் கலாச்சாரம் சமூகத்தின் கீழிருந்து மேல் மட்டம் வரை புரையோடிக் கிடக்கின்றது.

கற்பழிப்பு, கொலை, கொள்ளை, விபச்சாரம், கள்ளச் சாராயம், போதை மருந்து கடத்தல் போன்ற சமூகவிரோத செயல்களை தொழிலாகக் கொள்வது; பொதுமக்கள் மற்றும் தொழிலாளர்களின் போராட்டங்களை முறியடிக்க போராட்ட தலைவர்களையும், முன்னணியினர்களையும் வெட்டிக் கொல்வது; தேர்தலின் போது கள்ள ஓட்டு போடுவது, ஓட்டுச் சாவடி சூரையாடப்படுவது, கைப்பற்றுவது, தீவைப்பது, வாக்காளர்களை ஓட்டுப் போட விடாமல் தடுப்பது, வேட்பாளரை கடத்துவது, கொலை செய்வது போன்றவற்றை தொழில்களாகக் கொண்ட 'தொழில் முறை வன்முறை மபியா கும்பல்கள், எல்லா சிறிய பெரிய நகரங்க்ளிலும் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன.

அரசியல்வாதிகளும், ஆளும் வர்க்கங்களும், அதிகார வர்க்கமும், மற்றும் அரசு எந்திரங்களும் இவ்வன்முறை மபியா கும்பல்களுக்கு பின்னணியாக இருந்து நேரடியாகவோ மறைமுகமாகவோ பாதுகாப்புக்கொடுத்து வருகின்றனர். இதை சமீபத்தில் நாடாளுமன்றத்தில் வெளியிடப்பட்ட வோரா குழு அறிக்கையும் வெட்ட வெளிச்சமாக்கியது. இந்தியா முழுவதும் கிரிமினல் பேர்வழிகள் சட்டத்தை தங்கள் கைகளில் எடுத்துக் கொள்கின்றனர்; இவர்களின் கூட்டுச் செயல்பாடுகள் மாநில நிர்வாகங்களையே பொருளற்றதாக்கி போட்டி அரசாக மாறிவருகிறது என்று வோரா அறிக்கை சுட்டிக்காண்பிக்கிறது.

படிப்பகம்

padippakam



வன்முறை கலாச்சாரத்தை கொண்டிராத எந்த அரசியல் கட்சிகளும் பாராளுமன்ற சனநாயக அரசியலில் பங்கெடுக்கவோ வெற்றிபெறவோ முடியாத நிலை உருவாகியுள்ளது. விதிவிலக்கின்றி எல்லா முதலாளித்துவ அரசியல் கட்சிகளும் வன்முறை' தில்லுமுல்லு, 'கவர்ச்சிகாட்டி ஏமாற்றுதல் போன்றவைகளை அடிப்படையாகக்கொண்டு தமது பிழைப்பைநடத்தி வருகின்றன.

இந்த வன்முறைச் சக்திகளை சமூகத்திலிருந்து முற்றிலும் களையெடுக்க வேண்டுமானால் முதலில் இவ்வன்முறைச் சக்திகளின் இருத்தலுக்கான சமூக, பொருளாதார, அரசியல் அடிப்படைகளைப் புரிந்து கொள்ள வேண்டும்.

வரலாற்று ரீதியாக இந்தியத் துணைகண்ட பகுதியில் இருந்த முதலாளித்துவதற்கு முந்தைய சமூகம் மற்றும் அன்று நிலவிய அரசு போன்றவை எத்தகைய தன்மையைக் கொண்டு விளங்கின என்பதையும், பிறகு அந்தச் சமூகம், முதலாளித்துவத்திற்கு முந்தைய உற்பத்தி முறையிலிருந்து முதலாளித்துவ வளர்ச்சிக்கு இட்டு சென்ற முறையை நாம் ஆராய வேண்டும்.

நிலத்தில் தனியுடமையற்ற சமூகமாய் இருந்த முதலாளித்துவத்திற்கு முந்தைய சமூகம், விவசாய உற்பத்திக்கு அரசை சார்ந்து இருக்க வேண்டிய நிலை இருந்தது. நிலத்திலிருந்து கிடைத்த உபரி, அரசை சார்ந்து செயல்பட்ட அதிகார வர்க்கத்தினரால் கடுமையாக சுரண்டப்பட்டது. ஐரோப்பாவில் அன்று நிலவிய நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறையோ அல்லது நிலப்பிரபுத்துவ வர்க்கமோ இந்திய துணைகண்டத்தில் தெளிவாக உருவாகவில்லை. ஆசிய சமூகத்திற்கே உரித்தான குறிப்பான இயல்புகளைக் கொண்ட சமூக நிலவுடைமை கொண்ட உற்பத்தி முறை நிலவியதால், வர்க்கங்கள் தெளிவாக வரையறுக்கப்படவில்லை. கிராம சுயசார்பு சமூகத்திற்கு அப்பால் அரசு தன்னிச்சையாக இயங்கியது இதனால் அரசு 'கொடுங்கோன்மை அரசாக' விளங்கியது. உற்பத்தியிலும், உற்பத்தி உறவிலும் அந்த அரசு ஒரு குறிப்பிட்ட அளவு செல்வாக்கு செலுத்தின. இயக்கப் போக்கிலே முதலாளித்துவ உற்பத்தி முறையின் கூறுகள், அதற்கே உரித்தான இயல்புகளை கொண்டு வளர ஆரம்பித்தன.

இந்த இயல்பான இயக்கப் போக்கை பிரிட்டிசு ஏகாதிபத்தியம் சிதைத்தது. நிலத்தில் தனியுடைமை முறையை முற்றாக நிறுவியது. வளர்ச்சியடைந்த தொழில்துறை உற்பத்திமுறையை

படிப்பகம்

padippakam



மேலிருந்து திணித்தது. காலனிய சுரண்டலை நிலை நாட்டியது. பிரிட்டிசு ஏகாதிபத்தியம் நிலவுடைமை முறையில் கொண்டுவந்த மாற்றங்கள், முந்தைய சமூகத்தில் நிலத்தின் மீதிருந்த பழைய வடிவிலான ஆதிக்க சாதிகளின் ஆதிக்கத்தையும், சுரண்டல் வடிவத்தையும் மாற்றியமைத்தன. புதிய வகையான நிலவுடைமை வர்க்கம் தோன்றியது.

''இந்தியாவில் ஒரு புதிய சமூக உருவாக்கத்தை அமைக்க மருத்துவச்சியாகத் திகழ்ந்த ஆங்கிலேயர்களின் காலனி ஆதிக்கம் தன்னுடைய தேவைகளுக்கு ஏற்ப காலனிய ஆட்சிக்கு முன்பு நிலவிய உற்பத்தி உறவுகளை மாற்றியமைத்துக் கொண்டது. இதன் விளைவாக இந்த எசமானிய முறை மாற்றியமைக்கப் பட்டு அந்த இடத்தில் நிலத்தில் தனியார் சொத்துரிமை முறை பற்றிக் கொண்டது. அது சந்தையுடன் இணைந்தது. இதன் விளைவாக சாதி அதன் மேல் சாற்றப்பட்டிருந்த வர்க்க உறவை இழந்து, புதிய சமூக உருவாக்கத்தில் புதிய வேலைகளை மேற் கொண்டது.''*

இந்தப் புதிய சமூக உருவாக்கத்தினால் பழைய ஆதிக்க சக்திகள் முற்றிலும் ஒழிக்கப்படவில்லை. மாறாக அவை புதிதாகத் தோன்றிய நிலவுடைமை வர்க்கத்துடன், தமது இருத்தலுக்கான புதிய அடிப்படையைத் தேடின.

காலனிய விடுதலைக்குப் பிறகு ஏற்பட்ட முதலாளித்துவ வளர்ச்சியினால், விவசாய உற்பத்தியில் புதிய முதலாளித்துவ வர்க்க சக்திகள் உருவாயின. இதன் விளைவாகவும் நிலவுடைமை முறையில் மரபு ரீதியாக ஆதிக்கம் செலுத்திவந்த ஆதிக்கச் சக்திகளில் ஒரு பிரிவினர் தங்கள் பொருளாதார அடிப்படையை இழந்தனர். கிராமங்களில் தமது பொருளியல் மற்றும் அரசியல் அடிப்படையை இழந்த இந்த பழைய ஆதிக்க சக்திகள், நகர் பகுதிகளில் தஞ்சம் புகுந்தனர். இந்த சக்திகள், முதலாளித்துவ உற்பத்தி முறையோடு எந்த முறையிலும் இயைந்து இயங்க முடி யாமல், பிறகு வன்முறையையே வாழ்க்கையாக்கிக் கொள்கின் றன. அதற்கு முதலாளித்துவ அரசியலும் உறுதுணையாக நிற்கின்றது.

---

* வறுமையின் பின்னணி- பக்கம் 84.

படிப்பகம்

padippakam



திட்டவட்டமான உற்பத்தி முறையிலிருந்து இந்திய முதலாளித்துவ வர்க்கம் உருவாகியிருந்தால், உற்பத்திக்கு எந்த விதத்திலும் தொடர்பில்லாத இந்த வன்முறை சக்திகள் நிலவுவதற்கான அடிப்படையே இருந்திருக்க முடியாது. உற்பத்திச் சக்திகள் பின் தங்கிய தன்மையில் இருப்பதனால் தான் வன்முறைக் கலாச்சாரமும், வன்முறை அரசியலும் மேலோங்கியுள்ளன. இந்திய சமூகத்தின் அடித்தளத்தில் குடும்பங்கள் அதிகாரத்துவத்தின் மையங்களாக இருப்பதாலும், வட்டார அளவில் சாதிய ஒடுக்குமுறை நிலைபெற்று இருப்பதாலும், 'கொடுங்கோன்மை' அரசுகளின் அடக்குமுறையாலும் உற்பத்தி சக்திகள் இத்தடைகளை மீறி வளர இயலவில்லை. எனவே இந்திய சமூகத்தில் என்றுமே நிலையான சனநாயக இயக்கங்கள் நிலைபெற முடியவில்லை. மேலிருந்து திணிக்கப்பட்ட முதலாளித்துவ உற்பத்தி முறையை இந்திய சமூகம் கணிசமான அளவில் உள்வாங்கிக் கொண்ட அளவில் புதிய உற்பத்தி சக்திகள் வளர ஆரம்பித்தன. இதன் விளைவாக சமூகத்தின் அடித்தளத்தில் அமுங்கிக் கிடந்த அதிகாரத்துவ குடும்ப முறையும், சாதிய கட்டுமானங்களும உடைய ஆரம்பித்தன. இவற்றை பொறுக்காத பழைய ஆதிக்க சக்திகள், பழைய குடும்ப, சாதிய சமூக அரசு கட்டமைப்புகளை தக்க வைக்க வன்முறையைக் கையாளத் தயங்குவதில்லை.

சாதிய வன்முறையானாலும் சரி; பிற்போக்கு வன்முறை அரசியலானாலும் சரி; பயங்கரவாத அரசு வன்முறையானாலும் சரி; அவை யாவும் பழைய சமூக அமைப்புக்கு எதிராக கிளர்ந்தெழும் புரட்சிகர சனநாயக சக்திகளையே இலக்காகக் கொண்டு தாக்குதலை தொடுக்கின்றன.

வன்முறைக் கலாச்சாரத்தையும், வன்முறை அரசியலையும் ஒழித்துக்கட்டி, புரட்சிகர சனநாயகத்தை நிறுவுவதுதான் புரட்சிகர சனநாயக சக்திகளின் கடமையாகும். வன்முறை அரசியலின் அனைத்து பரிமாணங்களையும் தகர்க்கும் வண்ணம் பன்முகத் தன்மை கொண்ட சனநாயக இயக்கத்தைக் கட்டமைக்க வேண்டும்.

கிராமங்களில் சாதிய ஒழிப்புப் போராட்டங்களை முன்னெடுத்து விவசாய அடிப்படை வர்க்கத்தை அணி திரட்டுவதன் மூலம் சாதிய வன்முறையை முடிவுக்கு கொண்டுவர முடியும்.



படிப்பகம்

padippakam



நகர்ப்பகுதிகளில் குடியேறியுள்ள உதிரி வர்க்கங்களை அணி திரட்டி, அமைப்பாக்கி பாட்டாளி வர்க்க இயக்கத்துடன் ஒன்று பட்டுப் போராடச் செய்வதன் மூலம் பிற்போக்கு வன்முறை சக்திகளுக்கு இருக்கின்ற சமூக அடிப்படையைத் தகர்க்க முடியும்.

பழைய ஆதிக்க சக்திகள், நிலவுடைமை வர்க்கங்கள், போன்ற வன்முறை சக்திகளின் வன்முறை அரசியலை எதிர் கொள்ள புரட்சிகர சனநாயக இயக்கங்கள் புரட்சிகர வன் முறையை ஆயுதமாகக் கொள்ள நேரிடுகின்றன.

இந்த வகையில் இந்தியத் துணைக் கண்டத்தின் வடக்கு மற்றும் வடகிழக்கு மாகாணங்களில் உரிமைக்காகப் போராடும் சனநாயக சக்திகளின் வன்முறை அரசியலை புரட்சிகர சனநாயக அரசியலின் ஒரு பகுதியாகத்தான் நாம் பார்க்க முடியும்.

இறுதியாக அரசு பயங்கரவாதத்திற்கு எதிராகப் பாட்டாளிவர்க்க ஆயுதப் பேரெழுச்சி மற்றும் போராட்டங்களின் மூலம் பழைய அரசு எந்திரத்தை நொறுக்கவும் பாட்டாளிவர்க்க அரசை நிறுவுவதன் மூலம் மட்டுமே பிற்போக்கு வன்முறை அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்க இயலும். □

---

## மகளுக்கு...

மகளே!

நம் செல்லரித்துப்போன
சமுதாயத்தில் நீ
சிக்கித் தவிக்காதே!

கண்மூடிப் போன
தவறான தடங்களில் நீ
போக வேண்டாம்!

நான் வடித்த கண்ணீர்—
சிந்திய குருதி நீயும்
சிந்த வேண்டாம்!

சின்ன விசயத்தையும்
சிக்கலாக்கும்
இந்த சின்ன மனிதர்கள்
சிநேகிதம்
இனியும் உனக்கு வேண்டாம்!

சோதனைகளால்
சாதனைகள் புரியும்
சகாக்களை நீ நம்பு.

—பிரேமா

---

மக்களிடமிருந்து தனிமைப் பட்டுப்போன, கலாச்சார புரட்சியாளன் என்பவன், எதிரியை அழிக்கவல்ல ஆயுத பலமற்றவனும் படையற்ற தலைவனும் ஆவான்.

— மாவோ

படிப்பகம்

padippakam

# திரைப்படங்களும், மக்களின் சமூக உளவியலும் : சிந்தனைக்குரிய சில கருத்துகள் :

—செ. கணேசலிங்கன்

மக்களெல்லாம் மட்டமான திரைப்படங்களைப் பார்த்து நேரத்தையும் பணத்தையும் வீணாக்குகின்றனர் என முற்போக்கு அணியைச் சார்ந்தவர்கள்கூட கவலைப்படுகின்றனர். இது மக்களைப் பற்றிய தவறான கண்ணோட்டம்; மக்களுக்கு ஏதோ ஒரு தேவை உள்ளது. அவர்களின் அத்தகைய தேவைகளில் ஒரு பகுதியை திரைப்படங்கள் பூர்த்தி செய்கின்றன. அதனாலேயே தியேட்டர்களில் குவிகின்றனர்.

சனரஞ்சகமான படங்களில் கலைத்தன்மை இல்லை என்று கூறிவிட முடியாது. சினிமாவில் பல்வேறு கலை அம்சங்கள் நன்றாக இணைந்துள்ளன. அத்தகைய கலை அம்சங்களே மக்களைக் கவர்கின்றன.

இலக்கியம், நாடகம், இசை, நடனம், ஓவியும், படப்பிடிப்பு, மக்களைக் கவர்ந்த நட்சத்திரங்களின் நடிப்புகள், சண்டைகள், கவர்ச்சிகள் யாவும் சினிமாவில் அடங்கியுள்ளன. இவற்றில் ஏதேனும் ஒன்றோ, பலவோ மக்களைக் கவர்ந்து விடுகிறது. மக்கள் அவர்களின் அபிமான நட்சத்திரங்களுடன் திரையில் ஒன்றி விடுகின்றனர் இருள் சூழ்ந்த திரையரங்குகளில் ஒருவித கனவுலகில் சிலமணி நேரம் தமது அன்றாட துன்பங்களை மறந்து விடுகின்றனர். அதனால் தான், சினிமா பல்வேறு கலை வடிவங்களை உள்ளடக்கிய பலம் வாய்ந்த தொழில் நுட்பம் சார்ந்த கலை என்பர்.

சினிமா உட்பட பல்வேறு கலை, இலக்கியங்களும் முதலாளித்துவ ஆதிக்கத்தின் விற்பனைப் பொருளாகவே இன்றும் உள்ளன. இங்கு நிலப்பிரபுத்துவ சிந்தனைகளும் மதிப்புகளும் இன்றும் ஆதிக்கம் பெற்றிருப்பதால் அவற்றையே கலை இலக்கியங்கள் மூலம் முதலாளித்துவம் விற்பனை செய்து இலாபம் சம்பாதிக்கின்றது.

படிப்பகம்

padippakam



சமுதாய உணர்வை ஊக்கி, சமூகத்தை மாற்றி அமைக்கக் கூடிய புரட்சிகர சினிமா, பிற கலை இலக்கியங்களை ஆக்கி மக்களுக்கு வழங்கக் கூடிய பொருளாதார வாய்ப்புகள் இன்னும் முன்னேறவில்லை. இந்த நிலையில் மக்கள் முதலாளித்துவ நுகர்ப் பொருட்களை வாங்குவது போலவே முதலாளிகள் வழங்கும் கலை, இலக்கியங்களுக்கே பணம் தருகின்றனர். இத்தகையச் சூழலில் தக்க புரட்சிகர அரசியல் விமர்சனம் மூலமே மக்களை நாம் வழிநடத்த முடியும். சரியான கண்ணோட்டத்துடன் சினிமா உட்பட பிற கலை இலக்கியங்களையும் புதிய பார்வை யில் அணுகும் முறைகளை நாம் கற்பிக்க வேண்டும். இது இன்றையச் சூழலில் தவிர்க்க முடியாத நிலையாகும்.

டால்ஸ்டாய் புரட்சிகர எழுத்தாளரல்ல. ஆயினும் லெனின், ரசிய நிலப்பிரபுத்துவ கொடுமைகளை டால்ஸ்டாயின் எழுத்துகள் மூலமே அறிந்தேன், என்று கூறினார். இதுவே நாம் எதிர்பார்க்கும் விமர்சனப் போக்கு.

கலை, இலக்கியம் கருத்தியல் சார்ந்தவை. மேல்மட்ட அமைப்புகளில் ஒன்று. ஆயினும் மதமே கலை இலக்கியத்தை விட பலம் வாய்ந்த கருத்தியலாகும். மதம் பற்றி மார்க்சு கூறும் போது, 'மக்களின் அபினி' என்று மட்டும் கூறவில்லை. ஒடுக்கப் பட்டவரின் பெருமூச்சு, இதயமற்ற உலகத்தின் இதயம், ஆத்மா அற்ற நிலையின் ஆத்மா என்றும் கூறிய பின்னரே **'மதம் மக்களின் அபினி'** எனச் சொன்னார்.

அபினி வெறும் மயக்கம் மட்டும் தருவதல்ல; ஒரு பொய்மையான தற்காலிக சந்தோசத்தையும் தருவதாகும். இதை ஒழித்து யதார்த்தமான நிரந்தர மகிழ்வு ஏற்படுத்துவதற்கு, பொய்மையின் தேவையை விடுவிப்பதற்கேற்ற சூழலை, கட்டுப் பாடுகளை மனநிலைகளை நாம் ஏற்படுத்த வேண்டும்.

பெரும்பாலான மக்கள் சினிமாவின் பல்வேறு கலை வடிவங்களில் மயங்கி விடுகின்றனர். தற்காலிக பொய்மை மகிழ் வில் மயங்கி தியேட்டர்களில் ஆர்ப்பரிக்கின்றனர். கோவில்களில் தீப ஆராதனையின்போது மதத்தில் மயங்கியவர்கள் 'அரோ கரா', 'கோவிந்தா' என்று ஓசை எழுப்பவில்லையா? அதுபோல என்றும் கூறலாம்.

சினிமாக்களில் காட்டப்படும் கதைகளும், கூறும் கருத்து களும் மதம், கடவுள் போன்ற கற்பனைகளே. மனிதனே மதத்தை ஆக்கினான், மதம் மனிதனை ஆக்கவில்லை. கலை, இலக்கியங்

படிப்பகம்

padippakam



களை மனிதனே ஆக்கினான். ஆனால் அந்த கலை, இலக்கியங்கள் மனிதனை ஆக்கி, உயர்த்தி வருவதாகக் கூறுவதற்கில்லை.

**ரோஜா, பம்பாய்** ஆகிய திரைப்படங்களில் வரும் கற்பனைக் காதல் கதைகள், நடனங்கள், பாடல்கள், பின்னணி இசை, பிரபல நட்சத்திரங்களின் நடிப்பு ஆகியவற்றில் மக்கள் மயங்கியதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமேயில்லை. கலை உணர்வுகள் உடைய எவருமே அங்கு கவரப்படுவர். மக்கள் அனைவரும் கலை உணர்வு பெற்றவரே. இது கலை உருவங்கள் தரும் கவர்ச்சியே. அவற்றில் கூறப்பட்ட உள்ளடக்கம் மக்களுடைய வாழ்க்கைச் சூழல்களையோ, கடப்பாடுகளையோ முன்னேற்றமாக மாற்றிவிடப் போவதில்லை மாறாகப் பிற்போக்காக ஈர்த்துச் செல்லக்கூடியவையே, மதம்போல.

ரோஜா, காசுமீர் முசுலிம் மக்களின் சுதந்திரப் போராட்டத்தை பயங்கரவாதிகளின் போராட்டம் எனச் சித்தரிக்க முயலும் பிற்போக்கான கருத்துக் கொண்டது. அங்குப் பயங்கரவாதிகளுடன் சமரசப் பேச்சு வேண்டாம் என்ற பிடிவாதம் கொண்ட கதாநாயகன், ஒரு பெண்ணின் தயவால் உயிர்பிழைப்பதாகக் காட்டப் படுகிறது. கணவனின் உயிருக்காக எமனுடன் வாதாடிப் பெறும் சாவித்திரி போல கதாநாயகி தன் கணவனின் உயிருக்காக இராணுவ, அரசியல் தலைவர்களை மன்றாடி வேண்டுகிறாள். இந்தியப் பேரரசின் அரசியல் கொள்கையை ரோஜா கடைப்பிடித்ததால் சவான் போன்ற மத்திய அமைச்சர்களின் பாராட்டுப் பெற்று அரசியல் அங்கீகாரத்துடன் அகில இந்தியாவிலும் பணம் குவித்தது.

பலகோடி பணச் செலவில் பிரம்மாண்டமான காட்சிகளைக் கொண்ட பம்பாய் படமும் மக்களைக் கவர்ந்ததில் வியப்பு இல்லை. முரண்பட்டக் காதல், இந்து வாலிபன் முசுலிம் பெண்ணைக் காதலிப்பது, எதிர்ப்புகளிடையே வாலிபன் தன் கையை வெட்டி, 'ஒரே இரத்தம்' என்று வாதிட்டுப் பெண் கேட்பது ஆகியவை வியப்பூட்டக் கூடியவையே. (முசுலிம் வாலிபன் இந்துப் பெண்ணைக் காதலித்து அவளுக்குப் பர்தாப் போடுவதென்றால் யாவரும் முகம் சுளித்திருப்பர். பிராமணர், சாதி குறைந்த பெண்ணைக் காதலிப்பதாகவே காட்டுவர். தாழ்த்தப்பட்ட வகுப்புப் பெண்ணை காதலித்து மணப்பதாகவே காட்டமாட்டார்கள்.)

படிப்பகம்

padippakam



அடுத்து வரும் பம்பாய் கலவரக் காட்சிகள் திரித்துக் கூறப் பட்டவை என்பதை, அச்சம்பவம் பற்றி நன்கு அறிந்த அனை வரும் ஒப்புக் கொள்வர். முசுலிம்களது பாபர் மசூதி இடிக்கப் பட்டது மட்டுமல்ல. பம்பாயில் முசுலிம்கள் கொல்லப்பட்டனர். அவர்களது பொருள்கள் உடைமைகள் சூறையாடப் பட்டன. போலீசாரே முசுலிம்களை சுட்டுக் கொன்றனர். அங்கு இந்துக் களைவிட முசுலிம்களே பெரிதும் பாதிக்கப்பட்டனர். இந்த வரலாற்று உண்மையை பம்பாய் படத்தில் திட்டமிட்டு மறைத்து விட்டனர். பாபர் மசூதியை இந்துக்களே கோபுரத்தில் ஏறி நின்று உடைத்த செயல் பத்திரிகைப் படங்களிலேயே பார்த் தோம். ஆனால் படத்தில், ஏதோ, தானே மசூதி உடைந்தது போல காட்டப் படுகிறது.

சிவசேனா தலைவரிடம் பம்பாய் படம் காட்டப்பட்டு அனுமதி பெற்றதுபோல முசுலிம் தலைவர்களிடம் காட்டப் பட வில்லை. படம் வெளியான பின்னர் ஆங்காங்கே முசுலிம்களே எதிர்ப்புத் தெரிவித்தனர். சிறுபான்மையினரின் குரல் இந்து பெரும்பான்மை அரசினரின் செவிகளில் ஏறவில்லை.

இந்தியாவில் இந்துக்கள் 86 சதவீதமும், முசுலிம்கள் 12 சதவீதமும் உள்ளனர். சிறுபான்மையினர் எதிர்ப்புக் கூறினாலும் பெரும்பான்மையினர் படத்தை ஆர்வமாகப் பார்ப்பார்கள் என இயக்குநர் மணிரத்தினம் தீர்மானித்திருப்பார். அவரைப் பொறுத்த அளவில் பண வசூலில் பெரும் வெற்றியே.

நிலப் பிரபுத்துவத்தின் தலையாய கருத்தியல் மதமே. முதலாளித்துவத்தில் அது சட்ட விதிகள் சார்ந்தவை ஆகிறது. உதாரணம் கூறுவதாயின் அரசியல்வாதிகள் செய்யும் கோடிக் கணக்கான ஊழல்கள் பற்றியும் அவர்கள் பல லட்சங்கள் இலஞ்சம் பெறுவதும் இங்கு மக்கள் அனைவரும் அறிந்திருந்த போதும், சட்ட விதிகளால் அவர்களது சொத்துக்களைப் பறி முதல் செய்யவோ அவர்களைத் தண்டிக்கவோ முடியவில்லை. மற்ற முதலாளித்துவ நாடுகளில் ஒரு பகுதியினராவது தண்டிக்கப் பட்டுள்ளதை அறிவோம்.

இந்தியாவில் இன்றும் இந்து சாம்ராஜ்யத்தை நிறுவும் அரசியலே முதன்மை பெற்று வருகின்றது. இந்த நோக்கில் சிறு பான்மையினரின் மதங்கள் ஒடுக்கப்படும் மதப்போராட்டங்களே முதன்மை பெறுகின்றன. அவற்றின் சின்னமாக பாபர் மசூதி இடிப்பு, அண்மையில் காசுமீரில் சரா-கி-சரீத் எரிப்பு ஆகிய வற்றையும் அங்கங்கே வெடிக்கும் மதக் கலவரங்களையும் காண

படிப்பகம்

padippakam



கிறோம். இவற்றில் பம்பாய்க் கலவரம் அண்மைக்கால வரலாறு பம்பாய் திரைப்படம் அனைத்து மக்களையும் 'நான் இந்தியன் எனக் கூறச் செய்யும் சொல்லணியான வார்த்தையுடன் இந்துமத சாம்ராஜ்யத்தை வலியுறுத்துவதாகவே அமைகிறது.

மீண்டும் நாம் மார்க்சின் கூற்றுக்கே வருவோம். மதம் என்ற அபினி மூலம் மக்களைப் பிரித்தும், மோதவிட்டும் தற்காலிக திருப்தி பெறுவதிலேயே இன்றும் மதவாதிகளும், அரசியல்வாதிகளும் குறியாக உள்ளனர். மக்களுக்கு இதை உணர்த்தி, நிரந்தர மகிழ்ச்சியுடன் சேர்ந்த நல்வாழ்வு கிட்டுவதற்கேற்ற சூழலை, கடப்பாடுகளை, மனநிலைகளை ஏற்படுத்தி பொய்மைகளிலிருந்து அவர்களை விடுவிக்கும் முயற்சிகளில் மக்களை நாம் ஈடுபடுத்த முயலவேண்டும். □

---

# பாவலரேறு பெருஞ்சித்திரனாருக்கு அஞ்சலி

தனித்தமிழ் போராளி பாவலரேறு பெருஞ்சித்திரனார் 11-6-95அன்று நம்மைவிட்டுப் பிரிந்தார். மொழி உரிமையை பாதுகாக்க அயராது உழைத்த அன்னாருக்கு எங்களது இதயபூர்வமான அஞ்சலி. மொழிக்காக அவர் ஆற்றிய தொண்டு என்றும் நினைவு கூறப்படும்.

மொழி வளர்ச்சிக்கான அவரது செயல்பாடுகள் மொழியை மொழி அளவிலேயே புரிந்து கொண்ட திராவிட மாயையிலிருந்து தன்னை முற்றிலும் துண்டித்துக் கொள்ளவில்லை.

அதனால்தான் ஏகாதிபத்திய எதிர்ப்பு, சாதி ஒழிப்பு ஆகியவற்றுடன் இணைத்து மொழிப்பிரச்சனையை அணுக அவரால் முடியவில்லை. தமிழகத்தை பொறுத்தவரை மொழிக்கான போராட்டங்கள் அடிப்படை சமுதாய மாற்றத்திற்கான போராட்டத்துடன் என்றுமே இணைக்கப்படவில்லை. திராவிடம் பேசியவர்கள் வர்க்கப்பார்வையற்றவர்களனது, வர்க்கம் பேசியவர்கள் மொழி உரிமைக்கான போராட்டத்தை சந்தேகக் கண் கொண்டு பார்த்தது ஆகிய இவைகளே அடிப்படையான சமுதாயமாற்றத்துடன் இணைந்த மொழி உரிமைக்கான போராட்டத்துடன் இணைத்து நடத்தப்பட முடியவில்லை. இன்று நாம் கற்றுக் கொள்ள வேண்டிய பாடம் மொழி உரிமைக்காகப் போராடுபவர்களை சந்தேகிப்பதை நிறுத்திவிட்டு அவர்களுடன் இணைந்து செயல்பட வேண்டியதன் அவசியத்தை உணருவதாகும்.

—ஆசிரியர் குழு

படிப்பகம்

padippakam

விவாத மேடை

# தாழ்த்தப்பட்டோர் அமைப்புகள் பலவாய் பிரிந்து நிற்பதற்கான காரணங்களும் அதற்கான தீர்வுகளும்

— அரங்க குணசேகரன்

நாட்டின் முன்னுள்ள ஜனநாயக சக்திகளும் சனாதன சந்தர்ப்பவாதிகளும் தலித் அமைப்புக்களின் தலைவர்களைப் பார்த்து அடிக்கடி எழுப்பும் வினாக்களில் ஒன்று-தாழ்த்தப் பட்டோர் தங்களுக்குத் தாங்களே பிரிந்து நின்று பல அமைப்புக ளாய்ப் பிரிந்து நிற்பது ஏன்?

முதலாளித்துவ அரசியல் கட்சிகளுக்கும் தாழ்த்தப்பட் டோர் அரசியல் அமைப்புகளுக்கும் அடிப்படையான வேறுபாடு களைப் புரிந்து கொள்ள வேண்டும். பார்ப்பன பனியா உயர்சாதி ஆளும் வர்க்கங்களுக்கும் பிற்படுத்தப்பட்ட அல்லது இடை நிலைச்சாதிகளாக விளங்குகிற மத்தியதர வர்க்கத்துக்குமான அரசியல் அதிகாரத்துக்குமான களங்களாக பல்வேறு அரசியல் கட்சிகள் தோற்றமெடுப்பதும் அவைகள் பிளவு படுவதும் அவை தமக்குள்ளே அணிசேர்க்கைகள் உருவாவதுமான அரசியல் கட்சிகளைப் போல தலித் அமைப்புக்களை நோக்குவது அடிப் படையிலேயே தவறானது. அக்கட்சிகள் பிரதிநிதித்துவப் படுத்தும் மத்தியதர வர்க்க சாதிகள் ஒரு வர்க்கமாக திரண் டெழுந்து ஒரு முதலாளித்துவ சனநாயக முழுமைத் தன்மையைக் கூட அடைந்துவிட முடியாதபடிக்கு இந்துத்துவ சனாதனக் கோட்பாட்டில் ஊறித் திளைத்த தாழ்த்தப்பட்டோரல்லாத சாதிகள் ஒவ்வொன்றும் சாதிய நிறுவனமயமாக்கப்பட்ட இந்திய சமூகத்தில் கிடைக்கும் பல்வேறு சுகங்களையும் விஷேச அந்தஸ்து களையும் வளர்ந்துவரும் புரட்சிகர அரசியல் அலை மற்றும் தலித்துகளின் எழுச்சி வெள்ளம் அடித்துச் சமனப்படுத்திவிடுமோ என்கிற அச்சத்தில் நின்றுகொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் அவர்களின் அச்சத்தைப் போக்கும் பாதுகாவலனாக ஆர்.எஸ்.

படிப்பகம்

padippakam



எஸ்.ம் இந்து முன்னணியும் விஸ்வ ஹிந்து பரிசத்தும் விவேகானந்தர் மன்றங்களும் சிவசேனாவும் பஜ்ரங்தளமும் பிராமண சங்கமும் பூரி சங்கராச்சாரியார் மடங்களும் சைவ வெள்ளாளர்களைக் கொண்ட திருமடங்களும் ஒவ்வொரு தனித் தனி சாதிச்சங்கங்களின் பின்னாலும் தத்தமக்கே உரிய பார்ப்பனீய் அணுகுமுறைகளால் கட்டி எழுப்பப்பட்டு ஊட்டி வளர்க்கப் படுகின்றன.

தேர்தல் அரசியல் அதிகார நலன்களையொட்டி இச்சாதிச் சங்கங்களைச் சேர்ந்த சாதிகளில் பிறந்து இச்சாதிச் சங்கங்களின் தொகுப்பான மத்தியதர வர்க்க முதலாளித்துவக் கட்சிகளில் இருக்கும் அரசியல்வாதிகள் தங்களது பொருளாதார அரசியலதிகார வாய்ப்புக்களை தத்தமது சாதிகளுக்கு திறந்துவிடுகிறார்கள். எனவே, பிற்படுத்தப்பட்ட அல்லது இடைநிலைப்பட்ட மத்திய தரவர்க்க சாதிகள் தங்களை ஒரே சாதிச்சங்கம், ஒரே தலைமை, ஒரே கொடி என்ற குடையின், கீழ் நிலை நிறுத்திக்கொள்வது சாத்தியமாகிறது. சாதியச் சங்கங்களாய் கிளைத்து எழுந்து நிற்கும் மத்தியதர சாதிகள் தங்களுக்குள் நடத்தும் பொருளாதார அதிகாரப் போட்டியின் வெளிப்பாடே தி.மு.க, அ.தி.மு.க, காங்கிரஸ், பா ம க. போன்ற கட்சிகளின் தோற்றமும் அக்கட்சி ஒவ்வொன்றுக்குள்ளேயும் நிலவும் குழு மோதல்களும் ஆகும்.

ஆனால் தாழ்த்தப்பட்டவர்கள் இந்திய சமூகத்தில் அடிப் படையில் உற்பத்தி சக்திகளாக விளங்கிய போதிலும் தாங்கள் எந்தவித ஆளுமையையும் செலுத்த முடியாதவர்களாக தனிச்சேரி முறையில் ஒதுங்கிக்கிடக்கிறார்கள். இயல்பாகவே சாதிய எதிர்ப்பு போராட்ட மரபுக்கூறில் வளர்ந்த இவர்கள் சாதிரீதியாகவே தங்களை ஐக்கியப்படுத்துவதற்கும் நாடு தழுவிய ஒரே அமைப்பாக திரள்வதற்கும் இவர்களின் மரபுக்கூறே முதலில் தடையாக இருக்கிறது. அதாவது சாதி ரீதியான ஆதிக்கத்தை எதிர்ப்பதற்கு மட்டும்தான் தாழ்த்தப்பட்டவர்களுக்கு தெரியுமே தவிர தங்களை ஒரு சாதியாக ஆக்கி நிலை நிறுத்திக் கொள்வதற்கு அறியாதவர்கள். சாதிய சமூக இந்தியாவில் தாழ்த்தப் பட்டவர்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் இந்தியா முழுமையும் அல்லது தமிழகம் முழுமையும் எல்லாக் காலங்களிலும் எல்லா இடங்களிலும் ஒரே தன்மைத்தாய் இருப்பதில்லை ஒவ்வொரு வட்டாரங்களிலும் ஏற்பட்டுள்ள புறநிலை வளர்ச்சிக்கேற்பவே

படிப்பகம்

padippakam



தலித்துகளின் வளர்ச்சியும் தலித்துகள் மீதான ஒடுக்குமுறையும் வடிவம் கொண்டுள்ளது. இந்தப் போக்கானது நாடு தழுவிய ஒரே வகையான ஒடுக்குமுறைக்கு ஒரே வகையான தீர்வை நோக்கிய ஒரே அமைப்பு என்கிற கோட்பாட்டுக்கு எதிராய் நிற்கிறது.

ஒவ்வொரு வட்டாரங்களிலும் இருக்கின்ற புற அக சூழலுக் கேற்ப அப்பகுதி மக்களின் சாதிய ஒடுக்குமுறைகளுக்கு எதிரான சிறுசிறு தலித் அமைப்புக்கள் தங்களின் பொருளாதார மக்கள் சக்தி இவற்றின் தன்மைக் கேற்ப தலித் அமைப்புக்கள் இயல்பாகவே தோற்றமெடுக்கின்றன. ஒரு வட்டாரத்தில் தோன்றுகிற ஒரு தலித் அமைப்பு அப்பகுதிப் பிரச்னைகளுக்கு மட்டும் தீர்வு காணுகிற அமைப்பாகவும் பிரச்னைக்குத் தீர்வு காணப்பட்ட வுடன் நீர்த்துப்போகிற அமைப்புக்களாகவும் சாதிய ஒடுக்கு முறையை எதிர்ப்பது என்கிற கருத்துக்கு அப்பால், தேவைக்கு அப்பால் சாதிய கட்டமைப்பிலிருந்து விடுதலை அல்லது தலித்து கள் விடுதலை என்கிற தொலைதூர குறிக்கோள்களற்று பகுதி யளவிலேயே தேங்கி நிற்கிற இயக்கங்கள்.

நாட்டின் ஏதோவொரு பகுதியில் சாதி ஒடுக்குமுறையை எதிர்த்து எழுந்த ஒரு இயக்கம் தன்னளவில் தனது பணியை சுருக்கிக்கொண்டு உயிர்த்திருக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் நாட்டின் வேறொரு மூலையில் அல்லது வேறொரு வட்டாரத்தில் அப்பகுதியைச் சார்ந்த ஆதிக்க சாதிகளின் கொடுமைக்கு இலக் கான தலித் மக்கள் அப்பகுதியின் பிரச்னைக்குத் தீர்வுகாண தங்க ளுக்கான ஒரு அமைப்பை கட்டிக்கொள்கிறார்கள். இப்படியாக வட்டாரம் சார்ந்த பல்வேறு தலித் அமைப்புகள் தோற்றம் பெறு வது தவிர்க்க முடியாததாகி விடுகிறது. நந்தனார் காலம் தொட்டு இன்று வரையும் வட்டார அளவிலான, மாவட்ட அளவிலான தலித் அமைப்புக்களின் இத்தகைய தோற்றமானது தவிர்க்க இயலாமல் தொடர்ந்துகொண்டு தானிருக்கிறது.

## அம்பேத்கரும் தலித் அமைப்புகளும்

இந்திய அளவில் குறைந்தபட்சம் மாநில அளவிலாவது தாழ்த்தப்பட்டவர்களுக்கென ஒரே அமைப்பு, ஒரே கொடி, ஒரே தலைமை என்கிற கருத்து அம்பேத்கர் அவர்களாலும் அவர் காலத்தவரான தாத்தா இரட்டைமலை சீனிவாசனார், பாலா சுந்தர்ராஜ், எம். சிவராஜா போன்றவர்களால் உணரப்பட்டது. ஆனால் அவர்கள் காலத்திலேயே அது கனவாகிப் போனது

படிப்பகம்

padippakam



மொழிவழி மாநிலங்கள் இந்திய அளவிலான ஒரே தலித் அமைப்பு என்பதை சாத்தியப்படுத்தாமல் போய்விட்ட அம்சங் களில் ஒன்று. மாநில அளவிலும் முதல் தலைமுறையைச் சேர்ந்த இரட்டைமலை சீனிவாசனார், எம். சிவராஜா போன்றவர்களுக் கிடையேயான கொள்கை வேறுபாடுகளும் நடைமுறைகளும் ஒரே அமைப்புக்குத் தடையாகிவிட்டது. தலித் உட்சாதிகளி டையே ஏற்பட்ட அறிவு மரபு,போர்க்குணம்,மத்தியகால வரவின ராக தமிழகம் வந்து சேர்ந்த தலித் சாதியினர் சிலர்-ஆகிய இவர்களிடையே நிலவுகின்ற வேறுபாடுகள் ஒவ்வொரு வட்டா ரங்களிலும் பெரும்பான்மையாக வாழுகிற தலித் சாதிகள் அவ் வட்டாரத்தில் வாழுகிற சிறுபான்மை தலித் சாதிகளின்பால் காட்டுகிற வேற்றுமைகள், சிறுபான்மை தலித் சாதிகளினுடைய சாதி எதிர்ப்பு போராட்டங்களில் முழுமையாக பங்கெடுத்துக் கொள்ளாமல் ஒதுங்கியிருப்பதும் உட்சாதிகளின் பெயரால் தனித்தனி தலித் அமைப்புகள் தோன்றுவதற்கு காரணங்களாக அமைகின்றன. இப்படித்தான் தமிழ்நாடு பறையர் மகாசன சங்கங்களும் தேவேந்திரகுல வேளாளர் சங்கங்களும் அருந்ததியர் சங்கங்களும் தோற்றம் பெறுகின்றன.

அம்பேத்கர் காலத்திலேயே அவர் பிறந்த மகார்கள் மட்டுமே அவருக்குப் பின்னால் அணிதிரண்டனர். மகார்களைப் போன்றே தீண்டாமை கொடுமைக்கு உள்ளான சாமர்கள் அம்பேத்கருக்கு எதிராக வேறொரு தலித் அமைப்பாக தங்களை ஆக்கிக் கொண்டனர் ஆனால் அம்பேத்கரின் அரசியல் அரங்கம் சர்வதேச ஜனநாயக சக்திகளாலும் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களா லும் பெரும் கவனத்தை ஈர்த்தது. அம்பேத்கரின் கருத்துகளுக்கு இந்தியா முழுமையும் ஆதரவும் பெருமதிப்பும் கிடைத்தது இரண்டாயிரம் ஆண்டுகால இந்திய வரலாற்றில் அம்பேத்கர் என்ற ஒரே ஒரு பெயர்தான் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இருந்த தலித்மக்களால் தங்களுக்கான விடியலுக்கான குறியீடாக உணரப்பட்டது. மாபெரும் தலைவரின் நூற்றாண்டு விழா கொண்டாட்ட காலம்வரையும்கூட தலித்துகள் ஒரே அமைப்பு, ஒரே தலைமை, ஒரே கொடி என்ற சிந்தனைக்கு வரமுடியாமல் போனது வருத்தத்திற்குரியதே. அம்பேத்கர் பெயரில் நூற்றுக் கணக்கான பல்லாயிரக்கணக்கான இயக்கங்கள் மன்றங்கள் பல்கிப் பெருகியதே அன்றி அவை தமக்குள் ஒரு தொடர்பற்று தத் தமது சுயசார்புடனேயே விளங்கின.

தமிழகத்தைப் பொறுத்தவரை முதலாளித்துவ அரசியல் கட்சிகளில் அங்கம் வகித்து பல்வேறு காரணங்களால் வெளி

படிப்பகம்

padippakam



யேறிய அல்லது வெளியேற்றப்பட்ட தலித் தலைவர்கள் தாம் உருவாக்கிய தலித் அரசியல் இயக்கங்களால் கொள்கை, திட்டம், நடைமுறைகளில் பல குறைபாடுகள் இருப்பினும் தமிழகம் தழுவிய ஒரே தலித் அமைப்புக்களின் தேவையை மக்களுக்கு ஊட்டினர். ஆனாலும் இத்தலைவர்கள் குறிப்பாக இளைய பெருமாள், பாலசுந்தரம் போன்றவர் முதலாளித்துவ அரசியல் கட்சிகளோடு பேரம் பேசுவதிலும் சோரம் போவதிலும் இவர்கள் தமக்குள்ளேயும் பல தலித் அமைப்புகள் தோற்றம் பெற்றன.

கம்யூனிஸ்ட் புரட்சியாளர்களும் தேசிய இன விடுதலைப் போராளிகளும் தலித் மக்களின் மீதான சாதி ஆதிக்க சக்திகளின் ஒடுக்குமுறைகளுக்கு தீர்வுகாண்பதில் தனிச்சிறப்பு வாய்ந்த அக்கறை செலுத்தத் தவறிவிட்டார்கள். 1968—69களில் தோன்றிய நக்சல்பாரிகள் எழுச்சி இயக்கத்தின் தொடர்ச்சியாக அவ்வியக் கத்தின் போராட்ட வீச்சோடு மராட்டியத்தில் 1973—74களில் தோற்றம் பெற்ற 'தலித்பேந்தர் ஆப் இந்தியா' (இந்திய ஒடுக்கப் பட்ட சிறுத்தைகள் இயக்கம்) தமிழகத்திலும் மதுரையில் தோழர் மலைச்சாமி என்பவரால் கட்டப்பட்டது. அவ்வியக்கம் அவர் காலம் வரையிலும் மதுரை நகருக்கு அப்பால் வீச்சுப்பெறாமல் போய்விட்டது.

கம்யூனிஸ்ட் புரட்சியாளர்கள் குழுக்களில் பங்கெடுத்துக் கொண்ட தலித் இளைஞர்கள் எண்பதுகள் தொடங்கி சுமார் பத்து ஆண்டுகள் வரை கட்சிக்குள்ளேயே தலித் தலைமை, தலித் பிரச்னைகளுக்கு எனத் தனி அமைப்பு என்ற கோரிக்கைகளை முன் வைத்துப் போராடினர். அத்தகைய கோரிக்கைகள் புறக் கணிக்கப்பட்ட நிலையில் சில தலித் இளைஞர்கள் இடதுசாரி போர்க்குண வீச்சோடு தலித் அரசியல் விடுதலைக்கான களத்தில் குதித்தனர். இதே போன்ற பிரச்னைகளை எதிர்கொண்ட தமிழ் தேசிய இன விடுதலைக் குழுக்களில் பங்கெடுத்த போர்க்குணம் கொண்ட தலித் இளைஞர்களும் அவர்கள் தமது அமைப்புக்கள் போராடி தோற்றபின் தலித்துகளுக்கென தனியான போர்க் குணம் கொண்ட அமைப்புக்களைக் கட்டலாயினர்.

இவ்வாறாக எழுந்து நிற்கும் தலித் அமைப்புக்களில் குறிப் பிடத்தக்கவாக தமிழக மனித உரிமைக்கழகம், மலைச்சாமியால் கட்டப்பட்டு பின்னர் திருமாவளவன் அவர்களால் தலைமை தாங்கப்படும் DPI விடுதலைச் சிறுத்தைகள் இயக்கம், தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம், தியாகி இமானுவேல் பேரவை, உரிமை கோருவோர் ஒருங்கிணைப்புக்குழு, அம்பேத்கர்

படிப்பகம்

padippakam



மக்கள் விடுதலை முன்னணி, அம்பேத்கர் சிறுத்தைகள் இயக்கம், தலித் பண்பாட்டுப் பேரவை, மதுக்கூரில் தோழர் உஞ்சை ராஜனை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் **மனுசங்க** இதழ், தலித் அரசியலைப் பற்றி 85களுக்குப் பிறகு பேசிய **புறப்பாடு** இதழ் ஆகிய இயக்கங்களை சுட்டிக்காட்டலாம்.

87—88க்கு பிந்திய காலக்கட்டங்களில் கம்யூனிஸ்ட் புரட்சியாளர்கள் குழுக்களிலிருந்து வெளியேறிய தோழர் அ. மார்க்ஸ் அவர்கள் தலித் அரசியல் என்ற கருத்தாக்கத்தை வெளிப்படுத்துவதில் அம்பேத்கர் நூற்றாண்டையொட்டி மிகச்சிறந்த பங்களிப்பை தனது **நிறப்பிரிகை** இதழ் மூலம் செய்திருக்கிறார். 90களில் அம்பேத்கர் நூற்றாண்டு தொடங்கி இடதுசாரிப்போர்க்குணம் கொண்ட தலித் அமைப்புக்களிடையே ஒரு கூட்டிணைவும் ஒருங்கிணைவும் ஏற்பட்டு வருகிறது. இப்போக்கின் வீச்சாக பல்வேறு தலித் அமைப்புக்களிடையேயும்கூட ஒருபொது திட்டத்தின் கீழ் பிரச்னையின் அடிப்படையில் ஒன்றிணைந்து போராடுவது என்கிற உணர்வு வெளிப்பட்டு வருகிறது. 199+ அக்டோபரில் கட்டப்பட்ட தலித் போராட்டக் கூட்டுக்குழு 'பஞ்சமி நிலமீட்பு இயக்கம்— தமிழ்நாடு' என்ற பெயரில் பல நூற்றுக்கணக்கான தலித் அமைப்புகள் ஒன்றிணைந்து நவம்பர் 19ல் ஒரு லட்சம் மக்களைக் கொண்ட மாபெரும் பேரணியை சென்னையில் நடத்திக் காட்டியதன் மூலம் தலித் மக்கள் ஒன்றிணையவேண்டும் என்கிற உந்துதலை மேலும் அதிகப்படுத்தியுள்ளது.

முதலாளித்துவக் கட்சிகள் ஒன்று இரண்டாக்கப் பட்டு பகலாகப் பிரிந்ததுபோல் அல்லாமல் தலித் அமைப்புகள் பல்வேறு பகுதிகளிலும் பலவாகத் தோன்றி தங்களுக்குள் ஒரு கூட்டமைப்பின் தேவையைக் கோரி நிற்கின்றன. எதிர்வரும் காலத்தில் இவை தமக்குள் தலித் விடுதலையை சரியான திசைவழியில் இட்டுச்செல்லும் இயக்கப்போக்கில் மக்களின் ஆணைக்கிணங்கி ஒரே அமைப்பாய் உருமாற்றம் அடையும் நாள் வெகுதொலைவில் இல்லை.

'ஆயிரம் பூக்கள் மலரட்டும்' என்ற மாவோவின் கருத்திற்கேற்ப அடக்கப்பட்ட மக்களின் உரிமை முரசமாய் உணர்ச்சிப் பிழம்பாய் தோற்றம் பெற்றுள்ள தலித் அமைப்புகள் பலவும் தங்களுக்குள் தொடர்ந்து தலித் விடுதலை என்னும் கோட்பாட்டில் ஊன்றி முன்னேறுவதன் மூலமே தலித் மக்களின் ஐக்கியத்தையும் சாதிக்கமுடியும். □

படிப்பகம்

padippakam

உலகப் போராளிகள் — தொடர்

# எர்னஸ்ட்டோ செ குவேரா

-பிரமிள்

அர்ஜன்டைனாவில் ஜூன் 14, 1928இல் பிறந்த செ குவேரா மருத்துவத் துறையில் பயிற்சி பெற்றுத் தோல் வியாதி நிபுணராகத் தேறியவர். மாணவராக இருக்கும்போது, தென்னமெரிக்கச் சுற்றுப் பயணத்தில், மக்களின் நிலையும் அவர்களைச் சுரண்டுகிற சக்திகளின் இயக்கங்களும் அவருக்குக் கண்கூடாகப் புலனாயின.

ஒரு கடுமையான ஆஸ்த்துமா நோயாளியாக அவர் இருந்தும் கூட, பட்டீஸ்டா என்ற கியூபா தேசத்துக் கொடுங்கோலனுக்கு எதிரான கெரில்லா இயக்கத்தில் அவர் சேர்ந்தார். இயக்கத் தலைவரான ஃபிடல் காஸ்ட்ரோவின் வலதுகரமாகத் திகழும் அளவுக்குத் திடமான தலைமையை வகுத்தார். கியூபாவில் பட்டீஸ்டாவை காஸ்ட்ரோவின் அணி முறியடித்து, அங்கே புதிய அரசு பிறந்தது.

பொலீவியாவில் 1965 அளவில் பரியண்டோஸ் என்பவனது கொடுங்கோல் ஆரம்பித்தது. பொலீவியா உட்பட பல தென்னமெரிக்க நாடுகளிலும் கொடுங்கோல், போலித்தனமான இடதுசாரி எதிர்ப்பு அணிகள், இவை நிலவிய காலம் அது நேரடிச் செயல்முறையினை மட்டும் மதித்த செ குவேரா, பொலீவியாவில் ஆரம்பித்து எல்லா லத்தீன் அமெரிக்க நாடுகளிலும் கெரில்லாப் போர் முறை மூலம் ஒரு புரட்சியை ஏற்படுத்த விழைந்தார்.

துரதிர்ஷ்ட வசமாக பொலீவிய கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கியமான, அதன் பிரமுகர்களுள் ஒருவனான மோஞ்ஜே இதை ஆதரிக்கவில்லை. ஒரு கெரில்லா இயக்கத்துக்கு உள்ள முக்கியமான தேவைகள் மூன்று: உணவு, மருந்து, போராளிகள் மரணமடைந்ததும் அவர்களது இடத்தை நிரப்பும் புதிய போராளிகள். இவற்றைப் பிரதேசவாசிகளின் ஒத்துழைப்பு இல்லாமல் பெறவே முடியாது. இந்தப் பிரதேச ஒத்துழைப்பு கிடைக்க வேண்டுமானால், அங்குள்ளவர்களுக்கு கெரில்லா இயக்கத்தின் நோக்கம் விளக்கப்படவேண்டும். மோஞ்ஜே இந்த விளக்கத்துக்காக கட்சியின் சாதனங்களை உபயோகிக்காதது மட்டுமல்லாமல், போராளிகள் கெரில்லா இயக்கத்தினுள் சேராதவாறு தடுத்தும்

படிப்பகம்

padippakam



இருக்கிறான். இதன் காரணம் செ குவேராவின் நாள் குறிப்பின் (பொலீவியன் டைரி) முதல் மூன்று மாதங்களிடையே தரப்பட்டிருக்கிறது.

கெரில்லாவின் நேரடிப் பிராந்தியச் செயல்முறைக் கடினங்களை உணராமல், அதற்கான தலைமைத் தகுதியை முன் அனுபவத்தின் மூலம் பெற்றிராமல், இயக்கத்துக்குத் தலைமை பெற விரும்பி மறுக்கப்பட்டமைதான் மோஞ்ஜேயின் நடத்தையை விளக்குகிறது. தென்னமெரிக்கக் கண்டம் முழுவதும் பரவி இருக்க வேண்டிய இயக்கம், இதன் விளைவாக முளையிலேயே கிள்ளப்பட்டுள்ளது.

கெரில்லா என்பவன் 'பயங்கரவாதி' என்ற அரசின் பிரச்சாரமே, பொலீவிய கிராமவாசிகளை எட்டியுள்ளது இதன் விளைவுதான் பொலீயாவில் செ குவேராவின் தோல்வி. கெரில்லாக்களுடன் மக்கள் நேரடித் தொடர்பு கொள்கிறபோது, இந்தப் பொய்மை மாற்றமடைவதை இந்த நாள்குறிப்பு நிரூபிக்கிறது. முதன்மையாக கெரில்லா என்பவன் ஒரு தீவிரமான சமூக தரிசனப் பார்வையின் மனித வடிவமாவான். அரசியல் வாதியினின்றும் இவன் வேறுபட்டவன். சுரண்டல் வாதிகளின் வாக்குறுதிகளை நம்பி ஏமாந்து இதன் விளைவாக ஒரு சமூகத்தின் தீவிரமான சக்திகள் அமைய முடியாதவாறு முடக்கப்படும் போது அந்தத் தீவிர சக்திகளே கெரில்லா இயக்கமாக வெடித்தெழுகின்றன.

செ குவேரா இது விஷயத்தில் ஏமாற்றப்பட்ட வர்க்கத்தினனும் அல்ல. வெகு எளிதாக ஏமாற்றுகிற வர்க்கத்தினுள் தன்னை ஐக்கியப்படுத்திக் கொள்ளக்கூடிய பின்னணியும் பயிற்சியும் மதிநுட்பமும் பிடிவாதமும் அவனுக்கு இருந்திருக்கின்றன. இதற்கும் மேல் அவன் ஒரு கவிஞனும்கூட. அரசியல் பிரச்சினைகளுக்கு அவன் முக்கியத்தும் தந்தமையால் தென் அமெரிக்காவின் ஸ்பானிய மொழி ஒரு மாபெரும் கவிஞனை இழந்து விட்டது என்றும் கூறப்படுவதுண்டு. உண்மையில் இந்தத் திறனும் கவித்துவத்தின் அடிப்படையான உணர்வு நுட்பமும் அபாரமான நேர்மையும் சங்கமித்ததுடன், மாணவனாக இருக்கும் போது செ குவேரா மேற்கொண்ட தென்னமெரிக்க சுற்றுப்பயணத்தின் விளைவான நேரடிக் காட்சிகளும் சேர்ந்துதான் அவனை ஒரு புரட்சிவாதி ஆக்கின. கெரில்லா இயக்கத்தின் மூலம் ஒரேடியாக அரசு மாறாவிட்டாலும், தான் யாருக்காகப் போராடுகிறோமோ அவர்களுக்கு ஏதாவது லாபம்

படிப்பகம்

padippakam



வந்தாக வேண்டும் என்பதுதான் 'செயின் நோக்கம். செ குவேரா வின் நாள்குறிப்பில் உள்ள ஒரு குறிப்பு இதற்கு சாட்சியமாகும். எனவே அவன் ஏதோ வீரச் செயலாக கெரில்லா ஆகியவனும் அல்ல.

இத்தகைய ஒரு தலைமையை, அதன் வெற்றி தோல்விகள் அறுதியிடாது. சீஸரையும் நெப்போலியனையும் அவர்களது வெற்றிகளுக்காக மட்டும் பெரிய போர்த் தலைவர்கள் என்று கொண்டாடுவதில்லை. பார்க்கப் போனால், சாம்ராஜ்ஜிய சக்தி களை அதுவும் பகடைக் காய்களாக நகர்த்திய அவர்களது தந்தி ரங்களையும் மீறிய உயர்தர மனித குணாம்சத்தை அளவையாக்கி னால், செ குவேரா அவர்களை விடவும் உன்னதமான போர்த் தலைவன். செ குவேராவின் நாள்குறிப்பு அதற்கு சாட்சியம் அளிக்கிறது. இத்தகைய ஒரு சாட்சியம் உலகிற்குக் கிடைத்ததே ஒரு அதிசயம்தான். 1966 நவம்பர் 7-ல் ஆரம்பித்து, 1967 அக் டோபர் 7-ஆம் தேதி முடிவடைகிற இந்த நாள் குறிப்பு, பொலீவிய பிரசிடெண்டான பரியண்டோஸிடம் அகப்பட்ட பின்பும் கூட வெளிவந்து விட்டது. நாள்குறிப்பு பற்றிய தகவல் பரவலாகத் தெரிந்தமை இதற்கு ஒரு முக்கிய காரணம். எனவே நாள் குறிப்பை மறைக்கவோ அழிக்கவோ பரியண்டோஸினால் முடியவில்லை. சக்தி மிகுந்த உலகத் தரத்து சிந்தனாவாதிகளும் அறிஞர்களும் செ குவேராவின் சார்பில் இருந்தமையாலேயே இந்த நாள் குறிப்பு பரியண்டோஸின் பிடியிலிருந்து விடுபட்டது.

செ குவேராவின் உடலைத்தான் விரோதிகளினால் அழிக்க முடிந்திருக்கிறது. மனிதனை அவர்களினால் தீண்டக்கூட முடிய வில்லை. அவன் இந்த நாள் குறிப்பின் பக்கங்களில் இன்றும் ஜ்வலித்துக் கொண்டிருக்கிறான். இந்தப் பக்கங்களைப் படிப்ப வர்கள் சுவாரஸ்யத்தை எதிர்பார்க்கக் கூடாது. கெரில்லா இயக்கத்தின் அன்றாடப் பிரச்சினைகளை பதிவு செய்ததாகவே இந்த நாள் குறிப்பு உள்ளது. யாருக்காகவோ எழுதப்பட்ட தொனி இங்கே அறவே இல்லை. பரிபூர்ணமானதைத் தவிர மற்ற வற்றைக் கழித்து விடுகிற சக்தியும் இந்த எழுத்து முறையின் ஆதாரம்.

'சாய்வு நாற்காலித் தத்துவவாதிக'ளுக்கு இந்த நாள் குறிப் பின் மனிதார்த்த அம்சம் புரியுமா என்பது சந்தேகம். புரட்சி இயக்கம் ஒன்றன் அன்றாடத் தன்மையில் தத்துவத்துக்கு ஆதார மான மனித அம்சங்களைக் காணக்கூடியவனுக்கு செ குவேரா வின் நாள்குறிப்பு ஒரு அரிய பொக்கிஷம்; தன்னைத் தானே சில அபூர்வ நிலைமைகளில் நிறுத்தித் தரிசிக்கத் தூண்டும் கண்ணாடி.

படிப்பகம்

padippakam

முன்வரும்படி ரஜினிக்கு சுப்பிரமணிய சுவாமி அழைப்பு.....

இது தமிழகத்தின் சமீபத்திய அரசியல் நிகழ்வுகள். அழ்கி நாற்றமடிக்கும் பாராளுமன்ற அரசியலின் வெளிப்பாடுதான் இது. இது போன்ற அரசியல் வேசித்தனங்களுக்கு எப்போது சாவு மணி அடிப்பது. சினிமா நடிகனாக இருப்பது அரசிசயல் வாதியாக மாறுவதற்கான தகுதி. எம்.ஜி.ஆர் காலம் முதல் துவங்கி என்.டி.ஆர். ஜெயலலிதா, ரஜினி என்று மேலும் தொடருகிறது. ஆதரவற்றவர்களுக்கு உதவுவதாக காட்டுவது, பெண்களை அநீதிகளிலிருந்து காப்பதுபோல் காட்டுவது இவைகள் தான் அடிப்படை மக்களை ஏமாற்ற இவர்கள் கையாளும் தந்திரங்கள். இதன் மூலம் இவர்கள் சுருட்டும் கோடிகளுக்கு எந்த கணக்கும் இல்லை. இவர்களுக்கு அரசியல் பிரவேசம் மேலும் சுருட்டுவதற்கும், சுருட்டியதை பாதுகாப்பதற்குமான தொழில். இதனால் ஒட்ட சுரண்டப்படுகிறவர்கள் உழைக்கும் மக்கள்தான். அவர்கள் போடும் எலும்புத்துண்டுக்காக இவர்கள் காத்துக்கிடக்கவேண்டியிருக்கிறது. மக்களை தங்கள் உரிமைகளுக்காக போராடவைப்பதும், அரசியல் பயிற்சி கொடுப்பதுமே இன்றைய இந்த சீர்கெட்ட நிலைக்கான ஒரே தீர்வு. இதற்கு முதல் தேவை புரட்சிகர சனநாயக சக்திகள் ஓரணியில் இணைவதுதான்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிராக காலங்காலமாக நடத்தப்பட்டுவரும் ஒடுக்குமுறைக்கு இன்னொரு சாட்சியம் தனம். இதுபோன்ற அநீதிகளுக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டிய ஆசிரியர்களே அந்த அநீதியை இழைத்த ஆசிரியருக்கு ஆதரவாக ஒன்று சேர்ந்திருப்பதை எந்த சனநாயகவாதியும் ஏற்றுக்கொள்ளமாட்டான். மேலும், அதே பள்ளியில் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு வேறு யாராவது தான் தண்ணீர் ஊற்றி தரவ வேண்டும் என்ற வழக்கம் இருப்பதை அறிகின்றபோது நெஞ்சு கொதிக்கிறது. இவைகளை கண்டுகொள்ளாமல் குறுகிய பொருளாதார நலனுக்குட்பட்டு மட்டுமே செயல்படும் ஆசிரியர் கூட்டணியின் முடிவு வன்மையாக கண்டிக்கத்தக்கது.

எல்லோரும் எதிர்பார்த்தது போலவே இலங்கையில் சமாதான பேச்சுவார்த்தை முறிந்துவிட்டது. சந்திரிகாவை பொறுத்தவரை சமாதானம், அரசயில் தீர்வு ஆகியவைகள் வெறும் வார்த்தை ஜாலங்கள். அதை உண்மையிலேயே சாதிக்க வேண்டுமென்ற விருப்பமோ, அதற்கான அரசயில் நேர்மையோ அவரிடம் இல்லை. பேச்சுவார்த்தையின்போது அவர் ஒத்துக்கொண்ட நிபந்தனைகளுக்குக்கூட விசுவாசமாக இருக்கவில்லை. இந்த நிலையில் விடுதுலைப்புலிகள்தான் முதலில் பேச்சுவார்த்தையை துண்டித்து கொண்டனர் என்று தன்னை குற்றமற்றவளாக காட்டிக்கொள்ள முயலுவது வீண். புத்தமத இனவெறியர்களிடமிருந்து விடுபட்டு சமாதானத்திற்கான நேர்மையான, சனநாயகமான அணுகுமுறை மட்டுமே ஈழப்பிரச்சனைக்கு தீர்வாக அமையும். இதற்கு சிங்கள உழைக்கும் மக்கள்தான் இப்பிரச்சனையை கையிலெடுக்க வேண்டும்.

படிப்பகம்

padippakam

MAKKAL THALAM R. No. TN TAM 3291/94.

# அவனுடைய இரண்டாவது வாழ்க்கை

இன்று என் கொல்லைச்
செடி கொடிகளில் சிந்திக் கிடக்கிறான்.
என்னிடம் எதிர்க்கேள்வி போடும் போது
அவன் ஆட்டும் தலை
நூறு நூறு இலைகளாகிவிட்டது.
அன்று
அவன் பேசாத பேச்சுகளில் கூட
அரசியல், படம், ஆட்களின், வாடை கிடையாது.
செடி கொடி மரங்களை அவன் சொற்கள்
வளர்க்கும்.
அவன் சொற்களை அவை வளர்க்கும்
காலையில்
"சூரியத் தோட்டத்தில் ஒளி கிள்ளி வந்து
கண்களில் சூட்டிக் கொள் என்பான்!"
இரவில் கூட
அவன் நாக்கு நட்சத்திரங்களைப்
பயிரிடும்
பூக்களைப் பற்றிப் பேசிப் பேசி
வாக்கியங்களில் அப்படி குரு வாசம்!
பழங்களில்
சுளைகளின் இடைவெளிகளில்
கண்ணாம் மூச்சி ஆடப்போகும் அவன் அறிவு
நிச்சயமாக
அவன் சுவாசப்பைக்குள் போய்வந்த
மூச்சோடு
நேர்காணல் நிகழ்த்தினால்
வனங்களைச் சுற்றி வந்த அனுபவத்தை
விவரிக்கும்.
படைப்புத் தொழிலுக்குப்
பச்சைதான் நிறம் என்பான்!
ஆன்மாவின் இரத்தமும் பச்சைநிறம் என்பான்!

எங்கிருந்தாகிலும்
மரம் வெட்டும் ஓசை கேட்டால்
பதறும் அவன் உடம்பு
விறகு வண்டிகள் வீதியில் போனால்
எழுந்து நின்று
மவுனாஞ்சலி செலுத்துவான்.
ஓரடி வளர்ந்த
பூச் செடிக்குள் போய் ஓரடியாய்ச்
சுருங்கி, உட்கார்ந்திருப்பான்.
நடுவகிடு எடுத்த
தென்னை மட்டைகளின்
உச்சி மோந்து 'என்ன அருமை பார்த்தாயா?'
என்பான்
"உன் கவிதைக்குள் இருந்து
ஒரு குயிலை அனுப்பு
ஒரு மரத்தில் இருந்து நான் கிளையாய்
வெளியே வருகிறேன்"
ஒரு காலை நேரம் என்னிடம்
சொன்னான் இப்படி!
மூலிக் காகிதமாய்க் கிடந்த
என்வீட்டுக் கொல்லையில்
பச்சையை எழுத இச்சை கொண்டவன்
ஒரு பிற்பகல்
விதைகள் வாங்கிவரச் சென்றான்...
பத்துச் செடி கொடிகளாய்த் தானே திரும்பிவரும்
வேகத்தோடு!
'பல்லவன்' மோதிப் பாதையில் கிடந்தான்
அவன்
மிதி வண்டியின்
கடைசிச் சுழற்சி, இரத்தத்தில்
உறைந்து போய் நிற்க,
பணப்பை, பாக்கிச் சில்லறைகளோடு
ஏதோ ஓர்
கொத்தும் கழுகின் அலகுகளில் சிக்க
அவனுடைய
இறுகிய கைப்பிடியில்
விதைப் பொட்டலம்...
முளைக்கத் துடித்துக் கிடந்தான்
இப்போது
எனது கொல்லையில்
அவனுடைய இரண்டாவது வாழ்க்கை!

- தமிழன்பன்

படிப்பகம்